# கன்னி விதவையான கதை

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம்.ஏ.

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே
சென்னை - 600 001

RangaRakes tamilnavarasam

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கன்னி விதவையான கதை | — | 9 |
| 2. | திட்டுத்துணி | — | 30 |
| 3. | நாடோடி | — | 41 |
| 4. | யார்மீது கோபித்துக் கொள்வது? | — | 49 |
| 5. | ஒரு முட்டாளின் கதை | — | 68 |
| 6. | சிங்களச் சீமாட்டி | — | 87 |


RangaRakes tamilnavarasam

# 1

# கன்னி விதவையான கதை

''இப்படி மாறிவிடுவான் என்று நான் கனவிலேகூட நினைக்கவில்லை. எண்ணுகிறேன்; எண்ணும்போதே மனம் எரிமலையாகிறது.''

''யாரிட்ட போதனையோ, இப்படி மாறிவிட்டான். தங்கமான குணம் எப்படித்தான் மாறிவிட்டதோ தெரிய வில்லை.''

''போதனையிட்டார்கள் எவரோ என்று ஏன் பிறர் மீது பழி சுமத்துகிறாய். எடுப்பார் கைப்பிள்ளையா இவன்? விவரம் தெரிந்தவன், நாலு பேருக்கு அறிவு புகட்டக்கூடியவன்.''

மகன், சிலகாலமாகத் தன்னிச்சையாக நடந்து வருகிறான். ஏதேனும் சொன்னால் தட்டி நடக்கிறான்; கட்டிக்கரும்பென இனித்திடும் சொல்லினனாக இருந்த வன். இப்போது பேசுவது எட்டி போலிருக்கிறது என்று தாயும் தந்தையும் கவலைப்படுகிறார்கள்.

தாய் படும் கவலையில் வெறுப்பின் அளவு குறைவு; பாசத்தின் அளவு அதிகம்.

தந்தையின் கவலையிலே கோபம் அதிக அளவு. பாசம் அடியோடு போய்விடவில்லை. ஆனால் ஓரளவு மங்கி இருக்கிறது.

''இறக்கை வந்ததும், அதது அததன் போக்கிலே போக வேண்டியதுதானே. முன்பு போல இல்லையே என்று முணுமுணுப்பது என்ன நியாயம். அவன் என்ன,

RangaRakes tamilnavarasam

இன்னமும் துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவமா? நாலு பேர் பார்த்து மெச்சத்தக்க நிலையில் இருக்கிறான். எது சரி, எது தவறு, என்று அறிந்து செயலாற்றும் பக்குவமா அவனுக்கு இல்லை! பெற்றோமே, என்றால், பெற்றீர்கள்! அதனால்? முந்தானை முடிச்சியிலேயா இத்தனை பெரிய பிள்ளையைக் கட்டிப்போட்டு வைத்திருக்க முடியும்? வீணான முயற்சி! அப்பா பார்த்துச் சொன்னால்தானா அவனுக்கு ஐந்தும் மூணும் எட்டு என்பது புரியும்? விவரம் தெரிந்தவனாகிவிட்டான்! அதனால், பல காரியங்களைத் தானே செய்கிறான். தவறு என்ன? மாறிவிட்டானே, மாறிவிட்டானே என்று ஆயாசப்பட்டுக் கொள்கிறார்களே பெற்றோர், பொருளற்ற முறையில்!''

அந்தக் குடும்பத்துடன் நெடுங்காலத் தொடர்பு கொண்டு, நலம் நாடித் தந்துவரும், உறவினர் பேசுகிறார், இதுபோல....என்னமோ, அவன் கெட்டுவிட்டான் என்று கவலைப்படுவதுபோன்ற முறையில், பெற்றோர், பேசக்கேட்டு.

''தெரியுமய்யா, விஷயம்? என் மகன் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான் என்று பெருமையடித்துக் கொள்வாரே குத்தாலலிங்கம், இப்ப என்ன தெரியுமோ நடப்பது. மகன், ஏட்டிக்குப் போட்டி! ஆமாம், இவர் ஒரு பேச்சுப் பேசினா, ஒன்பது கொடுக்கறான்! மனுஷன் தவியாய்த் தவிக்கிறான். வேணும்யா! என் மகன், என் பேச்சை, வேதமா மதிப்பான், மத்த மத்த வீட்டுப் பசங்கபோல அல்ல. குனிந்த தலை நிமிராதவன், கட்டுக்கு அடங்கியவன், என்னைக் கேட்காமல், எந்தக் காரியமும் செய்யமாட்டான் என்று பெருமை அடித்துக் கொண்டிருந்தாரல்லவா! இப்போ, படாத பாடு படுகிறான் மனுஷன்! எங்கே போயிட்டப்பா, இந்த நேரத்துக்கு வர்ரேன்னு கேட்டானாம். குத்தாலம், பழைய நிலைன்னு நினைத்துவிட்டு. மகன் ஒரு முறை முறைச்சி இருக்கிறான். 'நான் இப்ப ஒண்ணும் தப்பாப் பேசிவிடவில்லையேடாப்பா....எங்கே போயிருந்தேன்னு தான்

RangaRakes tamilnavarasam

கேட்டேன்'னு, குழையறான் மனுஷன். மகன், 'போயிருந்தேன் உங்க பாட்டன் வீட்டுக்கு' என்று கூறிவிட்டு, சிகரெட்டை எடுத்துப் பத்தவைத்திருக்கிறான்! மனுஷன் என்ன ஆவான். உள்ளே ஓடிப்போயி, கட்டில் மேலே படுத்துக்கிட்டு, தலைதலைன்னு அடிச்சிகிட்டிருக்கறான்.''

இந்தக் குடும்பத்தோடு, தொடர்பு கொண்டவன்—ஆனால், நல்ல எண்ணத்துடன் அல்ல—பொறாமையுடன் பழகி வந்த முனியாண்டி பேசினான் இதுபோல.

''கவலைப்படாதிங்க. எல்லாம் கிரஹத்தோட கோளாறு. சூரியன் சரியான இடத்திலே இல்லை. அதனாலேதான் பிள்ளையாண்டான், நெருப்பை அள்ளிக் கொட்டறான், பேச்சிலே. நம்ம மகனா இப்படி மாறிவிட்டான் என்று நீங்க கதறிண்டிருக்கேள்—அவனா மாறிவிட்டான்! கிரஹம், அவனை அப்படி மாற்றிவிட்டது.''

இது நல்லதுக்கும் பொல்லதுக்கும் ஜோதிடம் பார்த்துச் சொல்லும் குடும்பப் புரோகிதர் குருமூர்த்தி தீட்சிதருடைய திருவாக்கு. எந்தக் காரியத்துக்கும், யாராவது ஒரு மனிதரைப் பொறுப்பாளியாக்கிவிட்டால், பல தொல்லை, பல சங்கடம். அதனாலே, எதனையும், கிரஹங்களின் பேரிலே தூக்கிப் போட்டுவிட்டு, நிம்மதியாக இருப்பவர்; நல்ல வருமானமும் கூடத்தான்!

''மாறிவிட்டான்! மாறிவிட்டான்! மகன் முன்போல இல்லை! சொன்ன பேச்சைக் கேட்பதில்லை'' என்று முணு முணுத்துக்கொண்டு கிடக்கிறாராம். படட்டும், படட்டும்! படவேண்டும் என்றுதானே, நான் இப்படி இருந்து வருகிறேன். எதை எப்படிச் செய்தாலும், அவருக்குத் தெரியாதா? எல்லாம் சரியாகத்தான் செய்வார். எதற்கும் ஒரு பொருள் இருக்கும் என்றுதான், இவ்வளவு காலமாக நம்பிக் கிடந்தேன். கிழிந்த கோட்டைத் தாண்டாதவன் என்று பெயரெடுத்தேன். என்ன கண்டேன், பலன்? ஊருக்கெல்லாம், நீதி போதிக்கும் இந்த மனிதர், செய்த அக்ர

RangaRakes tamilnavarasam

மத்தைக் கண்டு, நான் இரத்தக் கண்ணீரல்லவா வடித்தேன்.

பேராசை கூடாது என்பார் பெரிய வேதாந்தி போல! ஆனால் அந்தப் பேராசை காரணமாகத்தானே, பேய்ச் செயலில் ஈடுபட்டார். அவர் செய்யும் காரியம் யாவும், நல்லதாகத்தான் இருக்கும் என்று நம்பிக்கிடந்தேன். வயது இருபது ஆகிறது. என்றாலும், அப்பன், போடு தோப்புக் கரணம் என்றால், எண்ணிக்கொள் என்று கூறுகிறான், ரோஷமற்று, இந்த ரங்கன், என்று நண்பர்கள் கூடக் கேலி பேசுவார்கள். 'போங்கடா, வீட்டுக்கு அடங்காத வெட்டிப் பசங்களா!' என்று நான் வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பேன். அப்படி நம்பிக்கிடந்தேன் நான். இவர் செய்த காரியம், சரியா? தர்மமா? நியாயமா? ஒரு வார்த்தை சொன்னாரா, என்னிடம்? உனக்குச் சம்மதம்தானாடா என்று கேட்டாரா? நானே, வலிய சென்று, 'அப்பா! வேண்டாம் இந்தக் காரியம்' என்று கெஞ்சினேன்—என்ன சொன்னார். நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து போ! இஷ்டப்பட்ட உடை வாங்கிக் கொள்' என்றார். விளையாட்டுப் பருவமா எனக்கு? விவரம் தெரியாதா? என் பேச்சிலே, அறிவு இருக்காதா? நியாயம் கிடைக்காதா? இதுவரையில் நமது செயலை ஏனென்று கேட்டதில்லை. என்ன காரணமோ, இது மட்டும் பிடிக்கவில்லை. இந்த ஒரு முறை, இவன் விருப்பப்படி நடப்போம் என்று நினைத்தாரா? செய்திருந்தால், இவருடைய அந்தஸ்தா கெட்டுவிடும்? மகன் மனம் என்னபாடு படுகிறதோ என்றெண்ணிப் பாராமல், என்னை மரப்பொம்மை என்றெண்ணிப் பட்டுச் சட்டைதைத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னார். துணிந்து, 'உனக்கு இதுதான்! உண்ணலாம், உருசியாக! உடுக்கலாம், அழகாக! மற்ற விஷயத்தில், தலையிடாதே!' என்றல்லவா பொருள் அதற்கு! அன்றுதான் நான் மாறினேன். 'மாறிவிட்டேன், மாறிவிட்டேன்' என்கிறார்; மறுக்கவில்லை. மாறித்தான் விட்டேன். ஆனால், என்னை

RangaRakes tamilnavarasam

மாற்றியது அவருடைய போக்கு, வேறு எதுவுமே இல்லை'' ரங்கன், கோபத்துடன் பேச்சைத் துவக்கிச் சோகத்துடன் கலந்துவிடுகிறான். கோபம், அவனை மாற்றிவிட்டது. கோபத்துக்குக் காரணம், தந்தையின் போக்கு, ரங்கன் மனதுக்கு, நியாயமல்ல என்று தோன்றிய காரியத்தை அவன் தடுத்தும், குத்தாலலிங்கம் செய்ததுதான், அவனுடைய கோபத்துக்குக் காரணம். அந்தச் செயல், ரங்கனுடைய தங்கையின் திருமணம். செல்விக்கு, வயது, அழகு, குணம், எனும் எதிலும் துளியும் பொருத்தமில்லாத சோமசுந்தரம், கணவனானார்—அவருக்கு ஆலையுடன் ஆறேழு இலட்சம் பெறுமானமுள்ள சொத்து இருந்த காரணத்தால்.

செல்விக்குக் கணவன் அந்த முதியவனா!

அழகுச் சிலைக்கு மணாளன், அந்த ஆள் விழுங்கியா!

புத்தம் புது மலரைப் புதை சேற்றில் வீசுவதா!

அதை நினைக்கும்போதே, ரங்கன் மனம், கொதித்தது.

அந்தக் கொதிப்பே, அவன் உள்ளத்தில், இருந்து வந்த கட்டுக்கு அடங்கிடும் தன்மை, தந்தையிடம் இருந்து வந்த பந்தம், பாசம் எனும் பொன்னை உருக்கித் தள்ளிவிட்டது. கண்ணீராய் அவ்வளவும் வெளியே வந்ததனால், ரங்கன் மனதினிலே, பொன் இல்லை, மாறிவிட்டான்!!

ஒரு சம்பவம்—அவனை மாற்றிவிட்டது.

நாம் செய்த காரியமே, ரங்கனை மாற்றிவிட்டது என்று குத்தாலலிங்கம் ஒப்புக் கொண்டாரா? இல்லை!

ஏன்?

அவர், ரங்கன் மாறிவிட்டான்—யாரோ கெடுத்துவிட்டார்கள்—ஐயர் சொல்கிறபடி, கிரஹத்தில் வேலை

RangaRakes tamilnavarasam

யாகக்கூட இருக்கலாம் என்றெண்ணிக் கிடந்தாரே யன்றித், தன் செயலே, மாறுதலுக்குக் காரணம் என்று அறியவில்லை.

தந்தை அல்லவா! அதனால், தவறு, மகன்தானே செய்யமுடியும் என்று எண்ணினார்.

''யார்தானய்யா மாறவில்லை. எல்லோரும் அப்படித் தான். அவரவர்கள் மாறி இருப்பது அவரவர்க்குத் தெரிவதில்லை. மற்றவர் மாறினால்தான், கண்ணுக்குச் சட்டென்று படுகிறது.''

ரங்கன், தனக்கு மெத்தவும் வேண்டிய உறவினரிடம் கூறுகிறான் இதுபோல. உண்மை அவன் பேச்சில் தொக்கி இருப்பதை, அவர் உணருகிறார்; உரைக்கவில்லை.

''அப்பா மட்டும் என்ன, மாறாமலா இருக்கிறார்? மாப்பிள்ளை வருகிறார் என்றால், குழைகிறார்; குளறு கிறார். முன்பு அப்படியா, அவர் இருந்தார்? என்னைக் கண்ட உடன், ஏன் அவருக்கு, முகச் சுளிப்பு! எல்லாம் நானும் அறிவேன்'' என்று பேசுகிறான் ரங்கன், கோபம் குறைந்து சோகம் மேலிட்ட நிலையில்.

''என்றைக்காவது ஒரு நாள், என் செயலுக்கான காரணத்தை அவனே அறிந்து கொள்வான். அன்று என்னை யும் அவன் அறிந்து கொள்வான். சின்னஞ்சிறுவர்க்கும் மிக எளிதில் விளங்கிடும், பொதுவான நீதியுமா, நானறி யாதிருப்பேன். என்னமோ என் செயலின் காரணம் காணா மல், என்னை வெறுத்தான். இருக்கட்டும். மாறிவிட் டான் என்றாலும், மகன்தானே! அதிலென்ன மாற்றம்?'' என்று பேசுகிறார் குத்தாலலிங்கம்.

இத்தனை மாறுதல்களுக்கும் எந்தச் செல்வியின் திருமணம் காரணமாக அமைந்ததோ, அந்தச் செல்வி, மாறாமலிருந்தாளா?

கூண்டு நோக்கிப் பூனை வருவது கண்டு, அலறிக் கூச்சலிட்ட கிளியானாள்—அதுநாள்வரையில் வட்டமிடும் வானம்பாடியாகத் திகழ்ந்த செல்வி.

'கிளிபோல இருக்கிறாள்—கிழவன் அதிர்ஷ்டக்காரன்' என்றனர் பலரும்—சிறப்பாக, வாலிபர்கள்.

செல்வி, கிளியாக இருந்துவிடவில்லை. நெடுநாட்கள்.

புலியானாள்! ஆமாம்! நடக்கக் கூடாதது நடந்து விட்டது. இனி? கண்ணீர் என்ன செய்யும்? பலியிட்டார் கள் என்னை நெஞ்சில் ஈரமின்றி. இனி எவருக்கும் நான் எதற்கு, இனியவளாய் இருக்கவேண்டும்? நான், ஓர் சீமாட்டி! சீமாட்டியாக்கப்பட்டுவிட்டேன்! எனவே, சீற வேண்டும், ஏழை எளியோர், எடுபிடி, இவர்களிடம்! என் கணவர் என்ற பெயர் சுமக்க, இவர் கொடுத்தார். இந்தச் செல்வம். இதை என் விருப்பப்படி செலவிட, முழு உரிமை எனக்குண்டு! இந்த எண்ணம், அந்தக் கிளியைப் புலியாக்கிற்று. சீமானோ, வேதாந்தியாகிக் கொண்டு வந்தார் வேகமாகவே.

பொருத்தமற்ற மணம் நடைபெற்றதால், மனம் புண்ணாகிப்போயிருக்கும், கண்ணாடிக் கன்னத்தில், குழி கள் விழுந்துவிடும். கண்ணில் ஒளியே போய், நீர் நெருப்பு நிறைந்திருக்கும், மேனி கருத்திருக்கும், பெருமூச்சு மிகுந் திருக்கும் என் செல்விக்கு, என்று எண்ணினான்; ஏக்க முற்றான் ரங்கன்.

செல்வியைக் காணச் சென்றான், சில மாதங்களுக் குப் பிறகுதான்.

ஒருகணம்தான், அவள் விழியில் கலக்கம்—உடனே அது மறைந்தது. கலகலவெனச் சிரிக்கிறாள். கைதட்டி ஆட்களை அழைக்கிறாள். எடு 'பாக்கார்டு' என்கிறாள். 'ஏனண்ணா கடற்கரைக்கா?' என்று கேட்கிறாள். இது

RangaRakes tamilnavarasam

ஜெய்பூர், இது தில்லி, இது காசி, இது ஜப்பான், என்று, அங்கு உள்ள பொருள்களின் பிறப்பிடம் கூறுகிறாள். பேசாமடந்தையோடி என்பார்கள் செல்லியை, முன்பு! இப்போது பேசவிடமாட்டேனென்கிறாள் மற்ற எவரையும். செல்லியின் இந்த மாறுதல், ரங்கனுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

நெடுநாட்களுக்குப் பிறகுதான், தாய்க்குலம், தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தாங்கிக்கொள்வதிலே, தனித்திறமை கொண்டது என்பது அவனுக்குப் புரிந்தது.

நெடி வேறு, மணம் வேறு அல்லவா? மணம், மெள்ளக் கிளம்பும், வேகமின்றிப் பரவும். ஆனால் நீண்ட நேரம் நிலைத்திருக்கும். மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கும், நெடி. சடுதியில் கிளம்பும், துளைக்கும், பரவும், மிக விரைவிலே மடிந்துபோகும்.

கோபம், நெடி போன்றது. கொப்பளிக்கும்! துளைக்கும்!! எனினும் மடிந்துபோகும்—விரைவிலா, நீண்ட காலத்துக்குப் பிறகா என்பது இயல்புக்குத் தக்கபடி.

மணம் போன்றது, பொறுத்துக் கொள்ளும் பண்பு. தாங்கிக் கொள்ளும் இயல்பு! எளிதில் கிடைக்காது. கிடைத்தால் சடுதியில் மடியாது. புலியாக இருந்த செல்லி கோப நெடியைக் கொட்டிவிட்டுப் பிறகு பொறுமையின் இருப்பிடமானாள்.

''இப்படி, என் செல்லி மாறிவிடுவாள் என்று நான் எண்ணிடவே இல்லை. புரண்டு அழுதிடுவாள்! தூற்றுவாள் எம்மை எல்லாம் என்று எண்ணி இருந்தேன். இன்றோ, இடர் ஏதும் காணாதாள்போல், இன்முகம் காட்டுகிறாள். என்னையும் தேற்றுகிறாள். எங்கிருந்து கிடைத்தது இந்த மாற்றம்? எப்படி, செல்லி மாறிவிட்டாள்?''

RangaRakes tamilnavarasam

ரங்கன், இதுபோல எண்ணி எண்ணிப் பார்க்கிறான், புரியவில்லை.

''செல்வி! என்னமோம்மா! நீ மகிழ்ச்சியாக இருந்தால், அது போதும் எனக்கு. வீட்டை விட்டுப் புறப்படும்போது, விம்மினாய். உன் வாழ்வு பாழாக்கப்படுகிறது. பாவி நான். அது தெரிந்தும், தடுக்கும் திறனற்றுக் கிடக்கின்றேனே என்றெண்ணித் துக்கப்பட்டேன். இன்று நீ இங்கு, எக்குறையுமின்றிச் சிரித்து மகிழ்ந்திருக்கும் நிலை காண்கிறேன்.''

''அண்ணா! நான் மாறிவிட்டேன் என்கிறீர்கள். அதுதானே! அது கண்டு உனக்கு மகிழ்ச்சிதானே, அண்ணா!''

''மட்டற்ற மகிழ்ச்சி செல்வி!''

''மாறுதல் என்பது அண்ணா! தவிர்க்க முடியாதது; இயற்கை.....''

''அடேயப்பா! பெரிய ஆராய்ச்சியாளர் போலப் பேசுகிறாயே.....''

''என் பேச்சில் என்ன உண்டு. அதோ, அவரிடம் பேசிப் பாருங்கள் தெரியும்.''

செல்வியின் கணவன், வந்து சேர்ந்தார். கோபமும் வெறுப்பும் மின்னல் வேகத்தில் வந்தது. ஆனால் சோமசுந்தரத்தின் சாந்தம் தவழும் முகத்தைக் கண்டதும், ரங்கனுடன் இருக்க மறுத்துவிட்டது, கோபம். வணக்கம் செய்தார். அவர்! பிறகே, ரங்கனுக்கு, வணக்கம்கூற மறந்தோமே என்ற நினைவு வந்தது.

''நான் மாறிவிட்டேனாம், அண்ணா சொல்கிறார்''

''அவரும்தான் மாறிவிட்டிருக்கிறார்.''

RangaRakes tamilnavarasam

''தம்பி! எல்லோரும்தான்! என் பேச்சிலே முன்பு இருந்த முடுக்கு இருக்காது, தேவையில்லை, வழக்கற்றுப் போய்விட்டது. முன்பு, பணம் சேர்க்கும் வெறி. ஆலையில் உள்ளவர்களைக் கசக்கிப் பிழிய வேண்டும். அதை அவர்கள் தெரிந்து கொள்ளவும் கூடாது. உருட்டும் விழியும் மிரட்டும் பேச்சும் தேவைப்பட்டது, ஒவ்வொரு நாளும். இப்போது அது தேவையில்லை, ஆலையைக் கூட்டுறவு அமைப்பு ஆக்கிவிட்டேன். தொழிலாளர்களே கவனித்துக் கொள்கிறார்கள். ஆகையால், கோபப் பேச்சு, உருட்டல், மிரட்டல், என்னிடம் இல்லை.''

''முகத்திலேகூட ஒரு புதிய பொலிவு....''

''ஆமாம், தம்பி! கனிவு கண்களில் என்றுகூடக் கூறுகிறார்கள். ஏன் செல்லி! நீ கூடச் சொன்னாய், ஒரு நாள்.''

''ஒருநாள் மட்டுந்தானா சொன்னேன்.....''

''தம்பி! அழிப்பதையே வேலையாகக் கொண்டது புலி! கூர்ந்து பார்க்க வேண்டும். எங்கு இரை கிடைக்கும், எப்பக்கம் பாயவேண்டும் என்று. இரை கண்டதும் தாக்க வேண்டும், தாக்குவதற்கு ஒரு வேகம் வேண்டும், அந்த வேகம் பெறக் கோபம் வேண்டும், அந்தக் கோபம், அதன் கண்களில் கொப்பளிக்கும். நெருப்பாக முயலின் கண்களைப் பார்க்கிறாயல்லவா, தம்பி! ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லை—எனவே, கண்களிலே கடுமை இருப்பதில்லை. ஒருவர்க்கும் ஒரு தீங்கும் நாம் செய்யாதிருப்பினும் நமக்குத் தீங்கிழைக்கப் பல உண்டு இங்கு என்ற எண்ணம், முயலுக்கு அந்த எண்ணம், அதன் அழகிய கண்களில் ஒரு மிரட்சியைப் புகுத்துகிறது. அதிலே ஓர் தனி அழகு இருக்கிறது. நான் வேங்கைபோல இருந்தேன், இப்போது முயல்!''

''சுவையாகப் பேசுகிறீர்கள்.....''

RangaRakes tamilnavarasam

''நிறைய சிந்திக்கிறேன், தம்பி! ஒவ்வொன்றையும் ஆராய்கிறேன். நான் கொண்ட நினைப்புகள், செய்தவைகள், பெற்ற வெற்றிகள், அடைந்த ஏமாற்றங்கள், கிளம்பிய எதிர்ப்புக்கள், நினைத்து நினைத்துப் பார்ப்பேன், விளக்கம் கிடைக்கிறது, ஒவ்வொன்றுக்கும்.''

''இலாப வேட்டையாடிக் கொண்டிருந்தவர், இப்படிப்பட்ட அறிவாளராக மாறிவிடுவார் என்று எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.''

''தம்பி! மாறுதல் என்றால் என்ன பொருள்? என் நிலை, நினைப்பு, நடவடிக்கை முன்பு இருந்தது போல இல்லை என்பதுதானே. முன்பு இருந்ததுபோல இல்லை என்பது மட்டும் அல்ல, முன்பு இருந்தது போல இல்லை என்று உனக்குத் தோன்றுகிறது. அதுதான் முக்கியம், தம்பி! நான், மாறி இருக்கிறேன்....அதை அறிந்து கொள்ளத் தக்க பக்குவமான மாறுதல் உன்னிடமும் ஏற்பட்டிருக்கிறது. தம்பி! எவரும், எளிதாக அறிந்து கொள்ளத்தக்க மாறுதலும் உண்டு; கூர்ந்து பார்த்து மட்டுமே புரிந்து கொள்ளத்தக்க மாறுதலும் உண்டு. தோற்றத்திலே உள்ள மாற்றம் எளிதில் அறியத்தக்கது. உள்ளத்திலே ஏற்பட்டிருப்பது, பக்குவமாக, அக்கறையுடன், தக்க முயற்சி எடுத்துக் கொண்டாலொழியத் தெரிந்து விடாது. என் தோற்றத்தில், நீ காணும் மாற்றம், நீ விரும்பத்தக்கதாக இருந்தால்தான், என் உள்ளத்திலேயும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிந்து கொள்ள முயற்சி எடுத்துக்கொள்வாய். அப்படியின்றிக் கொத்து மீசையும், கோவ்வைபோல் சிவந்த கண்களும் கொண்ட தோற்றத்துடன், நான் இருந்தால், அருவருப்புத்தானே ஏற்படும் உனக்கு. பிறகு, நீ என்னை அணுகிப் பேசுவாயா? என் உள்ளத்திலே ஏற்பட்டுள்ள மாறுதலைத்தான் காண்பாயா! வெளித் தோற்றத்துக்கு ஏற்றபடியேதான் உள்ளத்தின் தன்மையும் இருக்கும் என்று கூற முடியாது. ஆனால், வெளித் தோற்றம், உள்ளத்துடன் உறவாட வேண்டும் என்ற ஆவ

RangaRakes tamilnavarasam

லைத் தரத்தக்க விதமாகவேணும் இருக்கவேண்டும். வீட்டுக்கு ஜன்னல்போல என்று வைத்துக் கொள்ளேன்.''

''அண்ணா! இவர் பேசத் தொடங்கிவிட்டால், முடிவே இருக்காது.....''

''தம்பி! இப்படிச் செல்வி பேசுவதற்கு, இரண்டு, இல்லை இல்லை, மூன்று காரணங்கள் இருக்கலாம். ஒன்று, என் உள்ளத்தைச் செல்வி அறிந்து கொண்ட தாலே. மீண்டும் அதுபற்றிய பேச்சைக்கேட்க வேண்டிய தில்லை என்று நினைக்கலாம். அல்லது என் உள்ளம் எப்படி இருந்தால் என்ன, என்ற அக்கரையற்ற தன்மை இருக்கலாம். அல்லது, உனக்கு அந்த அக்கரை இருக்கிறதா என்று பார்க்க இப்படிப் பேசி இருக்கலாம்.''

''செல்வி! நீ மாறிவிட்டதற்குக் காரணம் இப்போது புரிகிறது.''

''என்ன? செல்வியை உட்கார வைத்துக் கொண்டு பாடம் போதித்து, மாற்றினேன் என்கிறாயா? தம்பி அவளால் நான் மாறினேன்! நான் மாறினதால், அவள்! மாறினாள்! மாறுதல் இருக்கிறதே, தம்பி, மிக மிகச் சுவை தருவது. ஒன்று மற்றொன்று ஆகிறது, ஒன்று டன் ஒன்று கலந்து புதிதொன்று ஆகிறது. ஒன்றே வளர்ந்து புதிய மாற்றம் கொள்கிறது. அதாவது, 'தம்பி' மாறுதல், வளர்ச்சியால் ஏற்படலாம். கலப்பால் ஏற்பட லாம். களைவதால் ஏற்படலாம். மாறுதல், வளர்ச்சி யால் ஏற்படலாம். மாறுதல் உண்மையானதாகவும் இருக்கலாம்; போலியாகவும் இருக்கலாம்.''

''அண்ணா! இவரிடம் பார்க்கும் மாறுதல்....?''

''மறந்துவிட்டேனே! மாறுதல், அதைக் காணு கின்றவர்களின் நோக்குக்கு ஏற்றபடிதான் தெரியும்; புரி யும். ஆலையிலே உள்ள பொறியில், ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் ஒலியைக் கொண்டே என்னால் கண்டு பிடித்துவிட முடியும்! இந்த இடத்திலே உள்ள

RangaRakes tamilnavarasam

உருளை தேய்ந்திருக்கிறது என்று கூறிவிடுவேன். பழக்கம் திறமையைக் கொடுத்தது, பயிற்சி பக்குவம் கொடுத்தது. செல்லிக்கு? மீட்டும் போதே, இன்ன நரம்புக்கு மேலும் முறுக்கு ஏற்ற வேண்டும் என்று தெரிகிறது.''

'மாறுதல், ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்வதை விடக் கடினம் அல்லவா, தோன்றியுள்ள மாறுதல், உண்மையா, போலியா என்று அறிவது.''

''அதை ஏன் கேட்கிறாய். போ! மிகக் கடினம். எது உண்மை, எது போலி என்று கண்டறியும் திறமை மட்டும் செம்மையாகக் கிடைத்துவிட்டால் உலகிலே இன்று உள்ள சங்கடங்கள் சரிபாதி இருக்குமிடம் தெரியாமல் போயேவிடுமே. எண்ணெயில் கலப்படம் இருந்தால், கண்டறிய விஞ்ஞானம் கருவி கொடுத்திருக்கிறது; உண்மை எது பொய் எது என்று கண்டறியும் கருவி, மெய்ஞ்ஞானம் என்கிறார்கள். அந்தக் கருவியே, இன்னம் செம்மைப் படவில்லை!! ஆனால், தம்பி! நம்மால் இயலாது என்று மட்டும் இருந்துவிடக் கூடாது. நிரம்ப முயற்சி வேண்டும். மாறுதலிலே நிலையானதும் உண்டு. நிலையற்றதும் உண்டு. மேகக் கூட்டம், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, எத்தனை எத்தனையோ வடிவமாக மாறுகிறது. உருவமாற்றம் ஒன்று, குணமாற்றம் மற்றொன்று. கபட சந்யாசி என்கிறார்கள் அல்லவா!''

''உங்களைக் கூடத்தான் சிலர் அதுபோலச் சொல்கிறார்கள்—''

''ஏன் சொல்லமாட்டார்கள், சந்தேகம்! காடேகிக் கடுந்தவம் புரிந்தவனெல்லாம் என்ன கதி ஆனான் என்று படித்திருக்கிறார்களே...அதனால் ஒரு பயம். சந்தேகம்... நேற்றுக்கூட, யாரோ ஒரு பேச்சாளர், ஆலைத் தொழிலாளிகளிடம் முழக்கமிட்டாராம் ''முதலாளி உருவத்தை மாற்றிக் கொண்டார். இப்போதுதான் உஷாராக இருக்க வேண்டும் என்று. உருவத்திலே மாறுதல் ஏற்படுவதால்,

அல்லது ஏற்படுத்திக் கொள்வதால் குணத்திலே மாறுதல் ஏற்பட்டே தீரும் என்று கூறிவிடமுடியாது.''

''குணம் மாறினால்தானே பலன்! வெறும் உருவம் மாறினால் என்ன பலன்?''

''ஆமாம்! யோசித்துப் பார்த்தால், தம்பி, பலன் தரும் மாறுதல், பொருளற்ற மாறுதல், எனும் வகைகள்கூடக் காணலாம். மூன்று சக்கர வண்டி பார்க்கிறோம், இரு உருளைகள், நான்கு உருளைகள், இந்த முறையிலே ஒரு மாற்றம் ஒன்று கூட்டினார்கள் என்றும் சொல்லலாம், ஒன்றைக் குறைத்தார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் அது பயன் தரும் மாறுதலாகிறது. நாமும் ஏதாவது மாறுதல் செய்வோம் என்று எண்ணிக்கொண்டு மோடாரில் உள்ள நாலு சக்கரங்களிலே ஒன்றை எடுத்து விட்டால்? பயன் கெடும். பொருளற்ற மாறுதலை, நான் கூறப்போவதில்லை. நீ இங்கு இருக்கும் நாலு நாட்களில், செல்வியின் 'ஜடை'யை மட்டும் கவனித்து வந்தாலே போதும்—கஷ்டப்பட்டுப் பொருளற்ற மாறுதலைத் தேடிடும் போக்கு நன்றாகப் புரிந்துவிடும்.''

''உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லி விடுங்கள்—ஏன் குத்திக் காட்டுகிறீர்கள்.''

''செல்வியின் பேச்சு, மற்றொன்றைக் கவனப்படுத்துகிறது; நமக்காகச் செய்து கொள்ளும் மாறுதல், பிறருக்காகச் செய்து கொள்ளும் மாறுதல் என்று வகைபடுத்திக் கூடப் பார்க்கலாம். தவிர்க்க முடியாதது. தவிர்க்கக் கூடியது. எதிர்பார்த்தது, எதிர்பாராதது, என்றெல்லாம் வகைப்படுத்தலாம். மாறுதல் என்பதை, ஆலைக் கட்டிடத்திலே, இரண்டு நுழைவு வாயில்கள் உள்ளன. முன்பு ஒன்றுதான். ஏன் வீண் செலவு? தவிர்த்திருக்கலாமே என்று கணக்கு ஆய்வாளர் வாதாடினார். வண்டிகள் நிறைய வருவதால், இரண்டு வாயில்கள் இருக்க வேண்டி வருகிறது. அதனால் இவ்வளவு நேரம் மிச்சமாகிறது என்று எடுத்துக் காட்டினேன். ஒப்புக் கொண்டனர்;

நமது ஆலை வளர, வளர அதைச் சுற்றியுள்ள இடங்களின் அமைப்பு மாறும் என்பது எதிர்பார்த்தது; எதிர்பாராத மாறுதலும் உண்டு. இங்கேயே, ஆலையின் கழிவுப் பொருள் தேங்கித் தேங்கி, சுற்று வட்டாரத்துக் கிணற்று நீர் கெட்டுவிட்டது. இதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்திருந்தால், கழிவுகள் கேடு செய்யா முறையைத் தேடி இருப்போம். அடுத்த ஆண்டு வந்தால், இன்று கழிவுப் பொருள் தேங்கும் இடம், அருமையான காய்கறித் தோட்டம் ஆகிவிடுவது காண்பாய்! கழிவு என்பதே பொருட்களின் மாற்றத்தால் ஏற்படுவது. இனி அந்தக் கழிவும் வேறு பொருள்கள் கிடைக்க வழி செய்யப்போகிறது.''

''எது கிடைத்தாலும், அதிலே இலாபம் பெற முடிகிறது. இவரால் பாரேன் அண்ணா! கேவலம் கழிவுப் பொருள்—அது காய்கறித் தோட்டத்துக்குப் பயன்படும் என்று கண்டுபிடித்து, இலாபம் பெறப்போகிறார்.''

''செல்வி! ஒரு பொருளை, அதனால் கிடைக்கும் பயனுக்காக மட்டும் உபயோகப்படுத்தினால், போதுமா? இரும்பு, ஒரு பொருள்! ஆனால் வாள் வடிக்கிறோம், வேல் செய்கிறோம், பூட்டும் அதனால், சாவியும் அது கொண்டு, பொறிகள் அதனால், உழவுக்கருவிகள் அது கொண்டு.....எத்தனை பொருளுக்கு, இரும்பு பயன்படுகிறது....''

''முதலாளிகளின் இதயம்கூட, இரும்புதானாம்.. சொல்கிறார்களே......

''குறும்புக்காரி! இரும்பு இத்தனை கருவியாக மாறுகிறது, மாற்றப்படுகிறது, அந்த மாறுதலால் மனித இனம் எவ்வளவு பலன் பெறுகிறது. இரும்பைக் காய்ச்சி அடிக்கிறார்கள். பல பொருள்களாக வடிக்கிறார்கள். வெறும் இரும்பாக, அதன் வடிவத்தை மாற்றாமல் வைத்திருந்தால், என்ன பயன் பெற்றிருக்க முடியும்? இந்த வேடிக்கையைப் பாரேன், வெப்பம் பட்டால் பனி, நீரா

RangaRakes tamilnavarasam

கிறது, பயன்தரும் பொருளாகிறது. ஆனால் அதே வெப்பம் மேலும் சற்று அதிகமானால் நீர், ஆவியாகிப் போய்விடுகிறது.''

''பயன் இல்லாமல் போய்விடுகிறது.''

''அப்போதைக்குப் பயன் இல்லையே தவிர, ஆவி, பிறகு மேகமாகி, மழையாகி, பிறகு நீராக விழுகிறது.''

''தம்பி சொல்வதுதான் சரி. செல்வி! இயற்கை விசித்திரமான மாறுதல்களைச் செய்திடும், மாயாவி. விஞ்ஞானி என்றும் சொல்லலாம். வெப்பம், பனியை நீராக்குகிறது, வெப்பத்தில் போட்டு வைத்தால், உள்ளே உள்ள சாறு இழந்துவிடுகிறது, கன்று காளையாதல், மொட்டு மலராதல், குழவி இளைஞனாதல், பச்சோலை பழுப்போலையாதல், செடி மரமாதல் காண்கிறோம். மரம், விறகு ஆக்கப்படுகிறது! பழுப்போலை, எரிபொருள் ஆக்கப்படுகிறது. இல்லையா? கரும்பு, சாறாகி, பாகாகி, கட்டியாகி, பொடியாகி, மீண்டும் கரைந்து, பண்டத்துடன் குழைந்து பயன்படுகிறது. ஆற்று நீர் சேற்றில் கலந்தால் பருகுநீர் ஆகாது. பயன் குறைகிறது.''

''பாசனத்துக்குப் பயன்படும்.....''

''தம்பி சொல்வது உண்மை. பருகத்தான் பயன்படாது. பாசனத்துக்கு நல்லதாகும். ஆனால், ஆற்றுநீர், கடலில் கலந்தால் பருகு நீருமல்ல, பாசனத்துக்குமல்ல... கூடா நட்பு, கேடாய் முடிந்தது. ஆற்றோடு இருந்த போது அந்தத் தண்ணீர் பருகப் பயன்பட்டது; கடலுடன் சேர்ந்தது; பயன் கெட்டே போய்விட்டது.....மக்கள் கூடத்தான் அப்படி. பட்டணம் போனான்; மாறிவிட்டான்; பணம் சேர்ந்தது; மாறிவிட்டான், படித்தான் அதற்கேற்ப மாறிவிட்டான். அவனுடன் சேர்ந்தான். அதனால் மாறிவிட்டான் என்று பேசுகிறார்கள் அல்லவா! சூதாடும்போது, சுபாவமே மாறிவிடக் காண்கிறோம். நாலு நாள் பட்டினி! துரும்பாக இளைத்துவிட்டான்,

RangaRakes tamilnavarasam

ஆள் அடையாளமே தெரியவில்லை, அப்படி மாறிவிட்டான், என்கிறோம்.''

''சில வேளைகளில், பொருள் மாறுவதில்லை, மனம் தான் மாறுகிறது.

''ஆமாம், வாய்ப்புண் இருந்தால், பண்டம் பிடிப்பதில்லை, மாற்றம் பண்டத்தில் இல்லை. இவனிடம்! தென்றல் சுடுவதும், நிலவு காய்வதும் உண்டோ? இல்லை! ஆனால் விரகதாபம் கொண்டவர்களுக்கு, தென்றலும் நிலவும் மாறிவிட்டதாகத் தோன்றுகிறது. தென்றல் கொட்டுகிறது, நிலவு கொளுத்துகிறது என்கிறார்களாம். தம்பி! கல் சிலையாகிறது, சிற்பியால் சிலை! தெய்வமாகிறது, பூஜாரியால்! பூஜாரி புரட்டனாகிறான், சிலையை மீண்டும் கல்லென்று கூறிவிடுகிறார்கள், கவனித்தனையா?''

''சிலை தெய்வமாகிறது, பூஜாரியால் என்றீர்கள். இவ்வளவு பேசியான பிறகு, இதையும் கேட்டுவிடுகிறேன். செல்லிக்குத் தாங்கள் தெய்வமானது எப்படி? சிலை என்றுகூட அல்லவே. கல்லென்று அல்லவா, எண்ணிக் கலங்கினாள் செல்லி, கடுங்கோபம் கொண்டேன் நான்.''

''தம்பி! கல்லைத் தொடும்போது, கடினமாக இராமல், கனியுமானால், என்ன எண்ணமுடியும். அது போலத்தான், செல்லி, கல்லென்றுதான் என்னை எண்ணிக் கொண்டாள். அவள் எண்ணியதிலே தவறும் இல்லை. தன் வாழ்க்கை, அந்தக் கல்லிலே மோதிச் சுக்குநூறாகப் போகிறது என்றுதான் எண்ணிக்கொண்டாள். ஆனால், கல்லுருவம், கசிந்து கண்ணீர் மல்கி நின்றது நான்தான். கண்ணீர் பொழிந்து நின்றாள் செல்லி! என்னைக் கண்டதும் பயத்தால் அவள் உடல் நடுங்கிற்று. முகம் வெளுத்தது. நான், கசிந்துருகி நின்றேன். கல்லுருவமாகத்தான் இருந்தேன். ஆனால், செல்வியின் நிலையால், எனக்கு ஏற்



RangaRakes tamilnavarasam

பட்ட மாறுதல், நானே எதிர்பாராதது, தொட்டுத் தாலி கட்டினவன், எதையும் செய்ய உரிமைபெற்றவன், என்றெண்ணி அவள் நடுக்குற்றாள். கல்லுருவம் கண்ணீர் சொரிந்திடக் கண்டாள், நடுக்கம் குறைந்தது, என்னைப் பூஜித்தாள். என்ன சொல்லித் தெரியுமா.... உம் அப்பா! என்று அழைத்தாள்! அதைவிடப் பூஜைக்கு உரிய புனிதமான சொல் வேறு உண்டா? பணத்திமிரால் பல மாதர்களை மஞ்சத்துக்கு இழுத்து வரலாம், செல்வி போன்ற ஒரு பெண் மகளாக எனக்குக் கிடைப்பது என்றால், சாதாரணமா, சாமான்யமா....அவள் என்னைப் பூஜித்தாள்—அவளே எனக்கு வரம் தந்தாள்—என் மகள் ஆனாள். திடுக்கிட்டுப் போய் விடாதே. அவள் வாழ்வு பாழாக்கப்படுகிறதல்லவா, என்று கேட்பாய். அவளுக்கு நான் தடை ஏதும் விதிக்கவில்லை. மனதுக்கு ஏற்ற மணாளனைக் கொள்ள உரிமை அளித்தேன். அவள் தியாகத் திரு உரு! இன்றுள்ள சமூகம், இதை ஒப்பாது, உங்களுக்கு உள்ள உயர் இடம் சரியும், ஊர்ப்பழி வந்து சேரும், நான் உமது மகள்—கன்னிப் பெண்ணாகவே காலந்தள்ளுவேன் என்றாள். கன்னியாகத்தான் இருக்கிறாள். அந்தப் பெரும் கொடுமையைச் செய்ததை எண்ணி எண்ணி உருகினேன்....என் மனம் தூய்மை பெற்றது—மகத்தான மாறுதல் ஏற்பட்டது—மனிதனானேன்; மகளைப் பெற்றேன்.

''ஐயா! நீங்கள் மனிதரல்ல, தெய்வம்.....''

''தம்பி! நான் வெறும் கல்லுருவம்....செல்வி என்னை மாற்றி விட்டாள்.''''

''செல்வி.....வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லவில்லையே, இதுநாள்வரை......''

''இனியுங்கூடத்தான் அண்ணா! அவர் என் தந்தை, அவருக்கு மானக் குறைவு ஏற்படுத்தவா, நான் அவர் மகள் ஆனேன்.....''

RangaRakes tamilnavarasam

''செல்வி! இது தியாகத் திருத்தலம்.....வழிபாட்டு இடம்.....ஆனால் செல்வி! அப்பா, ஏன் இந்தக் காரியம் செய்யத் துணிந்தார்.....''

''என்னைக்கேள், தம்பி! நான் கூறுகிறேன். பணத்தின் சக்திபற்றிப் பேச்சுப் பலமாக நடைபெற்றது. என் நண்பர்கள் மத்தியில் எப்படிப்பட்ட நல்ல தகப்பனும், இக்கட்டிலே சிக்கிக்கொண்டால் பணத்துக்காக, கிழவனோ கொடியவனோ, எவனுக்கேனும் தன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பான் என்று நான் பந்தயம் கட்டினேன்—ஒரு இலட்சம்! ஆமாம்! எங்கள் பொழுதுபோக்கு, இப்படித்தான். திட்டமிட்டு வேலை செய்தேன். ஆலைச் சரக்குகளை விற்கும் உரிமையைப் பெற்றார், உன் அப்பா! என் ஏற்பாடு! அவருடைய சக்திக்கு மீறிய தொகைக்கு சரக்கு வாங்கிக் கிடங்கில் சேர்த்தார். என் தூண்டுதல்! மூன்று மாதம் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தால், இலாபம் மும்மடங்கு என்று ஆசை காட்டினேன், நம்பினார். மூன்றாம் மாதம் மலையென என் ஆலையில் புதுச் சரக்குகள்—விலை மலிவு! உன் தந்தை பராரியாகிவிடவேண்டும். அதுமட்டுமல்ல, கடன் திருப்பித் தரமுடியாத நிலை! மருந்துக்கடை மாணிக்க பூபதியின் மகனை, உனக்கு மணமுடிக்க ஏற்பாடு நடந்தது. கவனமிருக்கிறதா? என் ஏற்பாடு! மாணிக்க பூபதியின் மருந்துக்கடையே என்னிடம் அடகுவைக்கப்பட்டிருந்தது. எனவே அவர் பெண் தர இசைந்தார். திருமணம், நடைபெற்றதால், உன் அப்பாவுக்கு, பணமுடை தீரும், ஆபத்து விலகும். ஆனால் திருமணம் நடைபெற வேண்டுமானால், உன் அப்பாவின் கடன் நிலை வெளியே வரக் கூடாது. அதாவது என் வாய் அடைக்கப்பட வேண்டும்! என் நிபந்தனை? செல்வி! எனக்கு! கண்ணீர் பொழிந்தார்! நான் மனதைக் கல்லாக்கிக் கொண்டேன். ஒரு இலட்சரூபாய் பந்தயத் தொகை—அதுதான் என் மனக் கண்முன்! வேறு தர்மம், நியாயம், எதுவும் இல்லை. உன் தந்தை தத்தளித்தார், செல்வியைத் தர இசைந்

தார்.....சரக்குகளைத் திரும்ப எடுத்துக் கொண்டேன். உன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தேன்; நீதான் மறுத்துவிட்டாய்......''

''ஐயா! உடனே ஓடிச்சென்று என் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டாகவேண்டும்.....அவருக்கு நான் கொடுமை பல செய்துவிட்டேன்.''

''அவரே வருவார். தம்பி! டெலிபோனில் செய்தி கூறலாம்.''

''நான் அவரிடம் கோபித்துக் கொண்டதால், அவர் அலங்கோலமான நிலை பெற்றார்.''

''கவலைப்படாதே! செல்வி என் மகளாகிவிட்ட விஷயம் தெரிந்தால் அவரும் மீண்டும் பழைய நிலை பெறு வார்.''

குத்தாலலிங்கம் வெளியூர் சென்றிருந்தார். நாலு நாட்களுக்குப் பிறகுதான் ஊர் வந்தார். நேரே வீட்டுக் குச் செல்லவில்லை. சோமசுந்தரத்தின் வீடு வந்தார். அவரை வரவேற்று, அமரச் சொல்லிவிட்டு, டெலிபோன் எடுத்து சோமசுந்தரம், ரங்கனை அழைக்கலானார்.

மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியால் குத்தால லிங்கம் சோமசுந்தரத்தை, சுட்டார்! ஒருமுறை அல்ல, பலமுறை.

''ஒழிந்து போ! என் குடும்பத்தைக் கெடுத்தவனே, ஒழிந்து போ! சதி செய்து, என்னை நாசமாக்கின சண் டாளனே, ஒழிந்து போ! உன்னால், பெற்ற மகனுடைய அன்பை நான் இழந்தேன்....'' வெறி பிடித்தவர்போலக் கூவினார், குத்தாலலிங்கம்.

இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்த நிலையிலும், சோமசுந்தரத்தின் முகத்திலே புன்னகை தவழ்ந்தது.

செல்வி ஓடோடி வந்தாள். சோமசுந்தரம் குற்றுயி ராக வீழ்ந்து கிடக்கக் கண்டாள்.

RangaRakes tamilnavarasam

'அப்பா!' என்று அலறி அவர்மீது விழுந்து அழுதாள்.

'செல்வி!...' அழுகுரலில் அழைத்தார், குத்தாலலிங்கம்.

'அப்பா! அப்பா!' என்று சோமசுந்தரத்தின்மீது வீழ்ந்து செல்வி அழக்கண்டு திகைத்தார், குத்தாலலிங்கம்.

செல்வி, உடனே, எழுதக் காகிதம்....குத்தாலம். பயப்படாதே. என் வேலை முடிந்துவிட்டது....நீ, மணி அடித்தாய், அவ்வளவுதான்....துப்பாக்கியைக் கொடு.... என்று குற்றுயிராகக் கிடந்த சோமசுந்தரம் கூறினார்.

''மனம் உடைந்து தற்கொலை''

சோமசுந்தரன்.

என்று எழுதிக் கையெழுத்திட்டார்.

'அப்பா!' என்று துடித்து அழுதாள். சோமசுந்தரத்தின் உயிர் பிரிந்தது.

'மகளே!' என்று, செல்வியின் காலடி வீழ்ந்தார், குத்தாலலிங்கம்.

நாட்கள் பல சென்றன, குத்தாலலிங்கத்துக்கு முழு உண்மை தெரிய. ஆனால் அவர் மனம் குழம்பிவிட்டது.

''நல்ல மனஷன்தானய்யா, ஆனா, பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்தான். பேராசை. அந்தக் கிழவன் தற்கொலை செய்து கொண்டான். இவனுக்குப் பைத்தியம். எப்படி இருப்பான் தெரியுமா, பாவம், இப்படி மாறிவிட்டான்.

ஊரில், பலர் இதுபோலப் பேசிக்கொண்டனர்.

கன்னி செல்வி, விதவைக்கோலம் பெற்றாள்.

*14—1—61 திராவிடநாடு, பக்கம் 61—69

RangaRakes tamilnavarasam

# 2
# தீட்டுத்துணி

**கோ**டை வெயிலின் கொதிப்பு வெளியில் தலை காட்ட முடியவில்லை; தரையில் பொடி, காய்ச்சின ஈயம் போல் ஒட்டினது. எங்கிருந்தோ வந்த வறண்ட காற்று முகத்தில் அக்கினியைக் கொண்டுவந்து அப்புவதுபோல் இருந்தது. நீக்கிரோவும், மலைக்கும் அந்தக் கொளுத்தும் வெய்யலில்தான் அவள் மாரிலும், வயிற்றிலும் மாறி, மாறி அடித்துக்கொண்டு கதறினாள்.

''ஐயோ, அண்ணா....கண்ணில்லியா கடவுளே? அப்பா...ஏ....ஆயா!'' அவ்வளவுதான் அவள் இருதயத்திலிருந்து, வெடித்து வெளிவந்த வார்த்தைகள்.

தாய் அலங்கோலமாய் அடித்து அலறிக் கொண்டிருப்பதைப் பள்ளியிலிருந்து வந்த, பத்து வயதுப் பையன் பார்த்ததும், ஒன்றும் புரியாதவனாய் 'ஏம்மா அளுவுறே' என்று கேட்டுக்கொண்டே அவனும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான்.

தன் பிள்ளையைப் பார்த்ததும் அவளுக்கும் காலும் வரவில்லை; கையும் வரவில்லை, பிரமை பிடித்தவள்போல் அவனை வெறிக்க ஒரு பார்வை பார்த்தாள். அடுத்த கணம் தன் அன்பு அனைத்தும் சேர்த்துத் தன் இரு கைகளாலும், இறுக அவனைக் கட்டிக்கொண்டு கதற ஆரம்பித்து விட்டாள். தன் புருஷனையே உரிச்சுவைத்தாற்போல் இருக்கும் தன் பிள்ளையைப் பார்த்ததும் அவளுக்கு எப்படி இருந்ததோ! அவன் அழுகையையும் நிறுத்தினவனல்ல ''என்னம்மா...சொல்ல மாட்டியா....அம்மாடி,'' என்று

RangaRakes tamilnavarasam

எதையோ நினைத்தவனாய், ''அப்பா எங்கம்மா'' என்ற கேள்வியையும் திடீரெனப் போட்டு விட்டான்.

மரியம்மாளை அந்த இரு சொற்களும், எரியும் நெருப்பில் எண்ணெய் கொட்டும்போது உண்டாகும், 'குபீர் நிலைமையில் கொண்டு நிறுத்தியது. ஒரு வினாடி மௌனம்; அடுத்த வினாடி, ''ஏ—கண்ணு....ஒங்க அப்பனை!'' என்ற பயங்கர சப்தம்! அவள் அதரத்தில் வீறிட்டெழுந்த சோகப் புயலை அடக்க முடியாதவளாய் மேலே ஒரு வார்த்தையும் பேச நாவெழாது, 'ஐயோ!'' என்றலறித் தரையில் சாய்ந்தாள்.

எதிர்பாராத இந்தக் கூக்குரலைக் கேட்டத் தெரு ஜனங்கள் மரியம்மாளின் வீட்டில் கூடிவிட்டனர். திகைப் பூண்டை மிதித்தவர்களைப்போல் நின்றிருந்த பெண்களில் சிலர் மரியம்மாளைத் தூக்கித் தேற்றி, ஆசுவாசப் படுத்தினர். பலகுரல்களுக்கு அவளால் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சிந்திய மூக்குடனும், பரபரப்புடனும் நிற்கும் அவர்களை நிமிர்ந்து பார்த்ததும் அவள் கும்பி இன்னும் கொழுந்துவிட்டு, 'திகு, திகு' வென்று எரிந்தது.

ஒரே வாக்கியம், ''என்னத்தை அக்கா நாஞ் சொல்லுவேன்! அவு—ங்—களை......ஐயரு....!'' முடிந்தது. ஆவேசம் வந்தவள் போல் அக்கிரகாரத்தை நோக்கித் தலைவிரி கோலமாய்ப் பறந்தாள். கூட்டத்தில் பலர் ஓடினர்.

அந்தோனிசாமி, காளையூர் கிராமத்தவன், அவன் தந்தை ஆரோக்கியசாமி அவ்வூர் பள்ளு, பறை பதினெட்டு ஜாதியாரிடமும் நன்மதிப்பும், செல்வாக்கும் பெற்றிருந்தான். எவ்விதமா? அவன் பேச்சு வன்மையுள்ளவன். படிப்பு உண்டு. கையெழுத்துத் தடங்கலில்லாமல் போடுவான். அவனின் இந் நாவன்மை அந்நாடெங்கும் பரவ அவன் கையாண்ட, 'சீக்ரெட்'வெப்பன், நேர் உண்மையும் நிறை நாணயமும்தான். ஆதி—திராவிடன், அண்டினோரை உயிர் கொடுத்தாயினும் ஆதரிக்கும் தன்மை

யுள்ளவன். சலியா உழைப்பாளி. அந்தோனிசாமி எதற்கும் கவலைப்படுவது கிடையாது. தகப்பன், பிள்ளையின் கவலைக் கிடங்கொடுத்தால்தானே!

ஒதுக்கப்பட்டவர்களில் ஒருவன் மூன்று வேளை தினம் வயிறார உண்பது இயற்கைக்கும், காலத்திற்குங்கூட சகிக்க முடியவில்லை. ஆரோக்கியசாமி—அந்தோனிசாமியின் தந்தை—வியாதியால் பீடிக்கப்பட்டு சின்னாளில் இறந்தான். தந்தை உயிருடனிருக்கும் பொழுது சொன்னதைச் செய்து இட்டதைச் சாப்பிட்டுச் செல்லமாய் திரிந்த அந்தோனிசாமிக்கு இப்பொழுது நிலைமையைச் சமாளிப்பது மிகக் கவலைக் கிடமானது, ஏதோ சில மாதங்கள் தன் தந்தையின் சேமிப்புப் பொருளால் ஒருவாறு தன் மனைவி பிள்ளையுடன் காலத்தைக் கழித்தான்.

பள்ளன், பறையன், தோட்டி, தொம்பன் உட்கார்ந்துகொண்டே எவ்வளவு நாள் சாப்பிடமுடியும்? ஏய்த்துப் பிழைக்கும் தொழில் ஆதி—திராவிட வர்க்கத்திற்கே விதி விலக்கு. பிறர் இரத்தத்தை உறிஞ்சி உய்யும் கொடிய வேலை வேண்டவே வேண்டாம், பின்? அன்று சதிகாரரால் விதிக்கப்பட்டத் தொழில்களில் ஒன்றாகிய —அதுதான், உடலை சன்னஞ் சன்னமாய் சீவி, இன்முகத்துடன் தத்தம் செய்யும்—'காவல்' வேலைக்கு ஓர் அந்தணனிடம் அமர்ந்தான்; அடிமையானான்.

அந்தோனிச்சாமிக்குத் தன் தந்தைபோல் அக்கிராமத்தில் இன்று செல்வாக்கில்லையானாலும், அவனால் அவன் தந்தையின் கீர்த்திக்கும், புகழுக்கும் எள்ளளவும் பங்கம் ஏற்படவில்லை. இன்னும் புகழ் ஓங்கத்தான் செய்தது. அந்தோனிசாமிக்கு அதில் எவ்வளவு திருப்தி! பூரிப்பு! தந்தைபோல் சத்தியவான் என்பதைத் தவிர்த்து இவனின் தனிப்பட்ட சிறந்த குணம் உயிர் போயினும் இரந்து குடிக்கப் போகான். அதனால்தானோ, என்னமோ அவன் வேலைக்கமர்ந்த ஆறு மாதத்தில் தொழிலாளியிலிருந்து முதலாளிவரை சகலராலும் நேசிக்கப்பட்டான்; விரும்

பப்பட்டான். அவன் வீண் கூலி ஒரு பைசாவும் வாங்காத நேர்மைக்கும், உண்மைக்கும் பணிவுக்கும் பெருந்தன்மைக்கும் ஐயரே மனம் மகிழ்ந்தாரென்றால், அன்னியர் அவனைப் புகழக் கேட்பானேன்?

அந்தோனிசாமி, தன்னை ஐயர் வீட்டில் அடமானம் வைத்ததிலிருந்து ஐயர் வயல் பக்கம் அடியெடுத்து வைப்பது நின்றது. பாவம், ஐயர்தான் முன்பெல்லாம் கணுக்கால் கடுக்க ஒட்டுக்குடையை ஆதாரமாகக் கொண்டு வரப்புத் தவறினால் அடி தவறாது நின்றதற்கு 'இளைப்பாறுகிறார் என்றால் தன் பிள்ளையைப் படுக்கைக்கு விரட்டுவதையும் ஒழித்தார். அதிகாலையில் கரவை மாட்டைக் குளிப்பாட்டும் கவலையும் ஐயருக்கு ஓய்ந்தது. வெண்கார் தண்ணீர் பாய்ந்ததிலிருந்து களத்தில் 'பொதி' ஏறுமட்டும் அவன் பொறுப்புத்தான். அந்தோனி சாமியை, ஐயர், அதிக பெட்ரோல் விரும்பாத 'போர்ட்'கார் என்று நினைத்ததால்தான், வார்த்தை என்ற 'ஸ்டீரிங்கால்' அவர் வேண்டும் பக்கம் திருப்ப முடிந்தது!

என்றைக்காவது விருந்தினர் வந்துவிட்டால் உடனே அவர்களுடன் வயலுக்குக் கிளம்பி விடுவார். அக்கம் பக்கத்து வயல்களும் அவர் கண் வீச்சில் படாமல் போகாது. அந்த வயல்களைக் காட்டியும், தன் வாய்ப் பந்தலாலும், தன் மகளுக்கு, வரன் சரி கட்டவோ, என்னமோ? அது ஐயருக்குத்தான் வெளிச்சம்! ஆனால் இது ஒன்று மட்டும் நிச்சயம். அவர் காட்டின அந்த ஒன்றறை வேலியும் 'குத்தகை' என்பதை அவர்களிடம் சொல்ல மாட்டார் என்பது. அதிதி ஐயர் வீட்டுக்கு இவ்விதம் வந்து விட்டால் பாவம், அந்தோனிசாமிக்கு அரை வயறுக் கஞ்சி குடிப்பதிலும் சில சமயம் மண் விழுந்துவிடும். வந்தவர்போவதற்குள், ''அதை வாங்கி வா, இதைக் கொண்டு கொடு, அங்கே போ, வாசுவைக் கூப்பிடு, சுப்பு வந்தானா?'' என்று ஐயர் அவனை ஆட்டிவைக்கும் ஆட்டு, அப்பப்பா! அவன் தாலி அறுந்து விடும். அச்சமயங்களில் இரவு, பகலாய்க் கண் விழிக்கும் 'நடவு' காலம் எவ்வளவோ தேவலை, என்று நினைப்பான்.

RangaRakes tamilnavarasam

அவன் அடிமை. ஐயர் அதிகாரம் பண்ணவும் அந்தோனிசாமி அடிபணியவும்தானே, பூமியில் பிறந்திருக்கின்றனர்! இந்தத் தலைக் கர்வமும், திமிறும் அடங்கும் வேளை—சொல் தடுமாறிவிட்டது. யுகம்—என்றோ? ஐயர் மட்டும் என்ன, வேறு எந்த ஜாதி 'எஜமானன்' தான் பள்ளன் பறையன் வேலையில் பூரணத் திருப்திப் படுபவன். மனமார அன்பு காட்டுபவன்? இது பொய் எனில், அவ்வாறு இருப்பவன், கோடையில், 'கொட முறுட்டி'யில் எத்தனை உடப்பு எடுக்குமோ அத்தனை பேர், உண்மையில் உண்டு. பள்ளன், பறையன் மட்டும் கடைமைக்குக் கால் பணிந்து தீரவேண்டும்.

சுப்ரமண்ய ஐயர் அந்தோனிசாமிக்குக் கொடுக்கும் சம்பளம்—சே, கூலி எவ்வளவு? வருஷத்திற்கு ஒன்பது கலம் நெல்லும், மூன்று நாளைக்கொரு தரம் இரண்டு மரக்கால் படியுந்தான்.

அவன் தேகம்....? புளிச்ச ஏப்பம் வரும்வரை—அதற்குத்தான் ஸ்பெஷல் பெருங்காயம் சாப்பிடுகிறார் என்கிறீர்களோ, ரொம்ப சரி!—ஒரு நாளைக்குக் குறைந்தது நான்கு வேளை சாப்பிடும் சுப்ரமண்ய ஐயர் எங்கே! சில சமயம் நின்ற நிலையில் கலயத்தில் உள்ள கஞ்சியை வாரி வாயில் போட்டுக்கொண்டு, ஒரு நாளைக்கு இரண்டே வேளை குடித்து, ஓடும் அந்தோனிசாமி எங்கே?

கொலையாளிக்கும், பகல் கொள்ளைக் காரனுக்கும், சிறையில் உள்ளே போன நாளிலிருந்து வெளியில் வரும் மணி வரையில், அவர்கள் சரீரக் கனம் குறையாது பாதுகாக்க 'எடை' போடுகின்றனர். ஆனால் அந்தோனிசாமிக்கு? அவன் வர்க்கத்திற்கு....? விவரம் தெரிந்த அந்த இளம்பிராயத்தில் எடுத்தத் தார்க்குச்சியும், மாட்டாங்கோலும் அவன் புருஷ பருவத்தில் பண்ணையும், காவலுமாக உருவங்கள் மாறும் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை எடைபோட—மன்னிக்கவும், பெயரளவில் ஒரு சலுகை வார்த்தை கேட்க, உண்டா, ஒரு நாதி?

RangaRakes tamilnavarasam

நெற்பயிர் அறுவடை முடிந்தது. ஐயரின் அம்மாவின் உலகவாழ்வும் முடிவடைந்தது. அந்தோனிசாமி அக் கிழவிக்குக் கிட்டயிருந்து அழகாய்ப் பாடை கட்டினான். பிரேதமும் சிதை ஏறியது.

அடுத்தநாள் வழக்கம்போல் அந்தோனிசாமி கோழி கூவினதும் எழுந்து, சம்பாவயல்களை ஒரு கோலு கோலி விட்டு, சுப்ரமண்ய ஐயருக்குச் செய்ய வேண்டிய காலைக் கடன்களை எல்லாம் முடித்துவிட்டு சுமார் ‘பதினோறு’ மணிக்குள் காலைக் கஞ்சி குடிக்க, எஜமானனிடம் உத்திரவு பெற்றுப்போக வண்டி மாட்டுத் தொழுவில் வந்து கட்டிய கைகளுடனும், ஒடுங்கிய சரீரத்துடனும் நின்றான்.

ஐயர் அதிகாலையில் மூக்கைப் பிடிக்கப் போட்டது, பத்தரை மணிக்குக் கொஞ்சம் குறையவே, அதைப் பலகாரங்களால் (இடை வேளை ஆகாரம்) அடைத்துத் திண்ணையில் வெற்றிலைத் தாம்பாளத்தின் எதிரில் சப்பளம் போட்டு உட்கார்ந்திருந்தார். பட்டதும் படாததுமாய்த் தோளில் மெல்லிய துண்டு. கொழுந்து வெற்றிலையும் கொட்டைப் பாக்கும் வாயில், அதப்பல், ஆம்! ஆகாரத்திற்குப் பின் அசை போடும் கோயில் காளையைப்போல் தான் இருந்தது அவர் தோற்றம். அருகில் ஆருயிர்க் காதலி —இல்லை, மனைவி மடித்த வெற்றிலையை நீட்டும் கை. அவள் விடுத்த சுருள் ஒளிவீச்சும், குறுநகையும், ஒரு சுண்டு சுண்டி ஐயரை, அன்றொரு நாளையச் சம்பவத்திற்கு இழுத்துச் சென்றது. அவருக்கே புரியாத ஏதோ, ஒரு திகட்டா இன்பத்தை அள்ளி அள்ளிப் பருகிக் கொண்டிருந்தார். அந்த மனோகர வேளையில், ஐயர் தரிசனம் அந்தோனிசாமிக்குக் கொடுத்து வைத்தது அவன் பாக்யமே!

ஏதோ அகஸ்மாத்தாய்ப் புன்னகை தவழும் முகத்தை ஒருபக்கம் திருப்பினார்!

என்ன திடீர் மாறுதல்! ஒருகண நேரங்கூட இன்னும் முடியவில்லையே! அதற்குள்ளாகவா, அந்த எழில்முகம்

RangaRakes tamilnavarasam

கறுக்கவேண்டும்? மனதை மயக்கும் மோகனப் புன்னகை மனத்துள் பாயும் ஈட்டியானது. ஒளி வீசியகண், ஊடுருவும் அம்பானது. நெற்றியில் எள்ளும் கொள்ளும் சடபுடவென்று வெடித்தது. அவர் சடலத்தையே ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது சகதியில் நிற்கும் அந்த உருவம்.

ஐயர்: ''டேய் அந்தினி?''

பார்ப்பனர், ஏன், பார்ப்பனாரல்லாத எந்த எஜமானருமே, அதுபோன்ற அல்லது வேறு அழகான பெயருள்ள எந்த ஆதி திராவிடனையும் அப்பெயர் முற்றிலும் சொல்லி அழைப்பதில்லை. காரணமா? அப்பெயரின் கடைசியில் இருப்பது 'சாமி' என்ற சொல் பாருங்கள்!

''சாமி'' இது, அந்தோனி சாமியின் உயிரற்ற பதில். அவன் சரீரம் ஏனோ அவ்விதம் நடுநடுங்குகிறது.

ஐயர் சற்றுத் தாழ்ந்த குரலில், ''நேத்திக்கி என்னடா பண்ணினே?''

அந்தோனிசாமிக்கு இன்னும் நடுக்கம் நின்றபாடில்லை: ''சாமி, கோளிக் கூப்பிட்டால்லே போயி வயலை பாத்திட்டு வந்து, எஜமான், ஊட்டு வேலையை முடிச்சேனுங்க. அப்பறந்தான் அம்மா காரியம்''

ஐயர் கிண்டலாய், ''அந்தினி! வேலைக் கணக்கு கேட்கலே உன்னை. இதோபார், நேத்திக்கி மயானத்தில் எடுத்தாயே, அது. உன்னண்டைதானே!''

அந்தோனிசாமி விழிப்புற்றவனாய், ''சாமி!'' என்றான். பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு, அதற்குமேல் ஒரு சொல்லும் சொல்லாது அப்படியே நின்றான். சற்று நேரம் மௌனம்.

ஐயர் சற்று கோபமாய், ''என்னடா! திருதிருன்னு முழிக்கிறே. பாஷை புரியல்லியோ? நேத்திக்கி மயானத்தில் திருடினாயே, அதைத் தாண்டா, கேட்கிறேன்.''

RangaRakes tamilnavarasam

''மயானத்தில் திருடினாயே,'' இந்த இரு சொற்களும் காய்ச்சியவேலும் அம்புமாக மாறிமாறி அந்தோனி சாமியின் அடிவயற்றில்பாய, ஜீவனற்று, ஒவ்வொரு அவயவமும் தனித்தனியே ஒடுங்கி கர்பமாகிவிட்டான்.

அவன் வாழ்நாளில் முதல்முதலாய்—கடைசி தடவையும் அதுவேதான். அதுவும் தன் சரீரத்தைப் பிடிபிடியாய்க் கசக்கிப் பிழிந்து உண்ணும் சுப்ரமண்ய ஐயர் வாயாலல்லவா அந்தச் சொற்களைக் கேட்டான்.

''என்னடா கேட்கிறேன், வாய்முத்து உதிர்ந்து விடுமோ? எத்தனை இறுமாப்பு!''

''சாமி! சாமி சொல்றது எனக்கொண்ணும் புரியலீங்க!''

''சீ, நாயே, மூடுவாயை, பசப்பிவிட்டுடலாம்னு பார்க்கின்றாயா? பறப்பய புத்தி இங்கு செல்லாது! நீ எடுத்திண்டுபோன சேலையைக் கொடுக்கல்லே, உன் உடம்புத்தோல்.....!''

''ஐயோ, சாமி! நான் சீலையை எடுக்க இல்லிங்க!''

''உன்கையில் இருந்ததை என் இரு கண்ணால் பார்த்தேன்! ஆளை உயிரோடே ஸ்வாகா பண்ணிடுவாய் போலிருக்கின்றதே! அப்படின்னா, நானா பொய்யன்?''

''சாமி! நான் எடுக்கல்லிங்ளே! அந்த எரிஞ்சிகிட்டு போற சாமிமேலே ஆணைங்க. இந்த ரெண்டு வருசமா சாமி ஊத்துன தண்ணியே குடிச்சிக்கிட்டு இருக்கிற நான் இப்பப் புதுசா அதுவும் அம்மா சீலையைத் திருடுவனா?''

''சீ, அடக்கு. கழுதை; இப்பக் கொண்டு வறயா, இல்லையா?''

''ஐயோ, சாமி நான் எடுக்கவே இல்லிங்க!''

''எடுக்கவே இல்லையா? உன்னை மரியாதையாய்க் கேட்கின்றேன்பார், அது என் மேல் பிசகுதான். இதோ பார். தானே புடவை இங்கு வரப்போறது.'' அடுத்த நிமிஷம் தொழுவிலுள்ள ஒதியமரத்தில் இருகைகளையும் பின்னி இறுகக் கயற்றால் கட்டப்பட்டான்.

ஏதோ, தற்செயலாய் அச்சமயம் அக்கிரகாரம் போன சவரியார், அந்தோனி சாமி கட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும் பதைபதைத்துப்போய் ஒருவருக்கும் தெரியாமல் கொல்லைப் புறமாய் ஓடி மாரியம்மாளிடம் காதோடு காதாய் சம்பவத்தைக் கூறினான்.

* * *

தலைவிரி கோலமாய் அக்கிரகாரத்தை அடைந்த மரியம்மாள் மரத்தோடு மரமாய் கட்டப்பட்டிருக்கும் தன் பதியைப் பார்த்தாள்.

அந்தோ! அவள் துயர்! ''இன்னும் காலை கஞ்சிக் கூட குடிக்கிலியே; ஐயோ!'' அந்த ஒரு வாக்கியத்தில் தான் எவ்வளவு அன்பின் கனிவு! அவள் அதரத்தினின்றும் பிய்த்துப் பிய்த்துக் கோர்த்ததல்லவா அப் பதங்கள்! அதோ, என்ன கோரம்! அந்தோனிசாமியின் காலடியில் மண்ணைக் கவ்விக் கிடக்கின்றாள் மரியம்மாள். பரிதாபம்!

அப்பா, அப்பாவென்று அலறித்தவிக்கும் தன் மகனையும் மூச்சற்றுக் கிடக்கும் தன் பத்தினியையும் வைத்த கண், வைத்தபடி பார்க்கும் அந்தோனிசாமிக்கு ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூடக் காணோமே! அவன் முகம் மட்டும் செத்து விட்டது! ஏன்? அவமானவாள் கறுகறுவென்று அவன் இருதயத்தை அறுக்கின்றதா?

கல்லும் கசிந்துருகும் அக்காட்சியைப் பார்க்கும் சுப்ரமண்ய ஐயரும் மனிதன்தானா! தன் கேசை ருசுப் படுத்த சில ஐயர்களை வரவழைத்தார். தனக்குச் சாதகமான திராவிடரில் சிலரையும் அழைத்தார்.

RangaRakes tamilnavarasam

பிள்ளைவாள் வந்து சுவாமிகள் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தார். அந்தோனிசாமி கட்டவிழ்க்கப்பட்டுக் கூண்டில் நிறுத்தப்பட்டான். சுவாமிகள் எந்தக் கேள்விகளை, எந்தப் பாணியில் கேட்டாரோ, அதில் ஏறக்குறைய சிறிதும் பின்வாங்கினாரில்லை பிள்ளையும், ஆனால் அவர் கர்ஜனை, இறுமாப்பு, ஏளனம், அதிகாரம் இவைகளில் ஒரு தனி மிடுக்கும் துடுக்கும் துலங்கின. பட்ட அவஸ்தை போதாதென்று, பிள்ளை அவர்கள் அவனை அவர் செங்கோலால் (சிமிட்டுக்குச்சி) அடித்தும் கேட்டு விட்டார். நிரபராதியான அவன் 'இல்லை' என்ற ஒரே வார்த்தையைத்தான் அந்த இம்சையிலும் சொன்னான். பாவம்! ஐயர் சூழ்ச்சி பலிக்கவில்லையாதலால் மனமுடைந்தார். ஆனால் பிள்ளை, சுவாமியைத் திருப்திப்படுத்தாமல் போவாரா? இல்லையெனில், அவருக்கு அக்கிரகாரத்தில் கிடைத்த 'அமராசனத்திற்கு'த்தான் பலன் என்ன?

பிள்ளை அவர்கள் அந்தோனிசாமியைப் பார்த்து, நாளைபகல் (அடுத்தநாள்) 30 நாழிகைக்குள் எங்கிருந்தாவது—என்ன செய்வாயோ தெரியாது—புடவை ஐயர் வீட்டிற்கு வந்துவிட வேண்டியது'' என்று கண்டிப்புத் தீர்ப்புக் கூறி விட்டார்.

அடுத்தநாள் அதிகாலை காய்கதிர்ச் செல்வன் தன் பொற்கிரணங்களைத் தன் சரீரத்தினின்று ஒரு சிலுப்பு சிலுப்பிவிட்டான். அவைகள் மெதுவாய் இருளை நீக்கத் தன் ஒளியைக் கொடுத்துக் கிளம்பிவந்து கொண்டிருந்தன. தெருக்கோடியில் தென்திசையில் 'தயிரோ, தயிரோ', என்று நாடோடிப் பாட்டுடன் உதித்த தயிர்க்காரியின் குரல் அனைவரையும் 'பழையதுக்கு' இழுத்துச் சென்றது. ''இந்தா, உம் வெள்ளை'' என்று மாட்டுக்காரன் காலை வைக்கோலைப்போடுவது, நம்மையும் ஒருதட்டு தட்டி எழுப்புவதுபோல் இருந்தது.

'அம்மா' என்ற ஒருகுரல். சுப்ரமண்ய ஐயரின் வாயிற்கதவைத் தட்டுவதுபோல் சத்தம் கேட்டது.

RangaRakes tamilnavarasam

''யாரது?'' என்று கேட்டுக் கொண்டே அம்மா வந்தாள். முந்தினநாள் 'தீட்டுத்துணிகளை' எடுத்துப் போன மாரிமுத்து அவைகளைத் தீட்டுப் போக்கிக் கொண்டு வந்திருந்தானாகையால் 'இந்தாங்க அம்மா'' என்று ஒரு சிறு துணிமூட்டையைத் திண்ணைமேல் வைத்தான். அம்மா பரபரப்புடன் மூட்டையை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். ஐயரும் 'என்னடி' என்று கேட்டுக் கொண்டே உள்ளிருந்து வந்து திண்ணையில் அமர்ந்தார். அம்மா மடிப்புத் துணிகளை ஒவ்வொன்றாய் எடுக்க ஐயர் அவைகளைச் சரிபார்த்தார். மாரிமுத்து தந்த துணிகளில், ஒன்று அவர் மனைவியாரின் பழம் புடவை. மற்றது அவள் ரவிக்கை மூன்றாவது? அதுதான் அந்தோனி ''திருடிய'' தீட்டுத்துணி! ''நீ எடுத்ததை என் கண்ணாலே கண்டேனே'' என்று ஐயர் கர்ஜனை புரிந்தாரல்லவா? மரத்தில் கட்டி வைத்து அடித்தார்களல்லவா, மார் உடையப் பாடுபடும் அந்தினியை! அந்த ஏழை எந்தப் பழம் புடவையைத் திருடிக் கொண்டான் என்று பழி சுமத்தி தண்டித்தார்களோ, அதே புடவை மாரிமுத்து வெளுத்து வந்து தந்திருக்கிறான்! நீதிதேவன், விழித்துக் கொள்ளவில்லை!!

# 3
# நாடோடி

''நாடோடிப் பயல்—நாடோடி! பிழைக்கிற கழுதே இங்கேயே பிழைக்கக்கூடாதா? ரொம்பக் காரியமாக, சிதம்பரம் ஓடினானா....,போய்.....'' என்று எம்பெருமான் கேட்டார், தோட்டக்காரன், தன் மகன் விஷயமாக முறையிட்டுக் கொண்டபோது.

எஜமானர் எம்பெருமான் பிள்ளை மான் அண்டு கோ சொந்தக்காரர். தோட்டக்காரன், எம்பெருமான் பிள்ளையின் தகப்பனாருக்குப் பால்ய சினேகிதம். ''கால வித்யாசத்தாலே, அவன் தோட்டக்காரனாக நேரிட்டது. அது வேறு கதை. தோட்டக்காரனாக இருந்தாலும், தன் தகப்பனாருக்குப் பால்ய சினேகம் என்பதாலே எம்பெருமான் பிள்ளை,தோட்டக்காரனிடம் கொஞ்சம் அன்போடும் அக்கரையோடும் பேசுவது வாடிக்கை. அன்று தோட்டக்காரன், தன் மகனுடைய, 'கெட்ட நடவடிக்கை'யைப் பற்றி முறையிட்டுக் கொண்டு வரும்போதுதான் எம்பெருமான் பிள்ளை, நாடோடி—நாய்—கழுதை என்று பேசித் தோட்டக்காரனிடம் தனக்குள்ள அக்கரையைக் காட்டிக் கொண்டிருந்தார்.

''என்ன பண்றதுங்க, நான் எவ்வளவோ சொன்னேன்.''

''ஆமாம்!முந்தி அவன் நாகப்பட்டணம் போறபோதே கூட வேண்டாம்னுதான் சொன்னே.''

பு.172.க.வி.3

RangaRakes tamilnavarasam

''ஆமாங்க, ஏண்டாப்பா, நாகபட்டணம் போக வேணும்னு கேட்டேன். போய்த்தான் ஆகணும், அங்கே வேலை கிடைக்கும்னு சொல்லிவிட்டுப் போனான்....''

''போன பத்தாம் நாள் பாண்டிச்சேரிக்கு போறேன்னு கடிதம் போட்டான். நானுகூடக் கொஞ்சம் சந்தோஷப் பட்டனுங்களே; தொலையட்டும், பாண்டியிலே தானே, என் மச்சான் இருக்கிறான். அவனோடு இருந்து தொலைக் கட்டும்னு நினைச்சேன். அங்கே இரண்டு மாசம் சரியா இல்லை, நான் சிலோன் போகிறேன்டான்னா.''

''போறவனோ, போய்க் கொண்டிருக்கிற போக்கு. உழைச்சி ஊருக்கு அடங்கி இருக்க வேணும்னா நாகபட்டி னத்திலேயே இருக்க மாட்டானா, சிலோன் ஏன் போக ணும்? அதுதான் சொல்றேனே, இதுகளுக்குக் காலிலே சக்கரம் இருக்கு. சுத்திகிட்டே இருக்கும்.''

''நான் தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன். டே! மருதாச்சலம், வேண்டாம்டா. நாம்ப ஏதோ கொஞ்சம் கௌரவமா வாழ்ந்தவங்க. கால வித்யாசம் கொஞ்சம் நொந்து போயிட்டோம்; ஊரோட இருந்து ஏதுவோ ஒரு பிழைப்புக்கான வேலையைக் கவனிப்போம். நீ இங்கேயே இருடான்னு சொன்னேன். அவன், நீங்க சொல்ற மாதி ரியா, அவன் காலிலே சக்கரம் இருக்கோ என்னமோ! நாகபட்டணம்டான்னா, புதுச்சேரின்னா, கடைசியிலே சிலோனுக்குப் போனான். போனான், முட்டாப்பய, இவனை என்னாண்ணு எண்ணியிருப்பாங்க அங்கே? நாடோடி போலிருக்குன்னுதானே சொல்லி இருப்பாங்க?''

''வேறே என்ன சொல்வாங்க? சிலோனிலே இருந்து மறுபடியும் தூத்துக்குடி வந்தானாம். இப்ப சிதம்பரத் திலே இருந்து கடுதாசி போடறான், சிங்கப்பூர் போகிற தாக இருக்கிறேன்னு. நான் என்னத்தைச் செய்யறதுங்க''

''என்ன செய்ய முடியும்? அவன் சுபாவம் அப்படி யாகிவிட்டது. நாடோடியாகி விட்டான். போயி, கெட்டு அலைஞ்சு, கழுதே, தானா வந்து சேரும்.''

RangaRakes tamilnavarasam

எஜமானர் நெடுநேரம் பேசிவிட்டார். மேலும் அன்று ஒரு கமிட்டிக் கூட்டம், அதற்குப் போக வேண்டிய அவசரம் இருந்தது. தோட்டக்காரனுக்குத் திருப்திதான். என்னமோ, எஜமானர் இவ்வளவு அக்கரையுடன், தன்னிடம் பேசினாரே என்பது பற்றி.

எஜமானர் சொன்னதிலே என்ன தப்பிதம் இருக்கு? பயல், நாடோடியாகத்தான் இருக்கிறான் என்று எண்ணிக்கொண்டே, தோட்டம் போய்ச் சேர்ந்தார். மருதாசலத்தின் தந்தை, மார்த்தாண்டம் பிள்ளை.

மான் அண்டு கம்பெனி, எம்பெருமானுடையது; ஆனால் இது தவிர, அவருக்கு வேறு பல வியாபாரக் கம்பெனிகளில் தொடர்பு உண்டு. அப்படிப்பட்ட ஒரு கம்பெனியின் கமிட்டிக் கூட்டம்தான் நடந்தது— அதற்காகத்தான் அவசரமாகத் தோட்டக்காரரிடம் பேச்சை முடித்துக்கொண்டு, எம்பெருமான் பிள்ளை சென்றார்.

கமிட்டியிலே கொஞ்சம் சூடான விவாதம். கமிட்டியாரால் நியமிக்கப்பட்டிருந்த கம்பெனி மானேஜர் மீது புகார்கள், அவர் சரியாக வேலையைக் கவனிக்கவில்லை என்று. குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது, எம்பெருமான் பிள்ளை. அன்று குறுக்குக் கேள்விகளையும் அவரேதான் பூட்டினார்.

''ஆமாம் சார்! ஆறாம் தேதிதானே ஆற்காடு போனீர்?''

''ஆமாம்! ஆற்காட்டிலேயே சரக்கு கிடைக்குமென்று சொன்னார்கள் போனேன். சரியாக பஸ் சர்வீஸ்கூட இல்லை. பாதிதூரம் ஜட்காவில் கூடப் போகவேண்டி நேரிட்டது.''

''அது சரி! வேலையை அக்கரையாகப் பார்க்காவிட்டால் எப்படி ஆகுமய்யா? ஜட்காவிலே போனது ஒரு பெரிய பிரமாதமாக இருக்கு உமக்கு. இப்படி, உடல் குலுங்குவது கூடாது என்று எண்ணுபவர்கள் வீட்டோடு

RangaRakes tamilnavarasam

இருக்க வேண்டும். வேலை பார்க்கிறேன் என்று வருவானேன், கம்பெனிக்கு வீண் நஷ்டம் எதற்கு? உம்முடைய டயரியைப் பார்த்தாலே தெரிகிறதே, நீர் வேலை பார்த்த இலட்சணம். ஆற்காட்டுக்கு ஆறாம் தேதி போயிருக்கிறீர், மறுதினமே திரும்பி ஊருக்கு வந்துவிட்டிருக்கிறீர்?''

''ஆமாம்! வராமல் என்ன செய்வது? ஆற்காட்டிலே சரக்குக் கிடைக்கவில்லை.''

''உடனே மாப்பிள்ளை மாதிரி ஊருக்கு வந்து விட்டீர்—ஏன், ஆற்காட்டிலே இல்லை என்றால், வேலூர் போய்ப் பார்க்கிறது?''

''ஆற்காடு போவதற்குப் பட்ட அலைச்சல் கொஞ்சமா? அலைச்சலோடு அலைச்சலா, வேலூருக்குப் போகணும்னா.''

''உம்மாலே முடியலேன்னா சொல்லி விடவேணும். எதுக்காக, இப்படிக் கல்லுப் பிள்ளையார் போல, ஊரோடு உட்கார்ந்து கொண்டு இருக்கிறவர், மானேஜர் வேலைக்கு வரணும்? நம்ம கம்பெனி வியாபாரத்துக்குச் சுத்தி அலைஞ்சாதானே நடக்கும். கொட்டி இருக்கிறமே பணத்தை, உமக்கு ஊர் போய் வருவது பெரிய சிரமமா இருக்கு.''

''ஊர் சுற்றி, அலையாமலா இருக்கறேன். ஆற்காடு போய் வந்தபிறகு அடுத்தவாரமே, சோளிங்கபுரம் போயிருந்தேன்.''

''சோளிங்கபுரம் போய்வந்ததை என்னய்யா, என்னமோ, சிலோன் சிங்கப்பூர் போய் வந்தது போலப் பேசிக் காட்டறே. பிரமாதமான பிரயாணம் செய்துட்டே போய்யா! ஆறாம் தேதி ஆற்காடு போய் வந்த ஆசாமி பதினாலாம் தேதி வரைக்கும் ஊரை விட்டு அசையவே இல்லை. ஒரு நாள் சோளிங்கபுரம் போய் வந்த பிறகு மறுபடியும் ஏழு நாள்; இங்கேயே இருந்திருக்கிறே! பிறகு ஒரு நாலு நாள், எதெதுவோ ஊர் போயிருந்திருக்கறே.....''

RangaRakes tamilnavarasam

''அந்த நாலு நாள் நான் அலைஞ்சு திரிஞ்சது இருக்குங்களே, நாய் படாத பாடு பட்டிருக்கிறேன். நெல்லூர் எங்கே இருக்கு, அங்கு போயி, மறுநாளே புறப்பட்டு, சித்தூர் போயி வருகிறேன். வழியிலே வேலூரைப் பார்த்து கிட்டு, மறுபடியும் ஆற்காட்டுக்குப் போயி, காஞ்சிபுரத்திலே ஒரு மணி நேரம் இருந்து, அந்த வேலையைக் கவனிச்சுக்கிட்டு, மறுபடியும் ஊருக்கு வந்தேன். நாடோடி மாதிரியாகச் சுத்தி இருக்கறேன்.''

''ஓஹோ! நாலு ஊரு போயி வந்தது, உமக்கு நாடோடி பிழைப்பாகத் தோணுதா? நாடோடியாகச் சுத்தினாதானேய்யா வியாபாரம் நடக்கும்? மாசம் முள்ளங்கிப் பத்தை மாதிரி, தொண்ணூறு ரூபா வாங்கறயே—வெளியூர் போகாவிட்டா வியாபாரம் எப்படி இலாபம் தரும்—யார் அப்பன் வீட்டிலே இருந்து உனக்குச் சம்பளம் கொடுக்கறது? நாடோடியாமே, நாடோடி! ஆமாய்யா, ஆமாம்—நாங்களெல்லாம், வியாபார சம்பந்தமா வெளியூர் போகாமத்தானே இருக்கிறோம்! நாடோடியாம்! கட்டிப்போட்ட மாடு மாதிரி, பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி, இடிச்சி வைச்ச புளி மாதிரியா உள்ளூரிலேயே இருந்து கொள்ளேன், யார் உன்னை வேண்டாம்னு சொல்றவங்க. நம்ம கம்பெனிக்கு மானேஜராக இருக்கவேணும்னா, நாலு ஊரு அலைஞ்சு திரியத்தான் வேணும்—தூத்துக்குடி தொலைவாச்சே, பெங்களூரிலே குளிராச்சே, நெல்லூரிலே வெள்ளமாச்சேன்னு பேசினா, கம்பெனி என்ன ஆவது? அலையத்தான் வேணும், திரியத்தான் வேணும், இன்னைக்கு ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னு போய்த்தான் வரவேணும். இதோ பாரய்யா, மானேஜர்! நான் திட்டமா, கண்டிப்பாச் சொல்லி விடுகிறேன், கேட்டுக்கோ. என்மேலே குறை சொல்லாதே. நம்ம கம்பெனிக்கு, அலைஞ்சு திரிகிற ஆசாமிதான் வேணும். ஊரோடு இருக்கணும், வெளியூர் அடிக்கடி போக முடியாதுன்னு நினைச்சா, கணக்கைத் தீர்த்துக்கோ, நாலு ஊரு போய் வந்திருக்கிறே, ஏனய்யா

இன்னும் சில இடத்தைப் பார்த்திருக்கக் கூடாதா என்று கேட்டதற்கு, உன் வாய்க் கொழுப்பு, நாடோடியா நானு அலையறதுக்குன்னு கேட்டிருக்கிறே. இதோ பாரய்யா, வெளியூர் போகவர இருக்கிறதுதான் வியாபாரி இலட்சணம்னு நான் சொல்கிறேன், உள்ளூரோடே இருந்து கொண்டிருப்பவனை, குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுகிறவன்னு சொல்கிறேன். நீ என்னா சொல்ல முடியும் அதற்கு? நாடோடியாம்—நாலு ஊரு போகவர இருந்தாத்தானே கம்பெனி நடக்கும். நாடோடியாக இருக்க வேணாம்னா மாகராஜனாக நீ உண்டு, உன் வீடு உண்டு, இந்த ஊர் உண்டுன்னு இருந்து கொள்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை; மத்தவங்களுக்கும் ஆட்சேபனை இருக்காது. இங்கே இருக்கிறவங்களெல்லாம் நாடோடிதான். இன்னிக்கி ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னு போய் அவரவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கிறவங்கதான். உனக்கு வேணாம் அந்த நாடோடிப் பிழைப்பு— நீ பட்டத்து ராஜா! அரண்மனையை விட்டு வெளியே வரவே வேணாம். போ.''

கமிட்டி, எம்பெருமான் பிள்ளையின் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி விட்டது. மானேஜருக்கு வேலை போயிற்று. அடுத்த வாரம் ஜோலார்ப்பேட்டை ஜங்ஷன் —மலபார் மெயில் வந்து நின்றது. எதிர்ப்புறத்திலே இருந்து பெங்களூர் மெயிலும் வந்து நின்றது. மலபார் மெயிலிலிருந்து எம்பெருமான் பிள்ளை இறங்கி பிளாட்பாரத்தில் உலாவிக்கொண்டிருந்தார். பெங்களூர் வண்டியிலிருந்து, எம்பெருமானின் நண்பர், கம்பெனி டைரக்டர்களில் ஒருவர் சம்பந்தம் பிள்ளை, அவர் இறங்கி வந்தார். ''அடடே! பிள்ளைவாளா? மைசூரிலிருந்தா?''

''மைசூரிலே இருந்து நேற்றே வந்துட்டேன்—பெங்களூரிலே கொஞ்சம் வேலை இருந்தது. பார்த்துக் கொண்டு புறப்பட்டேன். நீங்க கோயமுத்தூரா?''

''கோயமுத்தூரிலே காலையிலே கொஞ்சம் வேலையைப் பார்க்கணும்—மத்யானமா பாலக்காடு போகலாம்னு இருக்கிறேன்—''

''நானும், நேரா மெட்றாஸ் போகிறேன். அங்கு போன பிறகு, மார்க்கட் நிலவரத்தைப் பார்த்துவிட்டு, மங்களூர் போகணும்.....''

''மசூலிப்பட்டணம் போகவேணும்னு சொன்னீரே?''

''ஆமாம். அங்கேயுந்தான் போய் வரணும். வேலை சரியாக இருக்கு. இரயிலில் இடம் சௌகரியமாகக் கிடைச்சுதா?''

''செகண்டு கிளாஸ் கிடைக்கலே, பஸ்ட் கிளாஸ் வாங்கிக்கொண்டு வருகிறேன்.''

''சரி, பாலக்காடு முடிந்ததும், நேரே ஊருக்குத் தானா?''

''ஆமாம்! ஊருக்கு வந்து உப்பங்கழி காண்ட்ராக்ட் வேலையைக் கவனித்துவிட்டு, உடனே ஊட்டி போக வேணும்; நம்ம பம்பாய் சேட் மூல்ஜி வந்திருக்கிறான் ஊட்டியிலே. என்னமோ அமெரிக்கன் ரேடியோவுக்கு ஏஜண்டு வேணும்னு சொன்னானாம். அதை எடுத்து வைப்போமேன்னு ஒரு யோசனை.''

''செய்யறது. சரி! ரயில் புறப்படப் போவுது. வரட்டுமா?''

இரயில்கள் புறப்பட்டுவிட்டன. இரண்டாம் வகுப்பிலே சம்பந்தம் 'அப்பா! பயல் பணத்துக்குப் பிசாசாக அலைகிறான்' என்று எண்ணிக் கொண்டே படுத்தார்—எம்பெருமான் பிள்ளையைப் பற்றி எம்பெருமான், 'சம்பந்தம் சுற்றுவதற்குச் சளைப்பதில்லை. பணம் எங்கு கிடைக்குமோ என்று மோப்பம் பிடித்துக் கொண்டு அலைகிறான்'' என்று சம்பந்தத்தை மனத்திற்குள் திட்டிக்கொண்டே இருந்தான். வியாபாரிகளை ஏற்றிக் கொண்டு இரண்டு

RangaRakes tamilnavarasam

இரயில்களும், கெம்பீரமாகச் சென்றன. சிதம்பரம் சந்திரா டாக்கீசில், டீ கடையில், மருத்தாசலம், அரைத் தூக்கத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தான். உள்ளே 'மாய உலகு' என்ற தமிழ்ப்படக் காட்சி நடந்து கொண்டிருந்தது.

---

RangaRakes tamilnavarasam

# 4

# "யார்மீது கோபித்துக் கொள்வது?"

**வ**றுமை, எத்தகைய கோலத்தைத் தரமுடியும் என்பதை எடுத்துக் காட்டவே, அந்த மூதாட்டி விட்டுவைக்கப்பட்டிருக்கக்கூடும்! காலதேவன் எத்தனையோ வண்ண மலர்களை, அழகான அரும்புகளைக்கூட அழித்தொழித்து விட்டு, இந்த 'எலும்புக் கூடு' உழல அனுமதிப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? வெறும் சருகு! அதற்குக் காலும் கையும், கண்ணும்! அம்மட்டோ! பாழும் வயிறும்!

அந்தக் காய்ந்த வயிறுக்கு யாராவது 'புண்யவதி' புளித்த கஞ்சி தந்து விட்டால், பெரிய விருந்துதான்!! விருந்து, இரண்டு நாளைக்கு ஒரு தடவை கிடைக்கும்—புண்யவதியை, அவள் புருஷன் கொடுமைப்படுத்தாதிருந்தால்!!

மற்ற நாட்களில் தண்ணீர், காற்று!!

அதிகமாக ஏற்றுக்கொள்ளவும் கிழவிக்குச் சக்தி இல்லை —பட்டினியோடு நீண்டகாலமாகப் பழகிவிட்டதால்! கிழவியின் கண்களிலே, நீர் வருவது நின்று, நெடுநாட்களாகிவிட்டன!

இரண்டு குழிகள்! அவ்வளவுதான்! கண்களாகத்தான் அவை முன்பு இருந்தன!

மைகூடத் தீட்டி அழகு பார்த்ததுண்டு—ஆனால் அது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு—'அவர்' இருந்தபோது.

RangaRakes tamilnavarasam

அவர் தந்த செல்வம் 'அக்கரை' சென்று ஆண்டு இருபதுக்கு மேலாகிவிட்டன—அரும்பு மீசைக்காரனாகச் சென்றான்—அன்னை அப்போது அழ முடிந்தது—இப்போது? அதற்கு சக்தி வேண்டுமே, இல்லை!

துக்கம்—ஏக்கம்!

நிலைத்துவிட்ட திகைப்பு!

தரித்திரத்தின் கடைசிக் கட்டம்!!

இவைகளின் 'நடமாடும்' உருவம், அந்த மூதாட்டி! கிழவியைக் கண்டால், ''ஐயோ பாவம்!'' என்று பரிதாபம் பேசியகாலம் கூட மடிந்துபோய் விட்டது—எத்தனை நாளைக்குத்தான், பரிதாபச் சிந்து பாடியபடி இருக்க முடியும்?

மலையின் கெம்பீரம்—மதியின் அழகொளி—மேகக் கூட்டத்தின் மோகனம்—இவை பற்றியே பேசிக்கொண்டும், ரசித்துக்கொண்டும், சதா சர்வ காலமும் இருக்க முடிவதில்லையே! இந்தச் சஞ்சல மூட்டையைப் பற்றியா, சிந்தனையை எப்போதும் செலவிட்டபடி இருக்கமுடியும்?

'பாட்டியம்மா' 'பாட்டி' ஆகி, பிறகு 'கிழவி'யாகி, பிறகு 'ஏ! யாரது!' ஆகி, பிறகு 'போ! போ!' என்றாகி, பிறகு, 'இதேதடா தொல்லை' என்றாகி, 'பெரிய சனியன்' என்றாகி, 'பிசின், இலேசில் விடாது' என்றாகி இப்போது, கவனிப்பார், கவலைப்படுவாரற்ற ஓர் உருவமாகிவிட்ட நிலை!!

சுவரிலே இருக்கும் சித்திரத்தோடு யார் பேசுகிறார்கள்!

ஆனால், கிழவியோ, யார் கிடைத்தாலும் விடுவதில்லை!

பசி—பட்டினி—இதைக் கூறவா? அல்ல, அல்ல! யார் பேசுவது....அப்பா....அடி அம்மா....அலமேலா....ஆண்டியப்பனா....யாரடாப்பா.....

RangaRakes tamilnavarasam

''நான்தான்...என்ன, என்னா....வீட்டுக்குப்போ... வள்ளி இருக்கா, தண்ணி கொடுப்பா.....''

''ஆண்டியப்பன்தானா....'டே அப்பா! எனக்குத் தண்ணியும் வேணாம். சோறும் வேணாம். சொக்கி கூழ் கொடுத்தா போதும்.....ஒரு கடுதாசி எழுதிக் கொடுடா அப்பா....கோடித்தெரு கோபாலன், 'அக்கரை' போறானாமே! அவனிடம் கொடுத்தனுப்பணும்.... வாடா, அப்பா.....புண்யம்டா உனக்கு... ஒரு நாலுவரி எழுதிக்கொடு ....

ஆண்டியப்பனுக்குக் கிழவி கூறப்போவது தெரியும்—அவன் சென்றுவிட்டான், வேகமாக—'வேறே வேலை கிடையாது இந்தப் பைத்யத்துக்கு' என்று முணுமுணுத்தபடி.

எதிரிலேயும், பக்கவாட்டங்களிலும் தடவிப் பார்த்துப் பார்த்து, ஒரு உருவமும் கையில் தட்டுப்படாததால், கிழவிக்கு அவன் போய்விட்டான் என்பது தெரிந்தது. என்ன அவசரமான வேலையோ பாவம்!—என்ற எண்ணம் கிழவிக்கு—கோபமல்ல!

கோபம் குடிபுக, அந்த மூதாட்டியின் நெஞ்சிலே இடம் ஏது? சோகம் கப்பிக்கொண்டிருந்தது!!

'அக்கரை'யில் மூதாட்டியின் மணி!!

இங்கு இந்த எலும்புக் கூடு!!

இடையே, நாடு, காடு, மலை, வனம், வனாந்திரம், கடல்!!

எண்ணம், விநாடியிலே எதையும் தாண்டும்! எலும்புக்கூடு, எங்கே அந்தச் சக்தியைப் பெறுவது! புதை குழிக்குச் செல்லவே சக்தியில்லை!

யாராவது கிடைக்கமாட்டார்களா என்று தேடித் தேடி அலுத்துப்போய், தன் குடிசையில் போய்ச் சுருண்டு விழுந்து விடுவது வாடிக்கை.

RangaRakes tamilnavarasam

சொந்தக் குடிசைதான்!!

அது வேறு யாருக்கு வேண்டும்?—அதனால் கிழவியிடமே, இருந்தது!

சரிந்துபோன சுவர்—பிய்ந்துபோன கூரை—அதன் நிலைமையும் கிழவியின் கோலமும் ஒரேவிதம்.

அக்கரையில், 'மணி'—'மார்க்' ஆகி, மாதாகோயில் தோட்டத்தில் வேலை செய்து ஒடிந்துபோய், பிறகு 'உல்லாச உலகுக்குக் கயவன் ஒருவனால் இழுத்துச் செல்லப்பட்டு, கள்ளனாகி, அடிபட்டு, உதைபட்டு, செத்தும் போய் விட்டான்.

மூதாட்டிக்கோ, 'மணி' மளிகைக் கடை வைத்திருக்கிறானோ, மலர்த்தோட்டத்தில் வேலை பார்க்கிறானோ, மாடுமனை மனைவியோடு சுகமாக இருக்கிறானோ—எவ்விதம் இருக்கிறானோ என்ற எண்ணம். நல்லவிதமாகத்தான் இருப்பான் என்ற எண்ணம்—நல்லவிதமாக இருக்கவேண்டும் என்றுதானே தாய் உள்ளம் எண்ண முடியும்—அதனால்!

''பாவிப்பய, ஒரு காலணாக் கடுதாசி போடக்கூடாதா'' என்று, எண்ணி எண்ணி கிழவி ஏக்கம் பிடித்தலைவது கண்டு, முதலில் பலர் சமாதானம் கூறிப்பார்த்தனர்—கார்டுவிலை முக்காலணாகூட ஆகிவிட்டது—'பாவிப்பய மகன். காலணாக் கடுதாசி போட்டபாடில்லை'—சமாதானம் கூறுவதைக் கூற மற்றவர்கள் நிறுத்திக் கொண்டனர்—கிழவியோ, 'அக்கரை' போகிறவர்களிடமெல்லாம் கடுதாசி, கொடுத்தனுப்புவதை நிறுத்தவில்லை. 'சிரஞ்சீவி மணிக்கு....'என்று துவங்கி முத்தம்மா என்று முடியும் அந்தக் கடிதம் ஒவ்வொன்றும், எவ்வளவு கன்னெஞ்சத்தையும் கரைத்துவிடும்—அவன்தான் கல்லறை சென்று விட்டானே—பலன் என்ன கிடைக்கும்?

ஓயாமல் கடிதங்கள்!

RangaRakes tamilnavarasam

அந்தக் கிராமமும் அடிக்கடி, 'அக்கரை'க்கு, 'அரும்பு மீசைகளை' அனுப்பியபடி இருந்தது.

நஞ்சை இருந்தது—புஞ்சையும் உண்டு! கரும்பு பயிராகும், கால்வாய்ப் பாசனம் உண்டு—ஆனால் அவ்வளவும் நாலைந்து பெரிய புள்ளிகளுக்குச் சொந்தம்—அவர்களோ நாடாளும் நாயகர்கள் வரிசையில் இருந்தவர்கள்—எனவே தலைநகரில் வசித்து வந்தனர்.

அரும்பு மீசைகள், அக்கரை சென்று ஐந்தாறு ஆண்டு பாடுபட்டால், ஆயிரம் ஐந்நூறு மீதம் பிடித்து, அரையோ காலோ ஏகர் வாங்கி, பிறகு ஏதோ கால்வயிற்றுக் கஞ்சிக்குக் குறைவில்லாமல் வாழலாம் என்று ஆசைப்பட்டுத்தான் சென்றனர்!

அவ்விதம் சென்றவர்களிலே ஒருவன்தான் மணி.

மணி என்பது செல்லப் பெயர்—முழுப் பெயர் சிவசுப்பிரமணியம்!

'அவர்' இருந்தால் 'ஆயிரம் ஆயிரமாகக் கொட்டி கொடுத்தாலும் உன்னை 'அக்கரை'க்கு அனுப்பமாட்டார்—என்று கூறிக்கதறி, பிறகு மணியின் நெற்றியிலே பிள்ளையார் கோயில் ஐயர் கொடுத்த (ஒரு அளவுக்கு) விபூதியைத் தடவி, ஆயிரம் தெய்வங்களை வேண்டிக் கொண்டு விடைகொடுத்தனுப்பினாள் கிழவி.

எப்போதாவது கொஞ்சம் போடும் வழக்கம் உண்டு, மணிக்கு!

அக்கரை சென்றதும் அந்த ரகமானவர்களின் 'நேசம்' அதிகமாக 'போடுவது' வேகமாக வளர்ந்தது. அது அவனைப் படாதபாடு படுத்திவிட்டது—கல்லறை அவனை அழைத்துக்கொண்டது.

கிழவிக்குத் தன் 'மகன்' அக்கரையில் இருப்பதாகவே நினைப்பு.

RangaRakes tamilnavarasam

'யாரிட்ட தீவினையோ, என்னை அவன் மறந்து விட்டான்' என்று எண்ணி வருந்தினாள்.

ஆயிரம் தெய்வங்களை மறுபடி மறுபடியும் வேண்டிக் கொண்டாள். தெய்வங்களுக்கு, இதுதானா வேலை? ஒரு திருவிழா முடிந்ததும் மற்றோர் திருவிழாவுக்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்வதற்கே காலம் போதவில்லை—அக்கரை சென்றவன் மனத்திலே புகுந்து, இந்த ஐயோ பாவத்தின் மீது பாசம் ஏற்படச் செய்யவா நேரம் கிடைக்கும்! அதிலும் கடல் கடந்து செல்ல வேண்டும்!

அந்தக் கிராமத்துக்கு பெரிய பட்டணங்களெல்லாம் பொறாமைப்படக்கூடிய பெயர் இருந்தது—பொன்னூர்!

ஜல்லடை போட்டுச் சலித்தெடுத்தால்கூட ஒரு குண்டுமணி பொன்னும் கிடைக்காத பட்டிக்காடு! அதாவது பிள்ளையார் கோயில் சாமியை தவிர! ஐயர் வீட்டிலே சோதனையிடத் துணிவு கொண்ட பாவிகள் உண்டா! மற்ற இடங்களிலே குண்டுமணி அளவு தங்கம்கூடக் கிடையாது. பெயர் மட்டும் பொன்னூர்!

பொன்னூருக்குப் பூர்வீகப் பெருமைகள் கூட உண்டு!

சீதாப்பிராட்டியாரை மயக்கிய மாயமான் ஓடி வந்தபோது கிளம்பிய 'தூசி' அங்கு படிந்ததால், பொன்மயமாகி விட்டதாம் அந்த ஊர்!

மாரிகோயில் திருவிழாவின்போது ஆடுவெட்டி ஆண்டியப்பன், கதை படிப்பான். அப்படிப்பட்ட பொன்னூர் அக்கரைச் சீமைக்குக் கூலிகளை அனுப்பும் 'பாக்யம்' பெற்று விட்டது.—அந்தத் தொகுதியிலே வெற்றி பெற்ற எம். எல். ஏ. கூட, கடல் கடந்த இந்தியர் பாதுகாப்புக் கமிட்டியில் ஓர் உறுப்பினர்—கமிட்டி கூடும்போது நாளொன்றுக்குப் பதினெட்டு ரூபாய் 'படி'ச் செலவு!

RangaRakes tamilnavarasam

கூடப் பெற்று வந்தார். 'அக்கரை'ச் சீமைக்கு 'அரும்பு மீசை' கிளம்பும்போதெல்லாம், கண்ணீரும் கம்பலையு மாகக் கிழங்கள் கூடிக் கூடிப் பேசும்.

போனதும் கடுதாசி போடுகிறேன்!

வீணா, ஏன் மனசை அலட்டிக்கிறே!

மாசாமாசம் தவறாமப்படிக்குப் பணம் அனுப்பி வைக்கிறேன்.

மாடு கண்ணு, ஜாக்ரதை!

மாரியம்மன் பண்டிகைக்கு, கிடா பலி கொடுக்க மறந்துடாதிங்க.

இவ்விதமெல்லாம் 'தைரியம்' கூறிவிட்டுத்தான் செல்கிறார்கள். அரும்பு மீசைக்காரர்—''உன் மகனும் கிளம்பி விட்டானா.....'' என்று கேட்கும் போதே, கிழவிக்குத் தன் மகன் அக்கரைக்குப் புறப்பட்ட நாளின் நிகழ்ச்சிகள் கவனத்துக்கு வரும்; 'இவனுக்காவது காளி யாத்தா நல்ல புத்தி கொடுக்க வேணும்'' என்று வாழ்த்து வாள்—மனத்துக்குள். அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, தன் மகனை எப்படியாவது கண்டுபிடித்து 'கடுதாசி'யைக் கொடுத்து, ஒரு காலணாக் கடுதாசி போடச் சொல்லும் படி வேண்டிக் கொள்வாள். 'ஆகட்டும் பார்க்கலாம்—அந்தச் சீமையிலே, அவன் எந்த மூலையிலே இருக்கிறானோ' நான் எந்தக் கோடியிலே வேலைசெய்யப் போறனோ, யார் கண்டாங்க. இருந்தாலும் கண்டா, கட்டாயமாக் கடுதாசியைக் கொடுத்து, புத்திமதி சொல்றேன்' என்று வாக்களிப்பான்; கப்பலுக்குக் கிளம்புவான். கண்ணுடா தங்கம்டா நீ!—என்று கிழவி வாழ்த்துவாள். பணம், சில குடிசைகளுக்கு வந்தது! கடிதம், பலபேருக்கு வந் தது. சிலர், 'நோய் நொடியுடன்' திரும்பி வந்துவிட்ட னர்!

RangaRakes tamilnavarasam

கிழவிக்கு மட்டும், காலணா கடுதாசியும் கிடைக்க வில்லை—திரும்பியவர்களிடமிருந்து மகனைப் பற்றிய செய்தியும் கிடைக்கவில்லை.

* * *

அன்று கிழவிக்கு, வழக்கமான வேலை கிடைத்து விட்டது—வண்டியோட்டி வரதன், அந்தப் பக்கத்திலே 'பஸ்' ஏற்பட்டுவிட்டதால், நொடித்துப் போனான்—ஆகவே வண்டி ஓட்டும் தொழிலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு, 'அக்கரை' போகத் தீர்மானித்துவிட்டான்—அவனிடம் 'கடுதாசி' கொடுத்தனுப்பும் வேலை, கிழவிக்கு.

''அவ குலுக்கி மினுக்கித் திரியும் போதே எனக்குத் தெரியும். அவ கெட்டுப்போவா என்பது'' என்று கூறு வார்கள் தலை நரைத்தவர்கள், வள்ளியைப்பற்றி. வள்ளி தவறியவள்!

ஆடுவெட்டி ஆண்டியப்பன் தாலி கட்டி வள்ளியைப் பெறவில்லை—தாலி கட்டிய தாண்டவன் காலமான பிறகு வள்ளி நெல் குத்தி ஜீவித்து வந்தாள். பக்கத்துக் கிராமத்திலே நெல் அரைக்கும் யந்திரம் அமைந்த பிறகு, அவளுக்குப் பிழைப்புக்கு வழி அடைத்துப் போய் விட்டது—ஆண்டியப்பன் அவளை ஜாடைமாடையாகக் கவனிக்க ஆரம்பித்தான்—வள்ளி, ''நாசமாப் போவான்—மாரி சரியான கூலி கொடுக்கப் போகிறா பார்''—என்று சபித்தாள்— அவன் அஞ்சவில்லை—அவள் ''அண்ணேன்'' என்று முறை கொண்டாடி, அரை, கால் கடன் கேட்டுப் பெற்றுவந்தாள். அவன் வட்டி கேட்கவில்லை. அசலைப் பற்றியும் கவலை காட்டவில்லை—அவள் புரிந்து கொண்டாள்—வெறுப்பாக இருந்தது—ஆனால் எவ்வளவு காலம் வறுமையுடன் போராடமுடியும்—''ஐயையோ! வேணாமுங்கோ'' என்று கெஞ்சும் குரலில் தொடங்கி, ''எப்பவும் கைவிட மாட்டாயே!'' என்று கொஞ்சும் குரலில் முடிந்தது, அவளுடைய வீழ்ச்சி''

வள்ளிக்கு, நாலு எழுத்து எழுதப் படிக்கத் தெரியும்.

RangaRakes tamilnavarasam

அவளிடம் சென்று, ஆயிரம் கண்ணே! கற்கண்டே! போட்டு, கிழவி கடிதம் எழுதச் சொன்னாள்.

''சிரஞ்சீவி மணிக்கு,

காளியாயி கடாட்சத்தாலே நான் இன்னமும் உசிரை வச்சிக்கிட்டுத்தான் இருக்கறேன். நான் ஒருத்தி இருக்க றேன் என்கிற நினைப்பே உனக்கு மறந்து போச்சா. உன்னைக் கண்ணாலே கண்டுவிட்டுச் செத்துத் தொலைக் கத்தான் நான் காத்துகிட்டு இருக்கறேன். கேவலம் ஒரு பிச்சைக்காரி போல இருக்கிறேன். நாலு நாளைக்கு ஒரு தடவை கூடச் சோறு கிடையாது. நான் இப்பவோ பின்னையோன்னு இருக்கிற இந்தச் சமயத்திலேகூட நீ ஊர் திரும்பாம இருக்கறது தர்மமா! ஒரே ஒரு தடவை வந்துபோ. உன்னைக் காணவேணும் என்கிற ஆசை என்னைக் கொல்லுது. நான் கண்ணை மூடறதுக்குள்ளே, ஒரு முறை பார்த்தாகணும். இங்கே நான் அனுபவிக்கிற தரித்திரம் சொல்லி முடியாது. ஒரு அஞ்சோ பத்தோ அனுப்பினா நாலஞ்சு கோழி வாங்கி வளர்த்து, முட்டை வித்து பிழைச்சுக்கலாம்—நான் சாப்பிட்டது போக மிச்சம் கூடக் கிடைக்கும்—பனிக் காலத்திலே உடல் வெவெடன்னு ஆடிப் பிராணனே போயிடற மாதிரி ஆயிடுது. ஒரு கம் பளிப் போர்வை அனுப்பினா, நல்லது.''

கிழவி சொல்லிக்கொண்டே வந்தாள்—வள்ளி எழு திக்கொண்டே இருந்தாள்.

''இன்னும் என்ன எழுதணும்—பெரிய பாரதமே எழுதியாச்சி—'' என்று சலித்துக் கொண்டாள் வள்ளி.

''கண்ணு! இன்னும் ஒரே ஒரு சங்கதி எழுதிடு'' என்று கெஞ்சினாள் கிழவி.

''சொல்லித் தொலை'' என்றாள் வள்ளி.



RangaRakes tamilnavarasam

கிழவி சொல்லத் தொடங்கினாள், ''உன்னாலே பணம் காசு அனுப்ப முடியாவிட்டாலும் பரவாயில்லை. நீ இங்கே வந்து சேர்ந்தா போதும். உன்னைக் கண்ணாலே பார்த்தாலே என் கஷ்டம் அத்தனையும் தீர்ந்து போகும். அடுத்த கப்பலுக்கே பொறப்படு.''

வள்ளி, கட்டாயப்படுத்திக் கிழவியை முடிக்கச் சொன்னாள்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் கிழவி, வரதன் குடிசைக்கு.

இதுபோல எத்தனை முறை அனுப்பினோம்—எவ்வளவு உருக்கமான கடிதங்கள்—எத்தனை சாமி மீது ஆணையிட்டு எழுதினோம்—ஏனோ அவன் மனம் துளிகூட இரங்கவில்லை—இந்தத் தள்ளாத வயதிலே என்னைத் தவிக்க விட்டுவிட்டு, அக்கரையிலே சுகமாக இருக்க, எப்படித்தான் அவனுக்கு மனம் வந்ததோ—என்றெல்லாம் எண்ணியபடி கிழவி சென்று கொண்டிருந்தாள்.

கடிதங்களைப் படிப்பதேயில்லையா—படித்துப் பார்த்தால், பகையாளியாக இருந்தால்கூடப் பரிதாபம் பிறக்குமே.

சரியாகப் படித்திருக்கமாட்டான்—ஒரு கணம் உருகுவான்; மறுகணமே மறந்துவிடுவான்—விளையாட்டுச் சுபாவம்—அல்லது வேலை அவ்வளவு கடினமோ, கடிதம் போடக்கூட நேரம் கிடைக்காதோ—என்ன மாயமோ, என்ன மர்மமோ என்று எண்ணிக் கொண்டே சென்றாள்.

''பாட்டியம்மா! பாதை ஓரமாப்போ..எதிரே காளை மாடு வருது.....'' என்று அன்புடன் கூறினான், கிராமத்துக்குப் புதிதாக வந்து குடியேறிய பாதிரியப்பன்.

கிராமத்தில் வைத்ய சாலை நடத்திக் கொண்டு, பச்சிலைகளைச் சேகரித்து ஏதோ ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தான் பாதிரியப்பன். கிராமத்தில் நல்ல

RangaRakes tamilnavarasam

மதிப்பு. கிழவியைப் 'பாட்டியம்மா' என்று அழைக்கும் ஒரே ஆசாமி, பாதிரியப்பன்தான்.

''டாக்டரய்யாவா'' என்று கேட்டுக் கொண்டே, அவன் கையைப் பிடித்துக் கொண்டாள் கிழவி. அவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது. கடிதத்தை மகன் சரியாகப் படிக்கிறானோ இல்லையோ என்ற சந்தேகம் போய்விட்டது. எழுதிக் கொடுப்பவர்கள் சரியாக எழுதிக் கொடுக்கிறார்களோ இல்லையோ என்ற சந்தேகமே ஏற்பட்டுவிட்டது. எனவே, கடிதத்தை எடுத்து டாக்டரிடம் கொடுத்து, 'அக்கரையிலே இருக்கிற என் மகனுக்கு அனுப்ப இந்தக் கடுதாசி—படித்துச் சொல்லுங்கோ, டாக்டர்! அந்தச் சிறுக்கி கிறுக்கினா, சரியா இருக்குதான்னு பார்க்கலாம்' என்று சொன்னாள். டாக்டர் கடிதத்தைப் பிரித்தார்—சிரிப்பு வந்துவிட்டது.

''என்ன டாக்டரு! சிரிக்கறிங்க.''

''யார் பாட்டியம்மா, கடுதாசி எழுதிக் கொடுத்தது''

''அவதான்—வள்ளி—ஒரு மாதிரியானவன்னு ஊர்லே பேசுவாங்களே, அந்தக் குட்டி—அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும்..''

''போக்கிரிப் பொண்ணு, பாட்டியம்மா அந்த வள்ளி! கடுதாசியிலே, எழுத்தே கிடையாது—கோலம் போட்டு வைத்திருக்கிறா....!

''என்னாது....கோலம் போட்டிருக்காளா....பாவி.. நான் சொல்லிக் கொண்டே இருந்தேன்; அவ எழுதிக்கிட்டே இருந்தா....''

''உன்னை அந்தப் பெண்ணு ஏமாத்தி விட்டிருக்கா! இருக்கட்டும் பாட்டியம்மா, நான் பார்த்துக் கண்டிக்கிறேன்.

RangaRakes tamilnavarasam

''இப்பத்தானே எனக்கு சூட்சமம் புரியுது. என் மகன் பேரிலே கோபித்துக் கொண்டேன் நானு, இந்தச் சூட்சமம் தெரியாததாலே. இந்தப் படுபாவிங்க ஒவ்வொருத்தரும், நான் கடுதாசி எழுதிக் கொடுக்கச் சொன்ன போதெல்லாம், இந்த வள்ளி செய்ததுபோலச் செய்து தான் என்னை ஏமாத்தியிருக்கிறாங்க. என் ஆசை மகனுக்கு ஒரு கடுதாசியும் போய்ச் சேர்ந்திருக்காது. அந்தக் கோபம் என் மகனுக்கு. அதனாலேதான் காலணா கடுதாசிகூட இவன் போடல்லே. டாக்டரய்யா! இப்படி ஒரு கிழவியை ஏமாத்தலாமா. நீங்களே சொல்லுங்க! இது தர்மமா?''

''வருத்தப்படாதீங்க பாட்டியம்மா—சாயந்திரமா வீட்டுக்கு வாங்க, நான் கடிதம் எழுதித் தருகிறேன்''

டாக்டரை வாழ்த்திக்கொண்டே கிழவி தன் குடிசைப் பக்கம் சென்றாள்.

வள்ளி வீட்டுக்குப் பாதிரியப்பன் சென்று, சற்றுக் கோபமாகவே கண்டித்தான்.

''அது ஒரு பைத்யம் · டாக்டரய்யா! நான் மட்டுமில்லை. நம்ம கிராமத்திலே யாருமே, கிழவி கடுதாசி எழுதச் சொன்னா, எதையாவது கிறுக்கித் தருவாங்க. அதுக்கு மூளை சரியில்லை; அதனாலே, இப்படி ஓயாம கடுதாசி எழுதிக் கொடு கொடுன்னு, உசிரை வாங்கும். அதனாலேதான் நான் கோலம் போட்டேன். தப்பா எண்ணிடாதிங்க. அக்கரையிலே அதுக்கு மகனும் இல்லை. மகளும் இல்லை. அவன் எப்பவோ செத்துப் போயிட்டிருப்பான்—உயிரோடு இருந்தா இத்தனை காலமுமா ஒரு காலணா கடுதாசி போடாதிருப்பான். இங்கே இது பைத்யம் பிடித்துப் போயி, இப்படித் தலைவிரிகோலமா இருக்குது டாக்டரய்யா. நீங்க ஒண்ணும் வித்யாசமா எண்ணிடாதிங்க. அது பைத்யம்'' என்று வள்ளி, சமாதானம் கூறினாள். டாக்டருக்குத் திருப்தி ஏற்படவில்லை.

RangaRakes tamilnavarasam

''என்ன காரணம் சொன்னாலும், நீ செய்தது தப்பு வள்ளி—ஒரு தள்ளாத கிழவியை இப்படி ஏமாத்துவது பாபம்'' என்றார்.

''ஐயோ, ஐயோ....நீங்க ஒரு உலகம் தெரியாதவரு.. அந்தக் கிழத்துக்குப் புத்தி பேதலிச்சுப் போயிருக்குதுங்க. அதுக்கு மூளை சரியா இருந்தா ஏன் அக்கரை போனவனை நினைச்சிகிட்டே கிடக்கோணும், இப்படி, ஐயா, அம்மான்னு பிச்சை எடுத்துப் பிழைக்க வேணும்—மலையாட்டமா இருக்கிறானே மற்றொரு மகன்—அவனோடு போய் இருந்துகிட்டு, வயிறாரச் சாப்பிடக் கூடாதா—நிம்மதியா கிடக்கலாமே'' என்றாள்.

''மற்றொரு மகனா? கிழவிக்கா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பாதிரியப்பன்.

''நீங்க கிராமத்துக்குப் புதுசுதானே,தெரிந்திருக்காது. கிழவிக்கு இன்னொரு மகன் இருக்கறான்—பெரிய அந்தஸ்து இல்லைன்னாலும், வயிறார கஞ்சி ஊத்தக் கூடியவன்தான்—சமுசாரி—அடுத்த கிராமத்திலே இருக்கிறான்—சன்னாசின்னு பேரு....'' என்று விவரம் கூறிக்கொண்டே இருக்கும்போது, தொலைவிலே ஆண்டியப்பன் வருவதைக் கண்டு, ''அதோ அது வருது. மூக்குமேலே கோபம்! அதுக்கு நாம்ப களங்கமத்து பேசிகிட்டு இருந்தாக்கூட, என்னமோ ஏதோன்னு சந்தேகப்பட்டுகிட்டு சண்டைக்கு வந்து தொலைக்கும். நீங்க போய் வாங்க டாக்டரய்யா—பக்கத்து கிராமம்—சன்னாசி—அவனையே கேட்டுப் பாருங்க, கிழவியோட சமாசாரம் புரிந்து போகும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

சன்னாசி பெரிய குடும்பஸ்தன். நாணயமானவன்.

பெரிய வைக்கோற்போரைச் சரிபடுத்திக் கொண்டிருந்தான், டாக்டர் அவனைப் பார்க்கச் சென்றபோது.

''ஆமாங்க! என் மானத்தை வாங்கவே, அந்தக் கிழம் அப்படிச் செய்யுது. தலை இறக்கமாத்தான் எனக்கு

RangaRakes tamilnavarasam

இருக்குது. தடியாட்டமா நான் இருக்கறேன். சோத்துக்கும் துணிக்கும் குறைச்சல் கிடையாதுங்க-இங்கே வந்து விழுந்து கிடன்னு ஆயிரம் தடவை வந்து கெஞ்சி கேட்டாச்சிங்க, ஒரேபிடிவாதமா வரமாட்டேங்குது. அங்கே பட்டினி கிடக்குது. பிச்சை எடுக்குது—எனக்கு மானம் தாங்க முடியலிங்க''

''என்னா விரோதம் உன்னிடம்? உன் சொந்தத் தாயார்தானே?''

''என்னைப் பெத்தவங்கதான்! குழந்தையிலேயே என்னை இங்கே கொடுத்துவிட்டாங்க—இங்கேன்னா, இதுவும் 'அன்னியரிலா, அசலாரிலா'— எங்க சின்னம்மா வீடுதான்.''

''உங்க சின்னமாவிடம் விரோதமா?''

''ஒரு இழவும் கிடையாதுங்க. ஆனா இங்கே நான் வந்ததிலே இருந்து, எங்க அம்மா காலடி எடுத்து வைக்கற தில்லே. அது என்ன வைராக்கியமோ, போங்க, என் கல் யாணத்துக்குக்கூட, பத்துபேர் வர்ரதுபோல வந்துவிட்டு, ஒருவேலை கையை நனைச்சிட்டுப் போனதுதான். நான் காலிலே விழுந்து கும்பிட்டுக் கூப்பிட்டாக்கூட வரமாட் டேங்குது—காரணமும் சொல்றதில்லே—எனக்குச் சில சமயம் வருகிற கோபம், அதை வெட்டிப் போட்டுவிட லாமான்னு கூடத் தோணுது போங்க. ''உங்க அம்மா அங்கே பிச்சை எடுத்துக்கிட்டு இருக்கறாடாப்பா, ஏன் அப்படி அவளை அலையவிடறே''ன்னு யாராவது கேட்டா என் மனசு என்னா பதறிப் போகும், நீங்களே சொல் லுங்க. இப்படி என் மனசை எரியச்செய்துகிட்டு அங்கே கிடக்குது, நான் என்ன செய்ய?''

''சன்னாசி! கோபிக்காதே உன் சம்சாரத்தோட ஏதாச்சும்.....''

''அவ 'அப்பிராணிங்க'—மாமியார் காலிலே விழுந்து கும்பிட்டா புண்யம்னு எண்ணுகிறவ. அவளும், அவ

ளாலே ஆனமட்டும் கூப்பிட்டுப் பார்த்தாச்சி. நம்ம 'கொழந்தை'கள் கூப்பிட்டே வரலே, போங்களேன்.''

''என்னப்பா இது அதிசயமா இருக்கு.''

''அதிசயமா? அக்ரமம்னு சொல்லுங்க டாக்டரய்யா! வர்ற பழி வரட்டும்னு அதை அடிச்சுக் கொண்ணுபோட லாமானுகூட ஆத்திரம் வருது, தெரியுங்களா?''

டாக்டர் பாதிரியப்பனுக்குப் பச்சிலை ஆராய்ச்சியிலே கூட மனம் செல்லவில்லை. இந்தக் கிழவியின் விசித்திரப் போக்கு அவருக்கு மனக் குழப்பமே உண்டாக்கிவிட்டது. கிழவியைக் கண்டே கேட்பது என்று தீர்மானித்தார்.

* * *

''அவன் பேச்சை மட்டும் எடுக்காதிங்க.....''

''அவன் நல்லவனா இருக்கானே பாட்டி.''

''தங்கமானவன்.....அவன் சம்சாரம் குணசாலி.... எவ்வளவோ அன்பாத்தான் என்னைக் கூப்பிடறாங்க.... ஆனா.....''

''என்ன அனாவும் ஆவன்னாவும்....''

''அவன், என் மகனில்லிங்க....''

''உன் மகனில்லையா.....உனக்கென்ன வள்ளி சொன்னதுபோல, மூளை குழம்பி இருக்குதா.....உன் மகன் இல்லையா......

''நான் பெத்தவன்தான் சன்னாசி.....ஆனா...டாக்டரய்யா, இதை மனசோட போட்டுவையுங்கோ.....முக்கியமா அவனுக்குத் தெரியப்படாது....தெரிந்தா குடும்பத்துக்கே ஆபத்து.....நான்தான் பெத்தேன்.....ஆனா, அவன் பேய் மகன்.....''

RangaRakes tamilnavarasam

''பைத்யமேதான் உனக்கு. பேய் மகனாவது பூதத்தின் மகனாவது.....என்ன கிழவி உளறிக் கொட்டறே......''

''உங்களுக்கெல்லாம், என்ன தெரியும்.....இந்தக் காலத்துப் பிள்ளைங்க....சன்னாசி, பேய்க்குப் பொறந்தவன் அவனுக்கும் தெரியாது. கிராமத்திலே யாருக்கும் தெரியாது....இப்ப உங்ககிட்ட சொல்கிறேன்—பேய்க்குப் பொறந்தவன் சன்னாசி—அதனாலேதான், பொறந்த மூணாமாசமே அவனை என் தங்கச்சிக்குத் 'தத்து' கொடுத்து விட்டேன்.''

''பாட்டி! உனக்கு மூத்தமகன் அக்கரை போயிட்ட துக்கத்தாலே மூளை குழம்பியிருக்கு....''

''கேள் டாக்டரய்யா....மூளையாவது குழம்பறதாவது....மணி பொறந்து அஞ்சு வருஷத்துக்குப் பிறகு, இவன் பொறந்தான்.....இவன் என் வயிற்றிலே கரு தரிக்கிறதுக்கு ஒரு வருஷத்துக்கு முந்தி, என்னை திருக்குளத்துப் பேய் பிடிச்சிடுச்சி. பேயை ஒட்ட 'அவரு' படாத பாடு பட்டாரு—செலவு கண்மண் தெரியாம செய்தாரு—அந்தப் பாழாப்போன பேய் ஒழியமாட்டேன்னு சொல்லிடிச்சி. சூடுவைச்சி பாத்தாங்க, தலைமுழுக்கு, வேப்பஞ்சேலைகட்டி மாரியம்மன் கோயிலிலே சுற்றி வர்ரது;ஒண்ணு பாக்கியில்லை. திருக்குளத்துப்பேய் எதுக்கும் மசியல்லே. எனக்குப் பேய்பிடிச்சிருந்த போதுதான் கரு தரிச்சுது. இந்தப் பய பொறந்தான்—அவனைத்தான் நீங்க பார்த்தீங்களே—இலட்சணமாயிருப்பான்—அவன் பொறந்ததும், ஊர்க்கோடியிலே இருந்த ஒரு பிரம்மாண்டமான புளியமரம் வேரோடச் சாய்ந்து கீழே விழுந்தது....இடி இடிச்சி, மாரியம்மன் கோயில் கோபுரத்திலே விழுந்து, அதை அடிச்சித் தள்ளிவிட்டுது; எங்க வீட்டிலே இரண்டுபடி கறக்கும் அருமையான பசுமாடு, அது 'காவ், காவ்'னு கத்திக்கிட்டே கீழே 'தொபீல்'னு விழுந்து செத்துப் போச்சு, அப்பப்பா! அவன் பொறந்ததும் ஊருக்கே பெரிய ஆபத்துன்னு வையுங்களேன், அப்படியெல்லாம் நேரிட்டுது.

RangaRakes tamilnavarasam

இதோடு போச்சா! அவரு, அவங்க அப்பாரு, நல்லா இருந்த மனுஷனுக்குக் காச்சல் கண்டு, வாயிலே நொப்பும் நொரையும் தள்ளி, கைகால் இழுப்பு வந்து டிச்சி. எனக்குப் பயம், சந்தேகம், துக்கம். பூஜாரியைக் கூப்பிட்டு, என்னய்யா இதுன்னு கேட்டேன், ''எல்லாம் திருக்குளத்துப் பேய் செய்கிற வேலை''ன்னு சொல்லி விட்டு, அவன் சொன்னான்: ''உன் குடும்பமும் இந்தக் கிராமமும் நாசமாகாமே இருக்க வேணும்னா, முத்தம்மா! இந்தச் சிசுவை நீ வளர்க்கக் கூடாது. இது பேய்க்குப் பொறந்தது. அதனாலேதான் இவ்வளவு ஆபத்து. இதை நீ உன் வீட்டிலே வளரச் செய்தே, ஒரே வருஷத்திலே அப்பனை முழுங்கிவிடும்; பிறகு, நீ, உன் மூத்த மகன், இப்படி 'காவு' வாங்கிக் கொண்டே இருக்கும். அதனாலே இதை வேறே யாருக்காவது 'தத்து' கொடுத்து விடு. உன் பிள்ளை என்கிற எண்ணமே கூடாது. நீயும் 'இதுவும்' ஒரே கூரையிலே இருந்தாலே ஆபத்துத்தான். ஒரு ஐஞ்சு நிமிஷத்துக்கு மேலே, நீ இதைப் பார்த்தாக் கூட ஆபத்து ஏற்படும். இது பேய்க்குப் பொறந்தது'' என்று சொன்னான். மூணா மாசம் என் தங்கச்சி தூக்கி கிட்டுப் போனா. அதிலே இருந்து அங்கேயே அவன் இருந்து கிட்டான். ஆனதாலேதான் டாக்டரய்யா, நான் அவனோட போய் இருக்க முடியறதில்லை, இதை அவனுக்குச் சொல்ல வும் கூடாதுன்னு பூஜாரி சொல்லியிருக்கறான். மகன் என்கிற பாசத்தாலோ, இந்தத் தள்ளாத வயதிலே நிம் மதியா இருக்கலாமே என்கிற எண்ணத்தாலேயோ, நான் அவனோடபோய் இருக்கறதுன்னா, என்னாலே, ஊருக்கே நாசம் வந்துவிடுமே. அந்தப் பாவத்தைச் சுமக்கச் சொல் றீங்களா. அவனும் குழந்தை குட்டிகளோட இப்ப சுகமா இருக்கறான்—நானும் அவனும் ஒரே கூரையின் கீழே இருக்க ஆரம்பிச்சா, அந்தப் பேய் அவன் குழந்தை குட்டி களையும் 'காவு' கேட்டுவிடும். அதனாலேதான், 'அக்கரை' போயிருக்கிற என் மகன் வருகிற வரையிலே என்ன வேத னையானாலும் அனுபவிச்சிகிட்டு இருக்கறதுன்னு ஏற்

பட்டுப் போச்சு'' என்று கிழவி கூறினாள். அப்போது டாக்டருக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவே இல்லை. ''எங்கே அந்தப் பூஜாரி?'' என்று கோபமாகக் கேட்டார்—''அவன் செத்து வருஷம் ஆறு ஆவுதே'' என்றாள் கிழவி.

என்ன செய்வான் பாதிரியப்பன்! பேயாவது பூதமாவது, சாபமாவது என்று சொன்னால், கிழவியால் நம்ப முடியுமா! பல கலை வல்லவர்களே அந்த மயக்கத்திலிருந்து விடுபட முடியாது தவிக்கிறார்கள்—இந்தக் கிழவிக்கு 'பகுத்தறிவு' வாதம்செய்து காட்டி, பேய் பூதம் பிசாசு என்பதெல்லாம் கட்டுக்கதை, பூஜாரி ஒரு புரட்டன், அவன் சொன்னது அத்தனையும் அர்த்தமற்றது என்று ஒப்புக் கொள்ளும்படி எப்படிச் செய்யமுடியும்? ஆக்ஸ்போர்டும் கேம்ப்ரிட்ஜும் படித்துவிட்டு, மனைவிமார்களை அரசமரம் சுற்றிவரச் செய்வதற்கு, அமெரிக்கன் மாடல் மோடாரில் அனுப்பி வைக்கிறார்கள். இந்தக் கிழவிக்குப் பகுத்தறிவு புகட்டவா முடியும்?

''பாட்டி! எவனோ ஒரு மூடன் சொன்னதை நம்பி, நாசமாகித் தொலைக்காதே'' என்று கூறினார்.

''மூடனா! யாரைச் சொல்கிறாயப்பா? பூஜாரியையா! செச்சே! அவனுக்கு, ராமாயணம், பாரதம், கந்தபுராணம், எல்லாம் மனப்பாடம். ஜோதிடம் தெரியும். இந்தப் பக்கத்திலேயே, ரொம்ப கிராக்கி அவனுக்கு'' என்று கிழவி கூறிவிட்டு, 'ஏன் இந்தக் காலத்திலே, இதை எல்லாம் நம்ப மறுக்கிறார்கள்' என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டாள்.

என்ன செய்வதென்று தெரியாமல், சிலைபோலானார் டாக்டர்.

''டாக்டரய்யா! என் வினை அது! அதுக்கு யார் என்ன செய்ய முடியும். விட்டுத் தள்ளுங்க. நீங்க வீண் பொழுதை ஓட்டாதபடிக்கு, ஒரு கடுதாசி எழுதிக்கொடுங்க'' என்று கெஞ்சினாள்.

RangaRakes tamilnavarasam

டாக்டரின் கண்களிலே நீர் கசிந்தது—கோபமும் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

ஆனால், அவர் யார்மீது கோபித்துக் கொள்வது?

# 5
# ஒரு முட்டாளின் கதை!

'அவன் ஒரு முட்டாள்!'—

ஊர் சொல்லிற்று, இப்படி.

அவன் ஒரு முட்டாள்; ஏனென்றால், அவன் படிக்கவில்லை.

''ஆமாம்! நான் படிக்காததால் முட்டாள்தான்'' என்று மறுக்காது ஒப்புக் கொண்டான்.

படிக்காதது மட்டுமல்ல; உலகப் போக்கையே உணராதவன், ஏரும் கலப்பையும் தவிர ஏதும் தெரியாது.

''உண்மைதான்; எனக்கு எதுவும் தெரியாது'' என்று மனதார ஏற்றுக் கொண்டான்.

* * *

''முட்டாள்!''

''முழு மூடம்!!''

''மக்கு! அசடு!''

''மானம் போகிறது, என்னுடைய தம்பியென்று சொல்லிக்கொள்ள....''

''எனக்குந்தான் அண்ணா! உன்னைப்பற்றி யாராவது கேட்டால், சேனையிலிருக்கிறார் என்று பெருமையுடன் சொல்ல முடிகிறது. என்னைப் பற்றியும் வியாபாரி என்று ஆனந்தத்துடன் அறிவிக்க முடிகிறது. ஆனால்,

நம்முடைய தம்பியைப்பற்றிச் சொல்லும்போது, ''அவன் ஒரு முட்டாளுங்க'' என்று முடிக்கவேண்டி இருக்கிறது''

''முட்டாளா யிருந்தாலும் தம்பி! அவன் மெய் சோர உழைக்கிறான்.....''

''நாம் மட்டும் உழைக்காமலா உண்கிறோம்? வீணன் அவன்; வியாபார முறையும் தெரியான்; உன்னைப் போல் வீரனாகவும் வழி அறியான். உடம்பைத் தேய்ப்பதைத் தவிர வேறேது வழி அவனுக்கு?''

* * *

''ஏய் முட்டாள்!''

''அண்ணா.....''

''அப்பா உன்னைக் கூப்பிடுகிறார்.''

''கழனி முழுவதையும் உழுதுவிட்டுப் பிறகு பார்ப்பதாகப் போய்ச் சொல்லு அண்ணா''

''பிறகு உழலாம். வா, வா,!''

''வர முடியாது அண்ணா! எடுத்த வேலையை முடித்துவிட்டுத்தான் உங்கள் முட்டாள் தம்பி வருவான்!''

* * *

''என்ன, எங்கே அவன்?''

''அந்த முட்டாள் இப்போது வர முடியாது என்கிறான், அப்பா.....''

''ஏன்?''

''எடுத்த வேலையை முடித்துவிட்டுத்தான் வருவானாம், முட்டாள்.''

''முட்டாள்தான் அவன். சேனையிலிருக்கும் நீ கூப்பிட்டும், சேற்றிலிருந்து கரையேற விரும்பாது உழைக்கும் அவன் ஒரு முட்டாள்தான்.....''

RangaRakes tamilnavarasam

''என்னப்பா, என்னமோபோல் பேசுகிறீர்கள்.''

''இல்லை மகனே! உண்மையைச் சொன்னேன். மூத்த மகனான நீயோ பெரிய வீரன்—போரில் புலி—ராஜதந்திரி. அரசுகளுக்கு வாழ்வு தரவும், விரும்பினால் மண்ணாக்கவும் முடியும் உன்னால். உன்னுடைய இரண்டாவது தம்பியோ, நகரமே அஞ்சும் பெரிய வியாபாரி. தராசு இருக்கிறது அவனிடம்; துப்பாக்கி இருக்கிறது உன்னிடம். காசு அவன் கையில்; அதிகாரம் உன் விரலசைவில்- இவை ஏதும் இல் லாத உங்கள் கடைசித் தம்பி முட்டாளாக இருக்கிறான். அப்பன் பாட்டன் தேடிவைத்ததை உழுது அறுத்து, வீட்டுக்குக் கொண்டு வருகிறான்....பாரேன்....நீங்கள் போய் கூப்பிட்டும்கூட, வேலை முடித்து விட்டு வருகிறேன் என்கிறான். இந்த முட்டாளுக்கு நீங்கள்தாம் பக்க பலமாயிருந்து உதவி ஒத்தாசை எல்லாம் புரியணும்....''

''அதெல்லாம் செய்யறோம் அப்பா! நாங்கள் வந்த வேலையை முடித்து சீக்கிரம் அனுப்புங்கள். வியாபார நேரம் இது கடையில். அண்ணனுக்கும், அரசரைச் சந்திக்க வேண்டிய நேரம் இது.''

''அப்படியா...! சரி, இதற்கு அவன் என்ன வருவது? நான் சம்பாதித்த சொத்து! என் இஷ்டப்படி செய்தால், யார் என்னைக் கேட்கமுடியும்?''

''யார் உங்களைக் கேட்க முடியும், அப்பா?''

''அதனாலே, தம்பிகளே, இரண்டு பேரும் சுகமாகத் திரும்பிப்போய், உங்களுடைய வேலைகளைச் செய்யுங்கள்! ஏதோ, ஒரு வழியிருக்கிறது உங்களுக்கு, வாழ! அவனோ, முட்டாள்! மக்கு! மடையன்! அவனுக்கே எல்லா சொத்தும் இருக்கட்டும்!''

* * *

தந்தையின் தீர்ப்பு கேட்டுத் தவித்தனர், இருவரும். ஏனெனில், அதிகச் சரக்கு வாங்கிப் போட்டு வியாபாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக வந்தான் ஒரு

RangaRakes tamilnavarasam

மகன். இன்னொரு மகன், பணக்காரி ஒருத்தியை வீட்டுக் காரியாக்கிக் கொண்டதால், சேனையில் கிடைக்கும் சம்பளம் போதாமல், தன் பங்கை விற்றுப்போகலாமென வந்தான். தந்தையின் தீர்ப்போ, இப்படியிருக்கிறது! என்ன செய்வது?—என்று ஏங்கிக் கொண்டிருக்கும்போது, கழனி வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, வந்தான் தம்பி! அண்ணன்மார், வந்த விபரத்தை அறிந்ததும், அப்பாவிடம் வாதாடி, இருவருக்கும் சொத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னான். அண்ணன்மார்களிருவரும் வாங்கிக் கொண்டனர். வெளியில் சென்றதும், தங்கள் தம்பியைப் பற்றி, ''சுத்த முட்டாள்! இல்லாவிடில், அப்பா முடியாது என்று சொல்லியும், அவரிடம் சண்டை போட்டு தனக்குச் சொந்தமான சொத்துக்களை இப்படி இழப்பானா?'' என்று இருவரும் மனத்துக்குள் எண்ணாமலா, இருப்பார்கள்? நகர வாசிகளாயிற்றே!

எண்ணினார்கள்; ஆனால் ஒருவருக்கொருவர், காட்டிக் கொள்ளவில்லை. தெரிந்தாலும், தெரியாதது போலக் காட்டிக் கொள்வதுதானே, படித்தவர்களின் பண்பு—அதனால்!

* * *

'முட்டாள்' உழுது கழனியே கதியென்று கிடக்கிறான்.

'வீரன்' அரசர் படையில் தளபதி ஆகிவிட்டான்.

'வியாபாரி' நகரிலேயே பெரிய சீமானாகி விட்டான்.

* * *

என் தோழன் வீரனைப் பார்த்து, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது, எனக்கு! அதனால் அவன் சொன்ன இந்த 'முட்டாள்' புராணத்தைச் சலிக்காது, கேட்டுக் கொண்டிருந்தேன்! இப்போதோ, கதை முடிந்துவிட்டது—கருத்தில்லாமல், கதை சொல்லும் வீணனல்ல, வீரன். எனவே, கேட்டேன்.

RangaRakes tamilnavarasam

"வீரா! எதற்காகப்பா, இந்தக் கதை. எங்கோ ஆரம்பித்து எங்கோ போய் முடித்துவிட்டாயே....மூன்று அண்ணன் தம்பிகளைப்பற்றிய கதைக்கு இப்போது என்ன காரணம்?"

"காரணமின்றி, நான் எதையும் சொல்லமாட்டேன் தோழா! கடந்த சில நாட்களாகப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்து வருகிறாயோ?"

"ஆந்திரத் தேர்தலைப் பற்றிக் கேட்கிறாயா?"

"கேள்விக்குப் பதில்!பத்திரிகைகளைப் பார்க்கிறாயா, நாள் விடாமல்?"

"என் தொழிலாயிற்றே, அது!"

"சரி! காசியில் சிலபேர் கூடி 'முட்டாள்கள் சங்கம்' வைத்ததாகவும், கல்கத்தாவில், 'முட்டாள்களின் மாநாடு' ஒன்றே நடந்ததாகவும் வந்த செய்திகளைப் பார்த்தாயா?"

"பார்த்தேன்!"

"அந்தச் செய்திகளைப் பற்றி என்ன சொல்கிறாய்!"

"என்ன இருக்கிறது சொல்ல!"

"சொல்ல என்ன இருக்கிறதா? தோழா! கல்கத்தாவிலும், காசியிலும் இருப்போர் வேடிக்கைக்காகக் கூட அப்படிச் சங்கங்கள் வைத்திருக்கலாம். ஆனால், படித்தவர்கள், பண்டிதர்கள் என்று சொல்லப்படுகிறவர்களைவிட 'முட்டாள்'களே மேல் என்று எண்ணுகிறேன் நான். இதனால், படிப்பையும் புதுமையையும் குறை சொல்கிறேன் என்று எண்ணாதே. அவைகள், சமூகத்தில், எல்லாருக்கும் கிடைக்கவில்லை! ஒரு சிலர்தான், அந்தப் பாக்கியத்தைப் பெறுகின்றனர்! அப்படிப் பெற்றவர்களால் உண்டாகும், சண்டை சச்சரவு, சமாதான முழக்கம் ஆகியவைகளைவிட முட்டாளின் மௌனம் எவ்வளவோ மேல், ஒன்று நினைவிருக்கிறதா, உனக்கு?"

RangaRakes tamilnavarasam

''என்ன?''

''உங்களைப் போன்ற பொதுப்பணியாளர்களை யெல்லாம் 'முட்டாள்' என்று, உலகமே போற்றும் பண்டித நேரு ஏசி வீசிய ஞாபகம்''

''அதை மறக்க முடியுமா?

''முட்டாள்கள் என்று கேவலமாகச் சொன்னார். அந்தப் பெயரை, நற்காரியம் செய்வோர், தங்களுக்குச் சூட்டிக்கொண்டு, ஊர் வேலைகளில் ஈடுபடுகிறார்கள், கல்கத்தாவிலும் காசியிலும், நிர்வாணபுரியில், ஆடை உடுத்தியவனைப் பித்தன் என்று அழைத்தால், அவனுக்கென்ன! அந்த 'பித்தன்' என்கிற பெயரை வைத்துக் கொள்வதால், என்ன நஷ்டம்? ஒன்றும் இல்லையல்லவா! அதுபோலவே, காசி கல்கத்தா புதுமை விரும்பிகள்.

''நல்லது செய்வதே எம் பணி. அப்படி நல்லது செய்வதை இந்தச் சமூகத்திலிருப்போர் முட்டாள்தனம் என்று சொல்லுகிறார்கள். அது முட்டாள்தனம் என்றால், நாங்கள் முட்டாள்கள்தான். அந்தப் பெயரைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுகிறோம். அதற்காக, நாங்கள் செய்கிற வேலையை விட்டுவிடமாட்டோம்,'' என்று 'முட்டாள் சங்கம்' நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.....''

வீரா! உன் விளக்கம், சரி. அதற்கும், தலைப்பிலே சொன்ன கதைக்கும் என்ன சம்பந்தம்?''

''என்ன சம்பந்தமா? காசி கல்கத்தாவிலிருப்போரைப் போன்ற, ஒரு முட்டாளை நான் பார்த்தேன்.''

''நேரிலா?''

''புத்தகத்தில்! ரஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாய் எழுதிய, ஒரு நூலில், அதன் ஆரம்பத்தைத்தான் தலைப்பில் தந்தேன்.''



RangaRakes tamilnavarasam

''கதை, இன்னும் முடியவில்லையா?''

''ஆரம்பத்தைத்தானே சொன்னேன். இப்போது, மீதிக் கதையையும் கேள். அதில் பொதிந்திருக்கும், கருத்துரை—சேனைகளுக்கென வாங்குகிற வரியில் பாதிப்பணத்தைக் கரியாக்கியும், வியாபாரிகளைக் கண்டால் விசேஷ கவுரவங்கள் அளித்தும், அதே நேரத்தில் விவசாயி என்றால் அலட்சியமும் வரிச்சுமையும் விதிக்கும் அரசுக்கு, மிகவும் தேவையான கருத்துரை. எழுதியவர், டால்ஸ்டாய். கற்பனை! எனவே, அவர் தரும் உருவகங்களைப் பார்—உருவங்களை எண்ணாதே.''

* * *

'பாகப் பிரிவினை' விஷயத்திலே சகோதரர்களுக்குள் எவ்வித சச்சரவும் ஏற்படாததை 'சாத்தான்' பார்த்தான்! தன்னுடைய குட்டி 'சாத்தான்'கள் மூன்று பேரை அழைத்து ''அந்த முட்டாள் பயலால், நமது காரியம் முறியடிக்கப் பட்டுவிட்டது. எப்படியாவது இவர்கள் மூவரையும் சண்டைபோடும்படி செய்யுங்கள்,'' என்று அனுப்பினான்.

முதல் 'சாத்தானின்' வேலை ஆரம்பமாயிற்று. தளபதியான அண்ணன், அரசனுடைய உத்தரவுப்படி, நாடு பிடிக்கும் ஆசைக்கு ஆளாகி, போர் தொடுத்துச் சென்றான். போருக்கு முதல் நாள் அவன் கொண்டு சென்ற பீரங்கி மருந்துகளின் மீது மழை பெய்ததால், நனைந்து எதற்கும் உபயோகமில்லாமல் போயிற்று. அதனால், தோற்றான்! படைகள் சின்னாபின்னமடைந்தன. இதைக் கண்ட அரசன், 'தளபதியே காரணம்' என்று சொல்லிக் கடுமையான தண்டனை கொடுத்து, சொத்துக்கள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்துகொண்டு, விரட்டிவிட்டான்.

இரண்டாவது சாத்தான், வியாபாரியின் மனதில் பேராசைகளைத் தூண்டி விடவே, அவன் ஏராளமான சரக்குகளை வாங்கிக் குவித்தான். விலை இறங்கிற்று! விளைவு, பெருத்த நஷ்டமடைந்தான், இவன்.

RangaRakes tamilnavarasam

'முட்டாளிடம்' சென்ற சாத்தான், அவனது வேலைக்குக் குந்தகம் செய்ய பல வழிகளில் முனைந்தான்! முட்டாள் உழவன், 'முயற்சியே பெரிது' என நம்பியதால் சாத்தான் தோற்று, சாக வேண்டியதாயிற்று. அதைக் கண்ட, தளபதியிடம் சென்ற சாத்தான் வந்து, முட்டாளிடம் முயல, அதன் வால் அறுந்தது, ஏழை உழவனிடம்! 'ஐயோ! என்னை விட்டுவிடு. உனக்கு ஒரு வித்தை காட்டுகிறேன்'' என்று சொல்லி, வைக்கோல் தாள்களைக் கொண்டு, சேனா வீரர்களை உண்டாக்கும் வித்தையைச் சொல்லிக் கொடுத்து ஓடிவிட்டது. அந்த வீரர்களால் என்ன பிரயோசனம் என்று தெரியவில்லை, ஏழை முட்டாளுக்கு! எல்லாரையும், இசைக் கருவிகள் ஏந்தி, கானம்பாடச் சொல்லிக் கேட்டுவிட்டு, பிறகு அவர்களை வைக்கோல் தாளாக மாற்றினான்!

வியாபாரியை வீழ்த்திய சாத்தானும் ஏழை முட்டாளிடம் வந்து, முயன்று தோற்றது. உயிர் போகும் தருவாயில், முட்டாளுக்கு அதுவும் ஒரு 'வரம்' கொடுத்தது. அதன்படி, மரத்திலுள்ள இலை தழைகளைக் கொண்டு, தங்கம் தங்கமாக மாற்றும் வித்தையைப் பெற்றான்! அந்தத் தங்கத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? சாப்பிட முடியுமா?—அதனால், அவனுக்கு, அதன் பிரயோசனம் எதுவும் விளங்கவில்லை. மறுபடியும் இலைதழைகளாகவே ஆக்கினான்!

இது தவிர, தோற்றோடிய இன்னொரு சாத்தானால் நோயாளிகளைக் குணப்படுத்தும் வேர்களும் அவனிடம் கிடைத்தன.

வீராதி வீரனென்று பேர்பெற்று இப்போது விரட்டப் பட்ட முதல் அண்ணனும், சிறந்த வியாபாரியென்று ஊர் மெச்ச வாழ்ந்து இப்போது ஓட்டாண்டியாகிவிட்ட இரண்டாவது அண்ணனும், எங்குபோய் வாழ்வதென்று தெரியாமல் கடைசியில், 'முட்டாளே கதி', என்று வந்தனர்.

RangaRakes tamilnavarasam

அவர்களை, முட்டாள் ஆசையோடு வரவேற்றான்.

தான் குடிக்கும் கூழில், அவர்களுக்கும் பங்கு கொடுத்தான்.

தளபதியின் மனைவி, நகர வாசி—நாகரீக நங்கை. அவளுக்கு, முட்டாளின் அருகில் அமர விருப்பமில்லை. ''ஐயோ, நாதா! அவன் மீதிருந்து வீசும், வியர்வை நாற்றம் குடலைப் பிடுங்குகிறது. அவனருகில் உட்கார்ந்து சாப்பிட முடியாது'' என்றாள்.

கணவன், உடனே முட்டாளிடம், ''என் மனைவிக்கு உன் நாற்றம் பிடிக்கவில்லை. நீ கொஞ்சம் வெளியே போய்ச் சாப்பிடு'' என்றான்.

''ஆகா, அண்ணா! உன் இஷ்டம்'' என்று சொல்லி, முட்டாள், மறுவார்த்தை பேசாமல் குதிரைக் கொட்டி லில்போய் வசிக்கலானான்.

வியாபாரியும், தனது மனைவியுடன், 'முட்டாளே கதி' என்று வந்தான். அவன் மனைவியும் ''இந்தக் கோமாளியுடன் அமர்ந்து என்னால் சாப்பிட முடியாது'' என்றாள். இரண்டாவது அண்ணனும், ''ஏ! முட்டாள் தம்பி, எங்களருகில் வராமல் கொஞ்சம் ஒதுங்கியே இரு,'' என்று சொன்னான்.

இவன்தான் முட்டாளாயிற்றே! 'சரி' என்று போனான்!

* * *

அண்ணன்மாரிருவருக்கும், முட்டாளிடம் சிக்கியிருக்கும், இரண்டு வித்தைகளைப் பற்றித் தெரியவந்தது.

அதனால் ''முட்டாளே! எனக்குக் கொஞ்சம் வீரர்களைத் தயார் செய்து கொடேன்!'' என்று கேட்க, முட்டாளும், தன் கொல்லையில் கிடந்த வைக்கோல் போரிலிருந்து ஏராளமான வீரர்களை உண்டாக்கித்தர, அதைக்

RangaRakes tamilnavarasam

கொண்டு, ஒரு அரசனைத் தோற்கடித்து, மூத்தவன் முடிசூட்டிக் கொண்டான்.

இரண்டாவது அண்ணனும், தம்பியைக் கெஞ்சி தங்கக்கட்டிகளைப் பெற்றுப்போய், பெரிய சீமானாகி விட்டான், நகரில்.

வீரர்கள், பெரியவனிடம்! பணம் சின்னவனிடம்!! என்ன செய்வது? சேனையைக் காப்பாற்ற பணம் வேண்டுமே! பணத்தைப் பாதுகாக்க சேனை வேண்டுமே! — இரண்டு அண்ணன் தம்பிகளும், 'இன்னும் அதிகம் கேட்டு வாங்கி வருவதற்காக' முட்டாளிடம் போயினர்.

ஆனால், இத்தடவை, தங்கமோ வீரர்களோ தயாரித்து அளிக்க முடியாது என மறுத்துவிட்டான் முட்டாள்.

அவன் மறுத்ததைவிட அவன் சொன்ன காரணம், விந்தையாயிருந்தது!

''பெரியண்ணா! வீரர்கள் எல்லாம் பாட்டு பாடுவார்களென்று உனக்குத் தந்தேன். ஆனால், அவர்கள், கிராமத்தில் ஒரு மனிதனைக் கொன்று விட்டனர். அவன் மனைவி, விதவையாகிவிட்டாள். விதவைகளையுண்டாக்கத்தானா, மாடுகளுக்குப் பிரயோசனப் படக்கூடிய என் வைக்கோலையெல்லாம் தத்தம் செய்வது? என்னால் முடியாது!'' என்றான்.

''சின்னண்ணா! தங்கக் கட்டிகளை வைத்துக் கொண்டு நீ விளையாடப் போகிறாய் என்று நினைத்தேன். ஆனால், அது, ஒரு பசுவைக் கொண்டு போய்விட்டது. கிராமத்துக்கு, உன் வேலையாள் வந்து, தங்கத்தைக் கொடுத்து பசுவைக் கொண்டுபோய் விட்டான். அதனால், மூன்று குழந்தைகள் பாலில்லாமல் கஷ்டப்படுகின்றன. என்னால், இந்தக் கோரத்தைச் சகிக்க முடியவில்லை. இனிமேல் நான் தங்கம் உற்பத்தி செய்யமாட்டேன்' என்றான்.

RangaRakes tamilnavarasam

படித்தவர்களான இரண்டு புத்திசாலி அண்ணன் மாருக்கும் எதுவும் புரியவில்லை. தம்பியோ 'முட்டாளா யிருக்கிறானே' என்ற சஞ்சலத்தோடு திரும்பினர். கடைசி யில், சேனையில் பாதியைப் பாதுகாப்புக்காகப் பெரிய வன் தருவதென்றும், பணத்தில் பாதியை வீரர்களுக்காக சின்னவன் தருவதென்றும், முடிவு செய்து கொண்டு போயினர்.

இரண்டு 'புத்திசாலி'களும் இப்போது மன்னர்களாகி விட்டனர். முட்டாளும்கூட, ஒரு தேசத்துக்கு ராஜா வாகிவிட்டான்! அண்ணன்மார்கள், பணம், வீரர்கள் மூலம் அரசர்களாயினர். இவனோ வியாதியை தீர்க்கும் வேர் மூலம், அரசனானான்! அந்த ஊர் அரசன் மகள், நீங்காப் பிணியால் அவதிப்பட்டாள். அதைத் தீர்த்து வைப்பவர் களுக்கு, மகளையும் அரசையும் கொடுப்பதாக அரசன் அறிவித்தான். அப்படியே செய்ததால், மன்னனுக்கு மரு மகனாகவும், தேசத்துக்கு அரசனாகவும் ஆனான் முட் டாள்! சிறிது காலத்தில், மாமன்னரும் இறந்து போகவே இவன் அரசனானான்.

* * *

மூன்று சகோதரர்களும் அரசராயினர்! சேனாவீரனும், வியாபாரச் சீமானும், தத்தமது நாட்டில் சட்டங்களையும் வரி வசூல் ஏற்பாடுகளையும் வகுத்துக் கொண்டு அரசு புரிந்தனர்! நமது முட்டாளோ, மாமனார் இறந்த பின், மனைவியையும் அழைத்துக் கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டான். ''சேச்சே! இதென்ன ராஜா வேலை. சோம்பேறி வேலை. உடல் பருத்து, பசியும் தூக்கமும் கூட இல்லாமல் போய்விட்டது'' என்று சொல்லியபடி.

மக்கள், ஓடிவந்தனர்.

''மன்னா! இது அடுக்குமோ? மன்னர் போய் ஏர் உழ லாமா?''

''மன்னன் என்பதால், வயிறு பசிக்காமலா இருக் கிறது. அவனும், சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்.!''

RangaRakes tamilnavarasam

''வரி போட்டு பணம் பெற்றால் தாங்கள் சுகமாக இருக்கலாமே?''

''வரி, என்றால் என்ன? எதற்காகப் பணம்?''

''எதற்காகவா? நமது ரதகஜதுரக பதாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சம்பளம் கொடுக்கப் பணம் வேண்டாமா?''

''அதற்காக, எல்லாரிடமும் வாங்கி இவர்களுக்குக் கொடுக்கச் சொல்கிறாயா? வேண்டாம்! பணமில்லாவிட்டால், சம்பளத்தை நிறுத்திவிடு!''

''அப்போது, அரசாங்க ஊழியத்துக்கு ஆளே அகப்படமாட்டார்கள்.''

''பரவாயில்லை! உத்தியோகம் பார்க்காவிடில் உழைக்க நேரமிருக்கும்! ஊரில் கிடைக்கும் எருவைக்கொண்டு போய், வயலில் போடட்டும். ஊரும் சுத்தமாகும்! வயலும் விளையும்!''

அவனுக்கு எப்படி இதையெல்லாம் விளங்கும்படி செய்வதென்று ஒருவருக்கும் புரியவில்லை. அவன்தான் முட்டாளாயிற்றே!

* * *

''மகாராஜா! அவன் என் வீட்டில் திருடிவிட்டான்''.

''அதனாலென்ன! அவனிடம் இல்லை. உன்னிடம் இருந்திருக்கிறது. எடுத்துக் கொண்டான்.''

* * *

''மன்னவா! உங்களை முட்டாள் என்று ஊரார் சொல்லுகிறார்கள்.''

''அதனாலென்ன!''

* * *

RangaRakes tamilnavarasam

இப்படிப்பட்ட அரசன் ராஜ்யத்தில் யார் இருப்பார்கள்? புத்திசாலிகளெல்லாம் போய்விட்டனர்! முட்டாள்கள் மட்டும் இருந்தனர்! அரசனைப் போலவே அவர்களும், உழைத்து உண்டு வாழ்ந்தனர்.

மூன்று குட்டிச் சாத்தான்களை அனுப்பிய பெரிய சாத்தானுக்கு எந்த விபரமும் கிடைக்கவில்லை. அதனால், அதுவே நேராக வந்தது—மூன்று அரசுகளையும் பார்த்தது!!—முதலில் மூத்தவனிடம் போயிற்று. அவன் படையில், சேனாதிபதியாகச் சேர்ந்து நாடு பிடிக்கும் ஆசையைத் தூண்டியது. ஆயுதங்களை உற்பத்திசெய்து, அவனை, பக்கத்து நாட்டுப் பெரிய அரசனிடம் போருக்கு அனுப்பியது. பேரரசன், சுலபத்தில், இவனைத் தோற்கடித்தான்! ராஜ்யத்தையும் பிடுங்கிக் கொண்டான்! உயிர் தப்பினால் போதும் என்கிற கதியாயிற்று, மூத்த அண்ணன் முடிவு.

சாத்தான், வியாபாரச் சீமான் ராஜ்யத்துக்குப் போய், வியாபாரிபோல ஒரு தொழிலை ஆரம்பித்து, எந்தப் பண்டமானாலும் அதிக விலை கொடுத்து வாங்கினான். இதனால், தங்களிடம் கிடைக்கும் பொருள்களையெல்லாம் அவனிடம் கொண்டு வந்து கொடுத்து, ஏராளமான பணத்தைப் பெற்றுக் கொண்டு போயினர் மக்கள்.

இதனால் மக்களிடம் பணப்புழக்கம் அதிகமாயிற்று. வியாபாரியான மன்னனுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. வரிமேல் வரிபோட்டு, மக்களிடமிருந்து பணத்தைக் கறந்தான். மக்களும், பணம் அதிகம் இருந்ததால் தட்டாமல் செலுத்தினர். பணம் இருந்ததேயொழிய, மன்னனுக்கு வரவரக் கலக்கம் அதிகமாயிற்று. ஏனென்றால், பணம் இருந்ததேயொழிய அதைக் கொண்டு தனக்குத் தேவையான எந்தப் பொருளையும் அடைய முடியவில்லை, அவனால். உணவு உடை முதலியவைகளுக்குக்கூட திண்டாட்டம் வந்தது. ஏனென்றால், அவைகளையெல்லாம் அரசன்

RangaRakes tamilnavarasam

எவ்வளவு பணங் கொடுப்பதாகச் சொல்லுகிறானோ, அதைவிட அதிகமான பணம் கொடுத்து சாத்தான் வாங்கி விடுகிறது. என்ன செய்வது? சகிக்கமுடியாத வியாபாரக் கோமான், அவனை நாட்டுக்கு அப்பால் விரட்டினான். சாத்தான் போகவில்லை; எல்லையில் கடை வைத்துக் கொண்டு, முன்போலவே வியாபாரம் செய்தது. மக்களும் அதிக லாபம் விரும்பி அவனிடமே சென்றனர். வியாபாரி சாத்தான், அரசனையே பணங் கொடுத்து வாங்கிவிடப் போவதாக மக்கள் பேசலாயினர். இதைக் கேட்ட மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. அழுதான்—உருண்டான்—திகைத்தான். திக்குமுக்காடினான்.

இந்தச் சமயத்தில், போரில் தோற்ற மூத்தவன், தம்பியிடம் வந்தான்.

''அண்ணா! உனக்கு நாடு இல்லை. எனக்கோ நாடு இருந்தும் பிரயோசனமில்லை. இப்படியாயிற்றே நம் கதி'' என்று இருவரும் அழுதனர்.

சாத்தான், சிரித்துக்கொண்டு, முட்டாள் ராஜ்யத்துக்குப் புறப்பட்டது, சேனாதிபதி உருவில்.

* * *

''அரசே! ராஜா என்றால் சேனை வேண்டாமா? உத்தரவு கொடுங்கள்—ஒரு சேனையைத் திரட்டுகிறேன்'' என்றது, சாத்தான்.

''சரி, திரட்டி பாடக் கற்றுக்கொடு'' என்றான் முட்டாள்.

மக்களோ, சேனையில் சேர விரும்பவில்லை! சாத்தான், 'சம்பளம் நிறையக் கிடைக்கும்,' என்றான். 'போப்பா, உன் சம்பளம் யாருக்கு வேண்டும். எங்களுக்குத் தேவையானதெல்லாம் இருக்கிறது' என்றனர்.

சாத்தான், பயமுறுத்தினான்! சேராவிடில் அரசர் கொன்றுவிடுவார் என்று அறிவித்தான்.

RangaRakes tamilnavarasam

மக்கள் மன்னனிடம் போய்ச் சொல்லினர்—"அரசே! சேனையில் சேராவிடில் நீங்கள் எங்களைக் கொன்று விடுவீர்களாமே!"

முட்டாளுக்கு புரியவில்லை. "நான் ஒருவனே உங்களை எப்படிக்கொல்ல முடியும். நான் முட்டாளாயில்லாவிட்டால் இதை உங்களுக்கு விளக்கிச் சொல்லுவேன். என்ன செய்வது! எனக்கே புரியவில்லை," என்றான்; மக்கள் போய்விட்டனர்.

சாத்தான் திகைத்தது!

அதனால் வேறு வழியில் சென்று, இன்னொரு மன்னனைத் தூண்டிற்று. அவன், முட்டாள் ராஜ்யத்தின்மீது, படையெடுத்தான்—யானை, குதிரை, வீரர்கள், பீரங்கிகளோடு!

முட்டாள் ராஜ்யத்து மக்களோ, அவைகளைக் கண்டதும், ஓடிவந்து வேடிக்கையாகப் பார்த்தனர். ஒருவராவது எதிர்க்கவில்லை.

எதிரிகள், தானியங்களையும், ஆடு மாடுகளையும் கைப்பற்றினர்; முட்டாள் மக்கள், அவர்களுக்கு வேண்டியதை அள்ளிக் கொடுத்தனரேயன்றி, மறுக்கவில்லை. அதோடு, "ஐயோ பாவம்! உங்கள் தேசத்திலே, இதெல்லாம் கிடைக்கவில்லையென்றால், எங்களோடு வந்து இருங்களேன்!" என்று சொல்லினர்.

எப்படியிருக்கும் சூராதிசூரர்களுக்கு? சோர்ந்து போயினர்; தமது மன்னனிடம் போய், 'அரசே, இதற்கா எங்களை அழைத்து வந்தீர்?" என்று பேசலாயினர்.

அவன் கோபங்கொண்டு, முட்டாள் மக்களின் வீடுகளையும், தானியங் கிடங்குகளையும் தீவைத்துக் கொளுத்தச் செய்தான். அதைக் கண்ட முட்டாள் மக்கள், 'ஏனையா இப்படி பண்டங்களை அழிக்கிறீர்கள்? வேண்டுமானால்

RangaRakes tamilnavarasam

நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்,'' என்று ஓவென அழுதனர்.

வீரர்களால், இந்தப் பரிதாபத்தைத் தாங்கமுடியவில்லை. அவர்களும் அழுதுவிட்டு, பேசாமல் திரும்பினார்கள்.

தோற்ற சாத்தான். வேறு வழியுண்டா என யோசித்தான்.

*     *     *

ஒரு கனவான்போல் வேஷம் போட்டுக் கொண்டு போய், முட்டாள் ராஜ்யத்து மக்களிடம், ஏராளமான தங்கங்களைக் காட்டி, பண்டங்களை விலைக்கு வாங்கினான்.

அவர்கள் பண்டங்களைக் கொடுத்து வாங்கிய தங்கத்தை நகைகளாக்கவில்லை! குழந்தைகளிடம் விளையாடக் கொடுத்தனர்!

இதைக் கண்ட சாத்தானுக்கு எதுவும் புரியவில்லை. சின்னாட்களில், யாரும் தங்கம் வாங்க வராததால், சாப்பிட பண்டம் எதுவுமின்றி, பட்டினியாய்க் கிடக்கலானான். இதைக் கண்ட முட்டாள் ஜனங்கள் பரிதாபப்பட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலும் சாப்பாடு போடலாம் என்று முடிவு செய்தனர்.

அதனால், சாத்தான், தினசரி ஒவ்வொரு வீட்டுக்கும் போக ஆரம்பித்தான். முதல்நாளே தோல்வி. ஒரு வீட்டு எஜமானி மறுத்துவிட்டாள். ''கரடுமுரடான கையில்லாதவர்களுக்கு நாங்கள் சாப்பாடு போடமாட்டோம். வேண்டுமானால் காத்திரு. இலையில் மிஞ்சியதைச் சாப்பிடலாம். உழைக்காமல் சாப்பிடுகிற ஆளா நீ?'' என்று சொல்லவே, சாத்தானுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

''ஏ, மூடராஜா! உழைப்பது என்றால், கைகளால் வேலை செய்வது மட்டுமா? புத்திசாலிகள் எதனால் வேலை

RangaRakes tamilnavarasam

செய்கிறார்கள் தெரியுமா?'' என்று முட்டாளிடம்போய் சண்டை போட்டது.

''நான்தான் முட்டாளாயிற்றே.... எனக்கு எப்படித் தெரியும்?'' என்று அவன் சொல்ல, சாத்தான் சொன்னான்: ''ஏ முட்டாள்! தலையிலுள்ள மூளையால் வேலை செய்வது மிகவும் கஷ்டம். வேண்டுமானால், உனது குடி, படைகளுக்குச் சொல்லித்தருகிறேன். சம்மதமா?'' என்றது.

முட்டாளும், சாத்தான் சொல்லிக் கொடுப்பதை, எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவு போட்டான்.

சாத்தான், உயரமான கோபுரம் ஒன்றில் ஏறினான். மக்கள் தலையால் வேலை செய்வதைக் காணக் கூடினர்!

கனவான உருவிலிருந்த சாத்தான் வேலை செய்யாமல் பிழைக்கும் வழிபற்றி, ஏதேதோ பேசியதைக் கண்டு மக்கள் விழித்தனர்; தமது வேலைகளைப் பார்க்கப் போகலாயினர்.

ஒரு நாள்—இரண்டுநாள்—சாத்தானுக்குப் பசி.

முட்டாள்கள், கனவானுக்கு கோபுரத்துக்குப்போய் உணவு கொடுக்கவில்லை—தலையால் உழைத்து சம்பாதித்துக் கொள்வார் என்று இருந்தனர்.

முட்டாள் வந்து பார்த்தான்—மக்களைக் கேட்டான்: ''கனவான்! தலையால் வேலைசெய்ய ஆரம்பித்து விட்டாரா?''

''இல்லை! தொண்டையைத்தான் கிழித்துக் கொண்டிருக்கிறார்.''

சாத்தான் பாடு கஷ்டமாயிற்று. தளர்ச்சி தாங்கமுடியவில்லை. தடுமாறி, வீழ்ந்தது கோபுரத்திலிருந்து. தலை

RangaRakes tamilnavarasam

கீழாகப் படிகட்டுகளில் உருண்டு கொண்டிருந்தது. முட்டாள், ஓடி வந்து பார்த்தான். கூடியிருந்தோர், ''கனவான் இப்போதுதான் தலையால் வேலை செய்கிறார்'' என்றனர்.

முட்டாளும் 'ஆமாம்' என்று தலையசைத்தபடி பார்த்தான். சாத்தான் செத்துக் கிடந்தது!

* * *

வீரன், கதையை முடித்துவிட்டு நான் என்ன சொல்வேனோ என்று பார்த்தான். ''வீரா! 'முட்டாள்' என்போருக்கு சாட்டையடி தருவதுபோல ஒரு கதையே தீட்டிவிட்டார், டால்ஸ்டாய். அதுசரி, சாத்தான் என்று சொன்னாயே, அது என்ன? நீ பார்த்திருக்கிறாயா?''

''சாத்தான் என்றால் பிசாசு!''

''பேய்—பூதம்—பிசாசுகளில் உனக்கு நம்பிக்கையுண்டா?''

''ஏன் கிடையாது? உண்டு!''

''நீ எப்போதாவது அவைகளைப் பார்த்திருக்கிறாயா?''

''ஏன்! தினசரி பார்த்தவண்ணம்தான் இருக்கிறேன்.''

''என்ன வீரா, விளையாடுகிறாய்?''

''நான் விளையாடவில்லை, தோழா! பேயும் பிசாசும், மறைந்துவாழவில்லை. மனிதர்களிடமே இருக்கிறது. பேய், பூதம் என்றால் இருட்டிலும் மரத்திலும் இருக்கும் என்று எண்ணுகிறாய். இல்லை, இல்லை! மனித மந்தையில்தான், அவைகள் உள்ளன. அவைகளுக்குச் சொல்லப்படும் அந்தக் குணாதிசயங்களும், மனிதர்களிடம்தான் காண்கிறேன். நான் சொல்லிய கதையில், சாத்தான் என்று டால்ஸ்டாய் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் என்னென்ன தெரியுமா?''

RangaRakes tamilnavarasam

''என்னென்ன வீரா?''

''நீதான், பெரிய பெரிய பத்திரிகைகளையெல்லாம் படிக்கிற ஆளாயிற்றே! நீயே கண்டுபிடித்து, எனக்கு எழுது''

வீரன், போய்விட்டான். கதையைப் படித்த உங்களில் யாருக்காவது, கதையில் வந்த 'சாத்தான்' எதை எதைக் குறிக்கிறது எனப் புரிகிறதா? புரிந்தால் தயவு செய்து எழுதுங்கள்.

RangaRakes tamilnavarasam

# 6
# சிங்களச் சீமாட்டி

''நாகரிக நாட்கள் என நீ கூறுகிறாய் பெண்ணே! இன்றுங்கூட நடையிலே, உடையிலே, நாகரிகத்தைக் காண்கிறோமே தவிர எண்ணத்திலே பழைய விஷம் இருந்தபடி தான் இருக்கிறது. உன்னை வலை போட்டுப் பிடிக்க விரும்பும் அந்த சொகுசுக்கார சங்கரன்கூட நாகரிக நாயகனாக நடிக்கிறானே தவிர உள்ளம் பழைய எண்ணம் நிரம்பித்தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்'' என்று மங்கம்மாள் கூறினாள்.

மலர்க்கொடி நகைத்தாள்! அவள் சிரித்தபோதுதான் தெரிந்தது, பற்கள் எப்படி இருந்தால் பாவையருக்கு அழகு தரும் என்பது.

சிவந்த இரு அதரங்களையும் கொண்டு மலர்க்கொடி தனது முத்துப் பற்களை மூடி வைத்திருந்தாள். உண்மை தானே! விலையுயர்ந்த வஸ்துக்களைச் சற்று பத்திரமாக வைத்துக் கொண்டுதானே இருக்க வேண்டும். வைர மோதிரத்தை வெல்வெட்டுப் பெட்டியிலும், வரகரிசியை வாசலிலும் தானே போட்டு வைப்டார்கள்.

மலர்க்கொடியின் அங்கங்கள் ஒன்றை ஒன்று சண்டைக்கு இழுத்தபடி இருந்தன. கண் சொல்லிற்று ''நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் பார். கடல் அலைபோல நான் பாய்வதை நோக்கு. அந்த மோகன மிரட்சியைக் காணு'' என்று. புருவங்கள் ''சும்மா கிட கண்ணே! நான் மதனன் வில்போல வளைந்து கொடுக்கும் காட்சியன்றோ உன் அழகை எடுத்துக் காட்டுகிறது! நானில்லாவிட்டால் நீ

எங்கே, தங்கப் பெட்டிக்கு தகதகப்பு. வைரத்திலே உள்ள ஒளி—இவை போல கண்ணின் வனப்புக்கு நானன்றோ காரணம்'' என்று சொல்லிற்று. நெற்றி சும்மா இருந்ததா? நான் பரந்து பளபளத்து பேழை என இல்லாவிடில், இந்தப் புருவமோ, கண்களோ எங்கு தங்கும் என்று வினவிற்று. என்னைக் கண்டு காதகரும் காமுறும் அளவு உள்ளேன். நானின்றி நல்ல கண்ணோ, புருவமோ, நெற்றியோ ஏது'' என்று கன்னங்கள் கொஞ்சின. 'மன்னனுக்கு முடிபோல, மாலைக்கு மணம் போல நான் இருக்கும் வனப்பு என்ன பாருங்கள்'' என்று கூந்தல் கூவிற்று. இப்படி ஒவ்வொரு அங்கமும் ஒன்றை ஒன்று வம்புக்கிழுக்கும் அளவு வனப்புள்ள மங்கை, மலர்க்கொடி.

எனவே அவளால், மனதுக்கும் வாலிபருக்கும் நேரிட்ட போராட்டங்களோ இவ்வளவு அவ்வளவல்ல.

எத்தனையோ அதிகாரிகள் தமது பீடத்திலமர்ந்து இந்தப் பெண்ணை எண்ணியபடி, தமது கடமையை மறந்த துண்டு. எத்தனையோ இளைஞர்கள், இவளன்றோ வாழ்க்கையின் வழிகாட்டி, இன்பத்தின் இல்லம், இவளன்றி நாம் ஏன் இருப்பது உலகில்'' என்று எண்ணி ஏங்கியதுண்டு.

மலர்க்கொடியின் மனம், பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு, சங்கரன் மீது சென்றது. நினைத்தது அவனையே மணப்பது என்று. அவளும் எண்ணினாள். அவள் எண்ணத்தை அறிந்ததும் அவன் துள்ளினான். படிப்பு முடிந்து பரீட்சை தேறியதும் மணம். எனவே நாளை எண்ணிக் கொண்டும், ஏட்டைத் தள்ளிக் கொண்டும், ''என்று வரும் அந்நாள்?'' என்று மந்திரம் ஓதியபடி இருந்தாள்.

மங்கம்மாளுக்கு, மலர்க்கொடிதான் செல்வம். அந்தப் பூஞ்சோலையில் விளைந்தது அது ஒன்றுதான்! ஒன்றே போதுமே. அது ஒப்பற்ற கொடியன்றோ!

மங்கம்மாளுக்கு நவநாகரிகத்திலே விருப்பம். அதனுடைய மேற்பூச்சுக்களில் மட்டுமல்ல. கருத்துக்களில் வேட்கை.

RangaRakes tamilnavarasam

தன் வாழ்க்கையிலே நாகரிகக் கோட்பாடுகளைப் புகுத்தி வாழ்ந்தனர். மலர்க்கொடியும் அப்படியே.

சங்கரன் பார்வைக்கும், பேசும்போதும் நாகரிக புருஷனாகவே காணப்பட்டான். ஆனால் உள்ளத்திலே வைதீகம் குடிகொண்டிருக்கிறது என்பது மங்கம்மாள் கருத்து. அதனையே தன் மகளுக்கும் எடுத்துக் கூறினாள். மலர்க்கொடி அதனை நம்பவில்லை. நம்பாததுதான் நகைத்தாள்.

''சிரிக்கிறாயா? ஏனோ?'' என்று மங்கம்மாள் கேட்டாள்.

''இல்லையம்மா! அவரைக்கூட சந்தேகிக்கிறாயே என்று தான் சிரித்தேன். நேற்றுகூட அவர் தமது கல்லூரி மாணவர் சங்கத்திலே ''மூடநம்பிக்கையும் முற்போக்கும்'' என்பதைப் பற்றி மிக தீவிரமாகப் பேசினாராம்'' என்றாள் மலர்க்கொடி.

''பேசலாம். அதை யாரம்மா இல்லை என்று சொன்னது? காரியத்திலே காட்ட வேண்டுமே. அதுதான் தேவை. உங்கள் பள்ளி வாத்தியாருக்கு கிரகணம் எப்படி உண்டாகிறது என்பது நன்றாகத் தெரியும். அதை உங்களுக்குச் சொல்லியும் கொடுக்கிறார். ஆனால் கிரகணத்தன்று அவர் எங்கே இருக்கிறார்'' என்று மங்கம்மாள் கூறினாள். மலர்க்கொடி. ''ஆமாம்! அர்த்த நாரீசுவர ஐயர் அவசியம் குளத்தங்கரைக்குத்தான் செல்வார். மறக்கமாட்டார்'' என்றாள்.

''அதைத்தான் சொல்கிறேன் நானும்'' என்றாள் மங்கம்மாள்.

* * *

பாழாய்ப் போன சூரியன் ஏன் இப்படிப் பாடுபடுத்துகிறானோ தெரியவில்லையே. நெருப்பிலே போட்டு வாட்டுவதைப் போல வாட்டிவிடுகிறான். கால் கொப்பளித்து விடும்போல இருக்கிறது என்று காலைமுதல் மாலைவரை கூறுபவரிடம், அதே சூரியன் மாலையிலே மறைகிற நேரத்திலே ஒரு அரைமணி நேரம், அளவு கடந்த புகழ்ச்சியைப்



RangaRakes tamilnavarasam

பெற்று விடுகிறது. வானத்திலே சூரியன் மறையும் போது கிளம்பும் அந்த செந்நிறம் எவ்வளவு சொகுசு! கண்களுக்கு அதுதரும் குளிர்ச்சி எவ்வளவு! காவியக்காரரையும் ஓவியக் காரரையும் அந்த காட்சி தூண்டிவிடுகிறது காதலருங்கூட அவ்வேளையில் மிக ''குஷாலாக'' இருப்பதுண்டு ''ஏண்டி மாரி, எடுத்துக்கொ கூடையை; அரிவாளைப் போட்டாயா. ஆகட்டும். புறப்படு வீட்டுக்கு'' என்று கொஞ்சினபடி குப்பன் மாரியுடன் களத்தை விட்டுப் புறப்படும் நேரம்.

''அதோ பார் கோடியிலே உம்! அப்பா, வருகிறார் பார். கூப்பிடு, ''அப்பா—அப்பா!'' என்று தனது குழந் தையைத் தபாலாபீசாக வைத்துக் கொண்டு, வேலை யினின்று விடுபட்டு வீடுதிரும்பும் கணவருடன் மாதர் கொஞ்சும் வேளை.

அந்த வேளையிலே, பங்களா தோட்டத்திலே, ''தம்பி! ஏன் இந்த கிளாஸ்கோ பிஸ்கட்டு பிடிக்கவில்லையோ'' என்று மங்கம்மாள் கேட்க, அதுவரை, மலர்க்கொடியின் கண்களிலே கோடிப் பொருளைக் கண்டு கண்டு களிப்படைந்து கொண் டிருந்த சங்கரன், ''ஏன் பிடிக்காது! எனக்கு ரொம்ப இஷ்ட மாச்சே'' என்று கூறியபடி ஸ்பூனை தவறாக எடுத்து வாய்க் கருகில் கொண்டுபோக, மலர்க்கொடி நகைக்க, மங்கம்மாள் புன்சிரிப்பு கொள்ள, சங்கரன் முகத்திலே அசடுதட்ட வீற்றி ருக்கும் காட்சி காணப்பட்டது.

''மாலை நேரத்திலே தம்பி, மனது குளிர்ந்து இருக்கு மல்லவா?'' என்றாள் மங்கம்மாள். ''மனது குளிர்ந்ததோ இல்லையோ! டீ! குளிர்ந்தே போய்விட்டது,'' என்றாள் மலர்க்கொடி.

'ஆமாம்! ஆமாம்!' என்று இரண்டிற்கும் பதிலளித்தான் சங்கரன். ''நாளைக்கு நாம் மூவரும் நத்தம் ஜெமீன்தாரின் விருந்துக்குப் போகவேண்டும். மாலை 5 மணிக்கெல்லாம் இங்கே வந்துவிடு. காரில் மூவருமாகப் போவோம்'' என்று மங்கம்மாள் கூறினாள். சரி என்றான் சங்கரன். பிறகு மூவரு

மாக பல விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டனர். இரவு 7 மணிக்குக் கலைந்தனர். மறுதினம் மாலை குறிப்பிட்ட நேரத்தில் சங்கரன் வந்து சேர்ந்தான். விருந்து நடக்கும் நத்தம் ஜெமீன்தாரின் மாளிகைக்குச் சென்றனர்.

விருந்துக்கு, அநேக சீமான்களும் சீமாட்டிகளும் வந்திருந்தனர். நகை அணிந்திருக்கிறாளே அந்த அம்மைதான் அகிலாண்டேஸ்வரி. அதோ சிரிக்கிறார் பார். பல்லிலே கொஞ்சம் தங்க முளாம்கூட இருக்கிறதே, அவள் யார் தெரியுமா, அன்னம்மாள். மணபுரி ஜெமீன்தாரரின் மருமகள். அவள் கணவன் சிறைக்குப் போயிருக்கிறான். அதோ அவர்தான் வைர வியாபாரி வரதராஜ செட்டியார். அது சுபேதார் சுந்தரம்—டாக்டர் ரகுராமன்—என்று விருந்துக்கு வந்தவர்களை எல்லாம், மங்கம்மாள், தனது மருமகனாக வர இருக்கும் சங்கரனுக்குக் காட்டினாள். வந்தவர்களும், இந்த மூவரையும் அறிந்து கொண்டு, உபசார மொழிகள் உரைத்தனர். விருந்து முடிந்து போகும் நேரத்திலே, ஒரு நடுத்தர வயதுடையவர் மங்கம்மாளை அணுகி வந்தார்.

''சௌக்கியந்தானா, சுந்தரம்! சௌந்தரவல்லி எப்படி இருக்கிறாள்'' என்று மங்கம்மாள் கேட்டாள். ''சுகந்தான் மங்கு! சௌந்திரம் ரங்கூனுக்குப் போனார். அங்கு நாடகம் நடக்கிறது. முடிந்துதானே வருவாள்'' என்றான் சுந்தரம். இதுதான் என் தங்கை புருஷன் சுந்தரம்''—என்று மங்கம்மாள், அவரை, சங்கரனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். சங்கரன் கைகுலுக்கினான். மலர்க்கொடியை, சுந்தரம் தட்டிக் கொடுத்து, ''ஏ! அப்பா இவ்வளவு பெரிய பெண்ணாகி விட்டாயா நீ''—என்று கேலி செய்தான். கொஞ்ச நேரம் சென்றதும் விருந்துக்கு வந்தவர்கள் வீடு திரும்பினர். நமது கதாபாத்திரங்களும் தத்தமது வீடு சென்றனர். வீட்டிற்குப் போனதும் மங்கம்மாள் மலர்க்கொடியைப் பார்த்து, ''ஏன் பெண்ணே! நாம் சௌந்திரத்தைப் பற்றிப் பேசும் போது, உன் சங்கரன் முகம் எப்படி இருந்தது கவனித்தாயோ'' என்று கேட்க, மலர்க்கொடி, ''ஒரு மாதிரியாகத்

தான் இருந்தது'' என்றாள் மங்கம்மாள். ''போகப் போகத் தெரியும்'' என்று கூறினாள். உள்ளபடி, சௌந்திரம் என்ற நாடகக்காரியின் அக்காள் மகள் மலர்க்கொடி என்ற சேதி சங்கரனுக்கு விசாரத்தைத்தான் கிளப்பிவிட்டது. அவன் அதுவரை எண்ணிக் கொண்டிருந்தது, சிங்களச் சீமாட்டி மங்கம்மாளின் மகள் மலர்க்கொடி என்பதே. அது ஒரு நாடகக் குடும்பம் என்பது தெரியாது. சிங்கள நாட்டிலே பல ஆண்டுகள் இருந்துவிட்டு சென்னைக்கு வந்த குடும்பமென்றும், அதிலே மணம் புரிந்து கொள்வது தனக்குப் பெருமை என்றும் எண்ணினான் சங்கரன். அன்றைய விருந்தின்போதுதான் தெரிந்தது விஷயம். நாடகக்காரி சௌந்தரம்! அவள் தமக்கை மங்கம்மாள். இவளும் ஒரு நாடகக்காரிதானே. இவள் மகளா மலர்க்கொடி! ஐயோ இவளை நான் மணம்புரிந்து கொள்வதா, நாடு நகைக்காதா, கூத்தாடிச் சிறுக்கியை, கொங்கு நாட்டு வேளாளக்குடியில் பிறந்த நானா மணப்பது? என் குடிப்பெருமை என்னாவது. சீச்சி! ஐயோ! என்று விசாரப்பட்டான் சங்கரன். ஜாதி உணர்ச்சி அவனுக்கு அவ்வளவு இருந்தது.

* * *

சிங்களச் சீமாட்டி என்று பலராலும் அழைக்கப்பட்ட மங்கம்மாள் நல்ல நாயுடு வகுப்பு. சிறு வயதிலேயே விதவையாகிவிட்டாள். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே மங்கம்மாளுக்கு பாட்டிலும் நடிப்பிலும் அதிக பிரியம். பள்ளிக் கூடத்தில் நடக்கும் எந்த விழாவுக்கும் மங்காதான் பாடவேண்டும். மங்காவும் தங்கு தடையின்றி பாடுவாள். வந்த பிரமுகரும் தட்டிக் கொடுத்துவிட்டு, 'சாரீரம் ரொம்ப ஜோர். பாடும்போதே காது குளிருகிறது என்று சொல்லாமற் போவதில்லை. விதவையாகும் வரையிலே, மங்கம்மாள் பாடுவது கிடையாது. பாட்டு பாடினால் பதி தன்னைப்பற்றி என்ன எண்ணுகிறாரோ என்ற பயம். விதவையான பிறகு பிழைப்புக்கு வழியாக பாட்டுத்தான் உதவிற்று. அண்டை அயலார் வீட்டுக் குழந்தைகளுக்கு நலங்கு பாட்டு கற்றுக்

RangaRakes tamilnavarasam

கொடுப்பது, சின்ன சின்ன சிங்காரப்பாட்டு தங்கமே தங்கம், கும்மி முதலிய பாட்டுகள் கற்றுக் கொடுத்து வந்தாள், ஒரு தினம் ஒரு வீட்டுக் குழந்தைக்கு.

> ''திருவொற்றியூர் தேர்வருகுது திரும்பிப்பாரடி!
> கண்ணே திரும்பிப்பாரடி, உன் மடியில் இருக்கும்
> மக்காச்சோளத்தை தின்னு பாரடி''

என்று பாட்டு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்த வீட்டுக்கு வந்திருந்த ஒருவர், பாட்டைக்கேட்டு சொக்கிவிட்டார். பலே பேஷ் என்று கொண்டாடினார். பிறகு மெதுவாக மங்கம்மாளிடம் பேச ஆரம்பித்து, கடைசியில் தமது நாடகக் கம்பெனியில் நடிகையாகச் சேர்த்துக் கொண்டார். மங்கம்மாளின் புகழ் மலேயா, சிங்கப்பூர் பூராவும் பரவிற்று. பாட்டிலும் நடிப்பிலும் இணையில்லை என்று பெயர் எடுத்தாள். மதன சுந்தரி அது மங்கம்மாளின் நாடகப்பெயர். பணமும் சேர்த்துக் கொண்டாள். பணத்துடன் பிறந்ததுதான், மலர்கொடி. இத்தனை சேதியும், சங்கரனுக்கு முதலில் தெரியாது. சிங்கள நாட்டிலிருந்துவிட்டு சென்னை திரும்பிய ஒரு பிரபல குடும்பம் என்பதுதான் இவள் முதலில் கேள்விப்பட்டது. சங்கரன் பெற்றோரை இழந்த ஒரு கொங்குவேளாளன். பெருங்குடி, செல்வம் கொஞ்சம் இருந்தாலும் தனது ஜாதி உயர்விலே மட்டற்ற நம்பிக்கை உண்டு. அந்த உணர்ச்சி உள்ளத்திலே எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்தது. அன்று விருந்திலே மங்கம்மாள், ஒரு நாடகக்காரி என்பது தெரிந்த உடனே, உணர்ச்சி பொங்கி மேலிட்டு வெளிவந்தது.

* * *

சேற்றிலே செந்தாமரை போல, இந்த மலர்க்கொடி, கடைசியில் ஒரு நாடகக்காரியின் மகளாகவா இருக்க வேண்டும்? என்னென்பேன் என் அதிர்ஷ்டத்தை? அந்தப் பேரழகியை நான் மணந்தால் ஊரார் என்னை நேரில் ஏதும் கூறாவிட்டாலும் மறைவாகவேனும் நாடகக்காரியைக் கலியாணம் கொண்டவன் என்றுதானே தூற்றுவார்கள். நான்

RangaRakes tamilnavarasam

எங்ஙனம் அதைக்கேட்டு சகிப்பேன்—என்று எண்ணி சங்கரன் விசாரப்பட்டான். மலர்க்கொடியின் அழகு, அவள் மீது அவன் கொண்ட காதல், 'ஜாதியாவது பாழாவது சங்கரா, அவளை நீ நேசிக்கிறாய். அவள் உன்னை நேசிக்கிறாள்—நல்ல ஜோடி. அவ்வளவுதானே கலியாணத்திலே கவனிக்கப் பட வேண்டிய விஷயம்'' என்று சொல்லிற்று. சீச்சி! கூத்தாடி பெண்ணையா மணப்பது! கேவலமல்லவா? ஒரு மாடு வாங்குவதானாலும், எத்தனை குறிகள் பார்த்து வாங்கிறோம் என்று எச்சரித்தது ஜாதி உணர்ச்சி.

எனவே, சங்கரன், மலர்க்கொடியின் புகைப்படத்தைப் பார்ப்பதும், சிந்திப்பதுமாக ஒரு வாரங் காலந்தள்ளினான். அந்த ஒரு வாரமும் அவனுடைய முகத்தைக் காணாத மலர்க்கொடி வாடினாள். மங்கம்மாள், ''என் பேச்சு சரியெனத் தோன்றுகிறதல்லவா குழந்தாய்! சங் சங்கரன், எப்படி ஒரு டிராமாக்காரியின் பெண்ணை மணப்பது என்று எண்ணுகிறான் பார்! அவனை விட்டதா அந்த பழங்காலக் கொள்கை'' என்று கூறினாள்.

## ஜீவாவிடம் ஜீவன்

''இவ்வளவுதானா! நான் ஒரு நாடகக்காரியின் மகள் என்ற காரணத்திற்காக என்மீது இவர் வைத்திருந்த காதல் எப்படி மாறுவது? என் தாய் நாடகக்காரி என்றதால் எனது (3—9—39ல் சங்கரன் எனும் கொங்குவேளாள இளைஞர், மலர்க்கொடி எனும் மங்கையைக் காதலிக்கிறார்.) இலட்சணத்திலே எது மாறிவிட்டது? என் உள்ளத்திலே இவர் என்ன தவறு இருப்பதாகக் கருதுகிறார். என்னே ஜாதிப்பித்து!'' என்று எண்ணி எண்ணி ஏங்கினாள் மலர்க்கொடி.

ஜிலுஜிலுவென்ற காற்றும், சிறு தூறலும் இருந்தால் தானே பூஞ்சோலை பூத்துப் பூரித்து நிற்கும். அதைப் போல காதலில் சிக்குண்டவர் முன்பு காதலை ஊட்டியவர், நின்று பேசினால்தானே அவர்களுக்கு இன்பம்.

RangaRakes tamilnavarasam

சங்கரனோ, மலர்க்கொடியின் மாளிகைக்கு வருவதில்லை. மலர்க்கொடியோ வாடி வதைபட்டாள் பாவம். சங்கரனுக்கும் வருத்தந்தான். ஆனால் அவன் அதனைத் தீர்த்துக் கொள்ள வேறு மார்க்கத்தைத் தேடினான். நண்பர்களிடம் சென்று முறையிட்டான். அவர்களிலே சிலர், ''ஒரு டிராமாக்காரிக்காக ஏனப்பா இப்படி ஏங்குகிறாய்! சும்மா ஒரு பச்சை நோட்டை வீசினால் காரியம் முடிகிறது. இதை விட்டு என்னமோ ஏங்குகிறாயே'' என்றும் 'என்னடா பித்தனாக இருக்கிறாய்? ஆகட்டும் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லேன்! காரியம் முடியட்டுமே. பிறகு பார்த்துக் கொண்டால் போகிறது'' என்றும், ''பைத்தியக்காரப் பேர்வழி, இத்தனை நாளாக ஒரு 'சான்ஸ்'கூட அகப்படவில்லையா?'' என்றும் சொன்னார்களே யொழிய ஒருவராவது, ''நீ காதலிக்கும் மங்கையை மணக்க ஜாதி ஏன் குறுக்கிடுவது'' என்று உண்மையைக் கூறவில்லை.

இன்பம் வேண்டும்; ஆனால் அதைப்பெற இடர்மட்டும் வரக்கூடாது. போகம் வேண்டும்; ஆனால் பொறுப்பு இருக்கலாகாது என்ற எண்ணம் அந்த இளைஞர்களுக்கெல்லாம்.

மலர்க்கொடியை தனது காமக்கிழத்தியாக்கிக் கொள்வது என்று சங்கரன் எண்ணினான். மணஞ்செய்து கொண்டால் தானே ஊரார் ஏசுவார்கள். கூத்தி என்று கொண்டால் என்ன சொல்லப் போகிறார்கள். என்னமோ பிள்ளையாண்டான் சற்று துடியான ஆள். அவள் வலையிலே விழுந்து விட்டான். இது சகஜந்தானே! அவனும் சந்நியாசியல்ல. அவளும் பத்தினியல்ல என்று சொல்லுவார்கள். அவன் வேறு ஜாதியாச்சே—இவள் வேறு ஜாதியாச்சே! அவளை இவன் கூடுவதா என்று கவலைப்படமாட்டார்கள். அது சகஜமானதாகிவிட்டது. ஆனால் அதே மங்கையைக் கலியாணம் செய்து கொண்டால் மட்டும் ஐயோ எனப் பதைப்பார்கள். ஆகுமா என்று அலறுவார்கள். இது என்ன கோலம் என்று கேட்பார்கள். உலகத்தின் போக்கு இது!

* * *

RangaRakes tamilnavarasam

மெள்ள மெள்ள சங்கரனின் உள்ளத்திலே கள்ளத்தனமான எண்ணங்கள் எழ ஆரம்பித்தன. ஜாதிய உணர்ச்சி அவனை மலர்கொடியை மணக்கக்கூடாது. ஆனாலும் அவளை அடையவேண்டும் என்ற எண்ணத்தைத் தந்துவிட்டது. எனவே அவன் சாகசமாக தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமெனக் கருதினான். நல்ல காரியம் செய்வதென்றால் அவ்வளவு விரைவில் யோசனைகள் வருவதுண்டு. எனவே சங்கரன் எப்படியோ மிகத் தாழ்ந்த விதமான சூது செய்யவுந்துணிந் துவிட்டான். ஒருநாள் மாலை மலர்க்கொடியும் மங்கம்மாளும், தோட்டத்திலே உலவிக்கொண்டிருக்கையில் ஒரு ஆள் அங்கு வந்து சங்கரன் தந்ததாக ஒரு கடிதம் தந்தான். மலர்க்கொடி அதைப் பிரித்துப் பார்த்தாள்.

அன்பே,

எனக்கு திடீரென காய்ச்சல் வந்துவிட்டது. ஆகவே நான் அங்கு வரமுடியவில்லை; இன்றிரவு எட்டு மணிக்கு தயவுசெய்து என் அறைக்கு வரவேண்டும். கண்ணே, உன்னைக் காணாது எனக்குப் பெரிதும் கவலையாக இருக்கின்றது! தேவி உன் தரிசனத்தைக் கொடு. தவறாது வா. தவறக் கூடாது. தவறவே கூடாது.

இப்படிக்கு,
உனது காதலன்.
சங்கரன்

என்று எழுதப்பட்டிருந்தது. மலர்க்கொடி, கடிதத்தை தாயிடம் தந்தாள். மங்கம்மாள் படித்துவிட்டு, ''சரி! சங்கரன் சூது செய்வான். இனி அவன் மனம் கெட்டுவிட்டது. இனி நான் சொல்வதுபோல் நட மகளே. உன்னை சங்கரன் கெடுத்துவிடுவான். இங்கேவா'' என்று கூறி, நெடுநேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

இரவு எட்டு மணிக்கு, சங்கரன் அழைத்தபடி, மலர்க்கொடி சென்றாள். ஆனால் அவளுக்கு முன்பு இருந்த உற்

RangaRakes tamilnavarasam

சாகம் இல்லை. சங்கரனின் உண்மைச் சுபாவத்தைத் தெரிந்து கொள்வது என்ற யோசனையிலேயே அங்கு சென்றாள்.

சங்கரன், அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். மலர்க்கொடியைக் கண்டதும் நகைத்தான். 'மயிலே, குயிலே, மானே, தேனே' என கொஞ்சினான். மலர்க்கொடி பழையபடி சிரிக்கவில்லை. முன்பு போல பேசவில்லை. இவ்வளவும் வெளி வேடந்தானே என்று எண்ணும்போது அவளுக்குத் துக்கம் பொங்கி எழுந்தது. அதனை அடக்கிக் கொண்டு மங்கை பேசினாள்: ''உடம்பு காய்ச்சல் என்று எழுதினீர்களே.''

''உள்ளத்தில் காய்ச்சல், உடம்பில் அல்ல.''

''உம்! சரி, உள்ளத்து காய்ச்சலுக்குக் காரணம் யாதோ?''

''உல்லாசி! உன்னால் வந்ததுதான். வா இங்கே''. என் பக்கத்தில் அமரு. எதா, ஒரு முத்தம், ஒரே ஒரு முத்தம் கொடு, பார்ப்போம்.''

''பலே! சங்கர், இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டதா உமது சாகசம். திடீர் வளர்ச்சியாக இருக்கிறதே.''

''காதலி! இதிலே சாகசமேது. உன்னைக் கண்டால் என் மனம் அவ்வளவு பூரிக்கிறது. ஒரு முத்தம் தாராயா? நான் யார்? உன் காதலன் அல்லவா!''

''நீர் யார்! ஒரு வேளாளர்! அழகுள்ள மங்கை எவளேனும் அகப்பட்டால் அவளைச் சேர எண்ணும் சொகுசுக்காரர்''

''கோபமேன் பெண்ணே!''

''கோபம் ஏன், உள்ளபடி! ஒரு நாடகக்காரியின் மகள் கோபிக்கலாமா! அதிலும் ஒரு வேளாள இளைஞர், படித்தவர், முத்தம் கொடு என்று கேட்பதே அவளுக்குப் பாக்கியமல்லவா? கிடைக்குமா, அவளுக்கு இவ்வளவு பெரிய பாக்கியம்!''

''மலர்க்கொடி! நீ ஏதோ சந்தேகங்கொண்டு பேசுகிறாய். நீ நாடகக்காரியின் மகளானாலென்ன, உன்னை

RangaRakes tamilnavarasam

தானே நான் மணம் செய்து கொள்ளப் போகிறேன்! என் காதலியின் கரத்தைப் பிடித்திழுத்து கட்டில்மீது தூக்கிப் போட்டு முத்தமிட எனக்கு உரிமை இல்லையா, முடியாதா என்னால்—''

''முடியும், நான் ஏமாந்தால்!'' என்று சொல்லிக் கொண்டே மலர்க்கொடி, சங்கரன் தாடையிலே வைத்தாள் ஒரு அறை. அதே நேரத்திலே அவள் கண்களிலே நீர் ததும் பிற்று. மங்கம்மாளும் அந்த அறைக்கு வந்தாள். ''அம்மா நான் ஏமாந்தேன்—இவனை நம்பினேன். இவன் கடைசி யில் என்னை வெறும் காமப் பொருளாகக் கருதுகிறான். நீ சொன்னது உண்மை. முற்றிலும் உண்மை. என்னை இந்த இடத்தைவிட்டு அழைத்துக் கொண்டு போய்விடு.'' என்று அழுது தாயின் மார்பிலே சோர்ந்து சாய்ந்தாள். மங்கம்மாள் புன்னகையுடன், திகைத்து உட்கார்ந்து கொண்டிருந்த சங்கரனை உற்று நோக்கினாள். ''சங்கரா! ஜாதியை நீ காப்பது போலத்தான் நானும் என் மகளைக் காப்பேன். மலர்க்கொடியும் தன் மானத்தைக் காப்பாள்'' என்று கூறி னாள். தாயும் மகளும் வீடு சென்றனர். சங்கரன் சோர்ந்து படுக்கையில் சாய்ந்தான், தன் சாகசம் தோற்றதே—சாயம் வெளுத்ததே, மலர்க்கொடியை இழந்தோமே என்று.

''சங்கர்! என்ன, என் யோசனைப்படி முடித்து விட்டாயோ! மலர்க்கொடி வரும்போது நான் பார்த்தேனே'' என்று கேட் டான், சங்கரனுக்கு யோசனை கூறிய சதாசிவம்.

''சதாசிவம்! முழுத்தோல்வி! அந்த மங்கா என்னைப் பற்றி மலர்க்கொடியிடம் ஏதேதோ கூறிவிட்டாள். இனி என்னால் அவளை அடைய முடியாது. கலியாணம் செய்து கொள்வதானாலும் நடக்காது. என்மீது அவர்களுக்கு அளவு கடந்த வெறுப்பு உண்டாகிவிட்டது'' என்றான் சங்கரன். ''நான்சென்ஸ்! அப்படித்தான் இருக்கும் முதலிலே, பாபம்! நீ கலியாணம் செய்து கொள்வாய் என்று நம்பினார்கள். இப் போதுதானே விஷயம் தெரிந்தது. அதனால்தான் ஆத்திரம் அவர்களுக்கு. போகப்போக தணிந்துவிடும். நீ மட்டும் சற்று

RangaRakes tamilnavarasam

பிருவாக இருக்க வேண்டும் ஏதோ சோகமடைந்தவனைப் போல இருந்தால் அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள்'' என்றான் சதாசிவம். 'நண்பா! எனக்கு ஒரு பயமிருக்கிறது. வேறு யாராவது மலர்க்கொடியை மணம்புரிந்து கொண்டால் என்ன செய்வது. பிறகு நான் என்னாவது?' என்றான்.

''அதற்கெல்லாம் தக்க ஏற்பாடுகள் செய்கிறேன். எழுந்திரு! வெளியே போய் சற்று 'ஜாலியாக' இருப்போம், உன் மனமும் சாந்தியடையும். வா போவோம்!' என்றழைத்தான் சதாசிவம்.

''எங்கே போவது?''

''ஜீவா வீட்டுக்கு''

''ஜீவாவா, யாரது?''

''வந்து பார்! உன் மலர்க்கொடி, கிலர்க்கொடியை எல்லாம் தூக்கித் தூரப் போட்டு விடுவாள். மந்திரசாமித் தெருவு தாசி, ஜீவா தெரியாதோ உனக்கு.''

''சீச்சி! நான் வரமாட்டேன். யாராவது கண்டால் ஏதாவது சொல்வார்கள்.''

''சொன்னார்கள்! வா, போவோம்''—என்று வலிய, சங்கரனை அவன் தோழன் தன் கூத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

* * *

ஜீவா ஜடைவாரிக் கொண்டிருந்தாள். மேற்பூச்சு வேலைகள் இல்லை. அது மாலையிலே நடக்கும். இருந்த போதிலும் பரவாயில்லை. கண்ணுக்கு காட்சியாகத்தான் இருந்தாள். ஆனாலும் அதனை உணர்ந்தவர் அநேகர் என்பது, ஜீவாவின் கன்னங்களிலே பளபளப்பு குறைந்ததிலிருந்தே தெரிந்து கொள்ளக்கூடும். ''சங்கர்! இதோ பார், என் ஜீவாவை. மலர்க்கொடி, மலர்க்கொடி என்று அழுகிறாயே தம்பி, இதோ பாரப்பா பார்!''—என்றான் சதாசிவம். சங்கரனுக்கு கொஞ்சம் வெறுப்பாகத்தான் இருந்தது, என்னடா இது—இவ்வளவு பச்சையாகப் பேசுகிறானே

RangaRakes tamilnavarasam

என்று. ஒரு மாதின் எதிரிலே அவளைவிட மற்றொருத்தி அழகு என்று சொல்வதைப்போல் ஆபத்துண்டோ! சொல் அப்பா! யார் அழகு? என் ஜீவாவா மலர்க்கொடியா''— என்று மறுபடியும் கேட்டான் சதாசிவம்.

''உனக்கு ஜீவா அழகு—எனக்கு மலர்க்கொடி'' என்று சமரசமாகக் கூறினான் சங்கரன்.

''எந்த மலர்க்கொடியைப்பற்றிப் பேசுகிறீர்கள். அந்த நாடகக்காரி பெண்ணா!'' என்று ஜீவா கேட்டாள். 'ஆமாம்' என்றான் சதாசிவம்.

''அவள் அழகுதான்! டிராமாகாரிகள் அழகில்லாமல் இருப்பார்களா! அவர்களுடைய பார்டர் சேலையும், கர்ல் கூந்தலும், தளுக்கும் குலுக்கும், எங்களுக்கு எங்கிருந்து வரும்? நாங்கள் பரம்பரையாக பார்த்தசாரதி கோயிலுக்கு முத்திரை! ஏதோ ராமா, கோவிந்தா, கிருஷ்ணா, என்று காலங் கழிப்பது''என்று ஜீவா தன் பெருமையைப்பேசினாள். ''கேள் ஜீவா கதையை, அந்தக் கூத்தாடி சிறுக்கியை! கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம் இவர்! நான் மட்டும் இல்லா விட்டால், அந்த மங்கா மெதுவாக என் நண்பனை மாட்ட வைத்துவிட்டிருப்பாள். ஆசாமி தலைகால் தெரியாமல் ஆடினான்'' என்றான் சதாசிவம்.

சங்கரன் ''இதேது தொல்லையாகப் போச்சு! நான் தான் விட்டுவிட்டேனே அந்த எண்ணத்தை'' என்று கூறினான்.

''அது இல்லை, என்ன அவள் அவ்வளவு அழகு? அவளைக் கண்டு இவர் எப்படி சிக்கிக் கொண்டார்! இவரைப் பார்த்தால் ராஜாபோல இருக்கிறதே. அவள் என்ன ஏதோ சிகப்புத் தோலும், நாரும் நரம்புமாக இருக்கிறாள். அவ்வளவு அழகா அவள்'' என்று ஜீவா சங்கரனைக் கேட்டாள். 'என் கண்களுக்கு...'' என்று இழுத்தாற்போல் பதில் சொன்னான் சங்கரன்.

''ராஜா மெச்சினது ரம்பை'' என்றாள் ஜீவா. சம்பாஷணை வளர்ந்தது. கடைசியிலே ஜீவா மலர்க்கொடியைப் பற்றி சொல்லாத 'சொட்டு' இல்லை. ''அவள் கண், திருட்டுக் கண். கைகால்கள் நோயாளிக்கு இருப்பதைப்போல் இருகிறது. தலைமயிர் ஆயிரத்தெட்டு கோணல்!ரொம்ப கர்வம்; நடப்பது அசல் டிராமா நடை. சிரிப்பு, வெறும் சூது'' என்று ஜீவா அடுக்கடுக்காக அடுக்கினாள்.

சங்கரன் அவ்வளவையும் கேட்டுக்கொண்டே இருந்தான்.

ஒரு வாரத்துக்கு முன்பு மட்டும், வேறு யாரேனும் மலர்க்கொடியைப் பற்றி ஜீவா சொன்னதைப் போல ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் சங்கரன் துள்ளியிருப்பான். இப்போது அப்படியில்லை.

முன்பு மலர்க்கொடி காதலி; இப்போது டிராமாக்காரி. எனவே தன் எதிரிலேயே அவள் இழிவாகப் பேசப்பட்டும், காது கொடுத்துக் கேட்டுக் கொண்டும், இடையிடையே சிரித்துக் கொண்டும் இருந்தான் சங்கரன்.

* * *

அன்று ஆரம்பமான பொழுதுபோக்கு, அன்றோடு நின்றுவிடவில்லை; ஜீவா வீட்டுக்கு தினமும் இரு தோழரும் போக ஆரம்பித்தனர். அங்குதான் மாலை வேளைகளிலே ''டீ''. பல நாட்கள் அங்கு விருந்து. மேலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு சதாசிவம் வராவிட்டாலும் சங்கரன் போவது என்ற முறை வளர்ந்து முடிவிலே ஜீவாவே சங்கரனின் வைப்பாட்டியாகவும், சதாசிவம் சங்கரனின் விரோதியுமாகி விட்டான். பரீட்சையில் சங்கரன் தோற்றான். சதாசிவம் ஊர் பூராவும் சங்கரன்மீது பழி தூற்ற ஆரம்பித்து விட்டான். எங்கு பார்ப்பினும், சங்கரன் பேச்சுதான். 'இப்படியா இந்தப் பிள்ளை கெட்டுவிடவேண்டும். ஐயோ பாவம்! ஏதோ படித்தான், கொண்டான்; கடைசியில் ஜீவா வீட்டிலேயே குடிபுகுந்து விட்டானாமே'—என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

RangaRakes tamilnavarasam

மலர்க்கொடிக்கும் இந்தச் சேதி எட்டிற்று. மிக மனம் வருந்தினாள். என் செய்வாள் மங்கை. ஏங்கினாள் தன் காதலனுக்கு நேரிட்ட கதியை எண்ணி!

மலர்க்கொடியின் மனம் புண்ணாவது தெரிந்த மங்கம்மாள் சில காலம் இந்தியாவை விட்டு வெளிநாடு சென்று வருவது என்று தீர்மானித்தாள். சிலோனுக்குப் போக ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

புறப்படுவதற்கு முன்னால் மலர்க்கொடிக்கு எப்படியாவது சங்கரனைக் கண்டு பேசிவிட்டுப் போக வேண்டுமென்ற எண்ணம்.

ஜீவா வீட்டுக்கு ஆள் விட்டார்கள். சங்கரன், ''ஆகட்டும்; நாளைக்கு வந்து பார்க்கிறேன்'' என்று கூறி முடிப்பதற்குள், ''அவர் அங்கே வரமாட்டார். ஏன் அந்த சிறுக்கி தான் இங்கு வருவதுதானே! வந்தால் அவள் கௌரவம் குறைந்து விடுமா, என்ன?'' என்றாள் ஜீவா.

வந்த வேலையாளுக்கு சங்கரன் ஒரு காலத்தில் மலர்க்கொடியிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தான் என்பது தெரியும். எனவே அவன் ஜீவாவின் துடுக்கான பேச்சுக்கு சங்கரன் என்ன பதில் கூறுவானோ என்று எதிர்பார்த்தபடி இருந்தான். ஜீவா தயாரித்த கிராமபோன் பிளேட்டை சங்கரன் பாடினான். ''ஆமாம், அவ்வளவு அக்கரை இருந்தால் அவளை இங்கு வரச் சொல்'' என்று கூறினான்.

## புண் தீர்த்த பூவை

மலர்க்கொடியும் மங்கம்மாளும் சிலோனுக்குச் சென்று பல மாதங்களாகிவிட்டன. சங்கரன் அவர்களை மறந்தும் விட்டான். ஜீவாவிடம் ஜீவனைக் கொடுத்ததுடன் நிற்காது மேலும் பல தொல்லைகளைத் தானாக வரவழைத்துக் கொண்டான். பெண்களிடம் அவனுக்கு அதுவரை இருந்து

RangaRakes tamilnavarasam

வந்த கூச்சம் பறந்துவிட்டது. ஜீவாவுக்கு தெரிந்த பெண் களிடமெல்லாம் வெகு தாராளமாகப் பழக ஆரம்பித்தான். அது ஜீவாவுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். தாசி என்ற போதிலும் அவள் ஒரு பெண்ணல்லவா! அதிலும் இவன்மீது அவளுக்கு கொஞ்சம் இஷ்டமுங்கூட. சொத்துப்போய், பரீட்சைபோய், வேலையின்றி கிடந்த சங்கரனின் வீண் அதி காரத்தைக்கூட ஜீவா பொறுத்துக் கொண்டுதான் இருந் தாள்.

''இன்னும் ஒரு மாதத்திலே வேலை வரப்போகிறது. அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டும். என்ன செய்வது ஜீவா. உன்னாலே நான் கெட்டேன். என் னாலே நீ கெட்டாய்'' என்பான் சங்கரன்.

''எனக்கென்னமோ உங்கள் போக்கே பிடிக்கவில்லை. நல்ல குடும்பத்திலே பிறந்து, செல்வமாய் வளர்ந்து, படித்து, கடைசியில் இப்படிக் கெட்டுவிட்டீர்கள். என்னமோ என் மீது ஆசை வைத்து வந்தீர்கள். அத்தோடு நின்றீர்களா? ஏதோ வேலை பார்த்து, சம்பாதித்து எனக்குக் கொடுத்து, நாம் குடியும் குடித்தனமுமாக இருக்கக் கூடாதா? போன மாதத்திலே 'செயின்' மார்வாடி கடைக்குப் போச்சு. இந்த மாதம் இந்த வளையல் போகப் போகிறது''—என்று, அழுதபடி சொன்னாள் ஜீவா.

''அழாதே, ஜீவா! நான் நிச்சயம் அந்த நகைகளை எல்லாம் மீட்டுக் கொடுக்கிறேன். அடுத்த மாதம் வேலை நிச்சயம் கிடைக்குமாம். எதிர்வீட்டில் இருக்கிறாரே, எத்திராஜ் நாயுடு அவர் சொன்னார்'' என்றான் சங்கரன்.

மறுநாள் ஜீவா, எதிர்வீட்டு எத்திராஜலு நாயுடுவை அழைத்துக்கேட்டாள். அவர் ஒரு சீமைச்சாராயக் கம்பெனி யிலே வேலை பார்த்துக் கொடுப்பதாகச் சொன்னார். ஜீவா தனது கஷ்டங்களை அவரிடம் கூறி, ''எனக்கு அவரைவிட் டால் கதி இல்லை. அவரும் உற்றார் உறவினரை எல்லாம் விட்டு என்னிடமே வந்துவிட்டார். ஏதோ நீங்கள் இந்த

RangaRakes tamilnavarasam

உதவி செய்தால் மெத்த புண்ணியமுண்டு'' என்று வேண்டிக் கொண்டாள். ''ஆகட்டும்'' என்று கூறிவிட்டுப் போனார் அவர். எதிராஜலு நாயுடுவை ஜீவா கூப்பிட்டுப் பேசிய சேதி சங்கரனுக்குத் தெரிந்தது. அவ்வளவுதான். அவனுக்கு கோபம் பொங்கிவிட்டது. குதித்தான். கோபித்தான். 'காட்டி விட்டாயே ஜாதி புத்தியை' என்றான். 'ஏண்டி ஜீவா! மெள்ள எதிர் வீட்டு நாயுடுவை இழுக்கப் பார்க்கிறாயோ? ஜாக்ரதை. அப்படி ஏதாவது நடந்தால், கொலை நடக்கும் இங்கே'' என்று கூறினான் சங்கரன். 'உனக்காகத் தானே நான் அவரைக் கூப்பிட்டுப் பேசினேன்'' என்று வாதாடினாள் ஜீவா.

''தெரியும், உன் சால் ஜாப்பு! எனக்காக வாதாடினாளாம். புது மாப்பிள்ளை தேடுகிறாயோ....?''

''இதென்ன சனியனா போச்சே, நான் ஏன் தேடுகிறேன்.?''

''நீலி! அப்படியே உருகுகிறாள். என்னைக் கெடுத்தது மன்றி....''

''யார் யாரைக் கெடுத்தது? ஏன் சும்மா பேசுகிறீர்கள். உன்னாலேதான் ஊரார் சொன்ன சொல்லையும் கேளாது, மேலே இருந்த நகைகளை விற்று உன் இழவுக்குப் போட்டேன்.''

''ராஸ்கல்! என்னடி ஏதேதோ பேசுகிறாய், உதைப்பேன்.''

''சும்மா நிறுத்து! உதைக்க மாட்டீர்களா என்ன.''

இந்த சம்பாஷணையின் காரம் அதிகமாயிற்று. சங்கரன் ஜீவாவை அடிக்கலானான். அவள் ஐயோவென அலறினாள். தெருவில் போவோர் வருவோர் நின்றனர். கும்பல் கூடி விட்டது. அக்கம்பக்கத்து வீட்டார் வந்து சமாதானம் சொன்னார்கள். அன்றுதான் ஒரு விஷயம் விளங்கிற்று ஜீவாவுக்கு. அதாவது சங்கரன் குடிக்கிறான் என்பது.

* * *

RangaRakes tamilnavarasam

கெட ஆரம்பித்து விட்டால் அதற்கு ஒரு எல்லையுண்டோ! ஜீவாவின் மனம் கொதிக்கும்படியும், சங்கரன் நடந்து கொள்ள ஆரம்பித்தான். நாயுடு சொன்னபடி வேலை பார்த்துக் கொடுத்தார். வந்த சம்பளத்திலே பாதி சாராயக் கடைக்குச் சென்றது. பாதி பார்வதி வீட்டுக்குப் போயிற்று பார்வதி ஜீவாவுக்குத் தெரிந்தவள். எவ்வளவோ வற்புறுத்திக் கூறினாள், சங்கரனைத் தன் வீட்டுக்கு வர வேண்டாமென்று, கேட்கவில்லை சங்கரன். உருட்டி மிரட்டி அவளையும் சிநேகம் பிடித்துக் கொண்டான். ஜீவா அந்த சமயத்தில் கர்ப்பம்! குழந்தை பிறந்து இரண்டொருமாதம் ஆவதற்குள் சங்கரனை வேலையினின்றும் நீக்கி விட்டார்கள். அதுமட்டுமல்ல, கணக்கிலே தகராறு என வழக்கு தொடுத்து விட்டார்கள். போலீசார் தேடிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஜீவாவுக்குக் கடுமையான ஜுரம். வீடு சோதனை போடப்பட்டது. சங்கரனை ஒளித்து வைத்துக் கொண்டே ஜீவா போலீசை ஏய்க்கிறாள் என எண்ணிப் போலீசார் அவளைக் கண்டித்துப் பேசினார்கள். தூற்றினார்கள். இவ்வளவு தொல்லைகளுக்கிடையே வறுமை அவளை வாட்டிவிட்டது. சங்கரனோ ஊரைவிட்டு ஓடி விட்டான். ஜுரமோ குறையவில்லை. குழந்தையோ கோடி சூரியப் பிரகாசமாக இருந்தது. அதைக் காணக்காண, ''ஐயோ! எப்படி இதைவிட்டு நான் பிரிவேன். என் கண்ணே செல்வமே! கட்டிக் கரும்பே—உன்னை விட்டுப் போவதா?'' என்று புலம்பினாள் ஜீவா. ஜுரம் போக வைத்தியவசதி செய்துகொள்ள மிச்சம்மீதி இருந்த சொத்தும் போய்விட்டது. கடைசியில் பிழைப்பது கஷ்டம் என டாக்டர் கூறிவிட்டார். ஜீவாவுக்கு என்ன செய்வதெனத் தோன்றவில்லை,



RangaRakes tamilnavarasam

பார்வதிக்கு ஆள் விடுத்தாள். பார்வதி வந்ததும் குழந்தையை அவள் வசம் ஒப்புவித்தாள். இரண்டொரு நாளிலே ஜீவா இறந்தாள் பாபம்!

* * *

இந்த விஷயமெல்லாம் கேள்விப்பட்ட சங்கரன் உள்ளபடி வருத்தப்பட்டான். ஆனால் தலையை வெளியே காட்டுவதற்கில்லை. கிராமத்திலே தனது மாமன் வீட்டில் ஒளிந்து கொண்டு, வழக்கை சமரசத்துக்குக் கொண்டுவர முயற்சித்தான். அது முடிந்தபிறகுதான் வெளியே வர முடியும்.

சங்கரனின் மாமன், ரிடையர்டு பென்ஷனர். அவர் வழக்கை ஒரு சமரச முடிவுக்குக் கொண்டு வந்தார். கம்பெனிக்காரருக்குப் பணம் கொடுத்து பைசல் செய்து விட்டார். சங்கரன் 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்றபடி மாமன் வீட்டிலே இருந்து வந்தான். "இனியாவது புத்தியாகப் பிழை. எனக்கும் வேறே பிள்ளைக்குட்டி கிடையாது. என் சொத்து உனக்குத்தானே சொந்தம்" என்று கூறினார். சங்கரனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக புத்தி வந்தது. மாதத்துக்கொருமுறை பார்வதி வீடு சென்று குழந்தையை பார்த்துவிட்டு வருவான். சங்கரனின் மாமன் அதற்காக ஒன்றும் குறை சொல்வதில்லை. இவ்வளவாவது நல்லபடி திரும்பினானே என்ற சந்தோஷம் அவருக்கு.

மலர்க்கொடி சிலோனில் 'நர்சு' வேலைக்குச் சென்றுவிட்டாள். சங்கரன் தன்னைக் கைவிட்டதால் மனம் உடைந்தது மாறவே இல்லை. உயிரையே கொடுத்து விடுவதாகச் சொன்ன சங்கரனே தன்னைக் கைவிட்டுவிட்ட போது, வேறு யாரைத்தான் நம்புவது அவள். மலர்க்கொடி 'நர்சு' வேலைக்காகப் பயிற்சிபெற தாயிடம் அனுமதி கேட்டாள். தாயும் கொடுத்தாள், சில ஆண்டுகள் சிலோன் வைத்தியசாலையொன்றில் அவள் நர்சாக இருந்தாள். இடையே சங்கரன் சென்னைக்கே திரும்பவும் சென்று ஒரு பிரபல மருந்து கம்பெனியில் சிளார்க்காக வேலைக்கு அமர்ந்தான். அந்தச் சமயத்தில்தான் அவனுக்கு, சிலோன் வைத்தியசாலையில், மலர்க்

கொடி நர்சாக இருப்பது தெரிய வந்தது. ஏதோ சில மருந்துகள் தேவை என சிலோன் வைத்தியசாலைக்காக மலர்க்கொடி எழுதிய கடிதமொன்று சங்கரனுக்குச் சிக்கிற்று. அதைக் கண்டதும் அவனுக்கு முன்னாள் நினைவுகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. தன்னைத்தானே கெடுத்துக் கொண்டதை எண்ணி வருந்தினான். சிலோன் ''நர்சு'' தான் காதலித்த மலர்க்கொடிதான் என்பதைக் தெரிந்து கொண்டான். அவனுக்குப் பிறகு எப்படியேனும் மலர்க்கொடியைக் காணவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. சிலோனுக்குச் செல்வதென தீர்மானித்தான். நேரே, தன் மாமன் வீடு வந்தான். தன் மனதில் ஒன்றைக்கூட ஒளிக்காது கூறினான்.

''நாம் கொங்கு வேளாளக் குடியில் பிறந்து நாடகக்காரியை மணப்பதா என்று எண்ணத்திலே என் இன்பத்தை விடுத்தேன்'' என்றான் சங்கரன்.

''நாடகக்காரியை மணம் செய்து கொண்டால் நாடு கேலி செய்யும் என்ற எண்ணினாயே, பிறகு நடந்த சம்பவங்களைப்பற்றி அவ்விதம் எண்ணினாயோ?'' என்று கேட்டார் மாமன்.

''இவைகள் வெளிக்கு வராது என்று எண்ணினேன். அப்படி வரினும், அதைப் பற்றி அவ்வளவு கேவலமாகக் கருதமாட்டார்கள். கலியாணம் செய்து கொண்டால்தான் ஜாதி கெட்டவன் எனச் சொல்லுவார்கள் என்று எண்ணினேன். அதுதான் நான் செய்த தவறு'' என்றான் சங்கரன்.

''சிலோனுக்கு நீ போகவேண்டாம். மலர்க்கொடியும் மங்கம்மாளும் இங்கு வரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். மலர்க்கொடி, வேறு யாரோ என்று எண்ணவேண்டாம். அவள் என் மகள்தான். மங்கம்மாளை நான் காதலித்து அவளோடு வாழ்ந்து வந்தேன். ஆனால் உன்னைப் போலத் தான் நானும் ஊருக்கஞ்சி விஷயத்தை வெகு இரகசியமாக வைத்துக் கொண்டிருந்தேன். மங்கா, நாடகத்திலே சென்று

RangaRakes tamilnavarasam

விட்டாள். நான் அவளை விட்டுப் பிரிந்தேன். ஆனால் எங்களிருவருக்கும் மனக் கசப்பு கிடையாது.

என் பொருட்டு மங்கா எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள். நான் மணம் செய்துகொள்ள மறுத்த போது மங்காதான், என்னை வற்புறுத்தினாள். நானும் அவளும் பிரிந்தோம். அப்போது மலர்க்கொடி ஐந்து வயது குழந்தை. பிறகு அவர்களைப்பற்றி நான் அக்கறை எடுத்துக் கொள்ளாதிருந்தேன். நான் ''சிங்களச் சீமாட்டி'' என்று எழுதிய நாடகத்திலே எங்கள் இருவரின் காதல் சம்பவத்தை எழுதியிருந்தேன். அதனை நடத்தி மங்கா பெரும் பெயரெடுத்தாள்'' என்று சங்கரனின் மாமன் தன் சுயசரிதையைச் சொன்னபோது சங்கரன் ஆச்சரியப்பட்டான்.

'ஆனால் மலர்க்கொடிக்கு இந்நேரம் மணம்..' என்று கேட்டான் சங்கரன்.

''இல்லை! மணம் ஆகவில்லை. நான் அதைப்பற்றி விசாரித்து வைத்துள்ளேன். அது மட்டுமல்ல சங்கரா! உன் விஷயம் பூராவும் எனக்குத் தெரிந்ததும், மலர்க்கொடிக்கு அவைகளை விளக்கி எழுதிவிட்டேன். அடுத்த கப்பலில் சிங்களச் சீமாட்டியும் அவளுடைய தங்கப்பதுமையும் வந்து சேருவர்'' என்றார்.

அதைப்போலவே தாயும் மகளும் வந்தனர். மலர்க்கொடி ஒரே புன்சிரிப்பால் சங்கரனை மன்னித்துவிட்டாள். மணம், வெகு எளிய முறையிலே நடந்தது. பார்வதியிடம் வளர்ந்து வந்த குழந்தை குமுதா, சங்கரன் வீட்டில் சேர்ப்பிக்கப்பட்டது. எல்லோரும் ஒரே குடும்பமாக இருந்தனர். ஊரார் ஏதேதோ பேசினார்கள். ஆனால் அந்தக் குடும்பத்தின் ஆனந்தத்தை ஊரார் என்ன அறிவார்கள். அளவு கடந்த ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர் அவர்கள்.

'பரதன்' என்னும் புனைபெயரில், குடியரசு இதழில், 1939 ஜூலையில் எழுதப்பட்டது.

—முற்றும்—

RangaRakes tamilnavarasam